சங்கமம்

பொன். சௌரிராசன்

சங்கமம்

பொன். சௌரிராசன்

தேனகம் வெளியீடு:

சந்திரா நிலையம்

311, நீகரிகா அபார்ட்மெண்ட்ஸ்,
காயத்ரி நகர்,
திருப்பதி—517502.

(C) Rights Reserved with Publisher

First Edition — December 1995.

Title	:	SANGAMAM
Author	:	Dr. Pon. SOURIRAJAN
Subject	:	Novel in Tamil
Pages	:	132
Paper	:	Sesashayee
Types	:	10 Point
Binding	:	Duplex Board
Price	:	Rs. 25

Sales Right :

1. Thenagam Publishers
   311, NEEGARIKA APARTMENTS
   Gayatri Nagar, Tirupathi-517502
   Phone (08574) 23600

2. Paari Nilayam
   No. 184, Prakasam Road,
   Madras-600 001.

Printers : Chitra Printo Graphy, Madras-14.

என்னுரை

நாவில் தமிழ் மணக்கும் நன்னாகைக் கல்வி, சிக்கல் கலை உணர்வு, காந்திக் குடில் பண்பாடு; மு. வ. தொடர்பு இவை என்னைப் படைப்பிலக்கியத்தில் ஈடுபடுத்தின. அறுபதுகளில் மெல்ல முளையிட்டுக் கப்பும் கிளையுமாய்த் தோன்றிய அந்தக் கலைச் செடி, எழுபது எண்பதுகளில் ஆராய்ச்சி என்னும் அனலில் வாடி வதங்கிவிட்டது.

சில மாதங்களுக்கு முன் வேணுகோபால் என்னும் என் மாணவ இளைஞர் ஒருவர் என் முந்தைய படைப்பிலக்கியங் களைக் குறிப்பிட்டுப் பாராட்டினார், அந்தப் பாராட்டு நீர்த்திவலைகளில் மீண்டும் துளிர்க்கத் தொடங்கியது அந்தக் கலைச் செடி. அதன் முதல் துளிர், இந்தச் **சங்கமம்.** வாடிய பயிர் மீண்டும் வளரக் காரணமான அந்த இளைஞருக்கு என் நன்றி; என் வாழ்த்துக்கள்!

கலை, வாழ்வுக்காக என்பர்; கலை, கலைக் காகவே என்பர்; உண்மையில் மலரும் மணமும்போல்—கனியும் சுவையும்போல்—அவ்விரு பயனும் கலைஞன் படைப்பில் இயல்பாகவே இயைந்து விளங்கக் காணலாம்.

இன்றையச் சிக்கல் அவையல்ல. கலை வாழ்வுக்காகவும் இன்றி, கலை கலைக்காகவும் இன்றி, கலையெல்லாம் பாலியலுக்காகவே — பணத்திற்காகவே என்று தடம் மாறிப் போய்க்கொண்டுள்ள இக்காலத்தில் சிலர் தங்கள் கலைத்

திறனை மக்கள் நல்வாழ்வுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று எழுதி வருகின்றனர்; அந்தச் சிலரை நானும் பின்பற்ற விழைகிறேன். அந்த விழைவில் எழுதுவதற்காக உறக்க மின்றிக் கழிந்த இரவுகள் பல. இதனை அச்சிட அலைந்த அலைச்சல்கள் பல.

அந்த அலைச்சல்களில் என்னோடு பங்கு கொண்ட நண்பர் டாக்டர் செ. உலகநாதன் அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இளைஞர்கள் வளமான உடலோடும் நலமான உளத்தோடும் வாழ வகை செய்வதனையே பண்பாடு என்கிறோம். இந்தப் பண்பாட்டைப் போற்றுவதனையே தம் படைப்பிலக்கியப் பணியாகக் கொண்டுள்ள திருவளர் அரசு மணிமேகலை அவர்கள் அன்போடு இதற்கோர் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். அவர்க்குக் கைம்மாறு ஒன்றும் காணவல்லன் அல்லன்.

தேனகப் பதிப்பகத்தார்க்கும், பாரி நிலையத்தார்க்கும் என் நன்றி உரியன.

பொன். சௌரிராசன்

அணிந்துரை

பேராசிரியர்: **அரசு மணிமேகலை,**
எழுத்தாளர், பேச்சாளர்.
சென்னை-2.

அன்புச் சகோதரர் டாக்டர். பொன். சௌரிராசன் அவர்கள் எழுதியிருக்கிற **சங்கமம்** என்கிற இந்த நாவல் கற்பனை நிகழ்ச்சிகளின் தொகுப்பன்று; வாழ்க்கையை அப்படியே அச்சு அசலாகப் பிரதிபலிக்கின்ற உண்மைச் சம்பவங்களின் ஊர்வலம் என்று சொல்லலாம்.

ஏன்? ஆசிரியரின் சொந்த வாழ்க்கையே ஓரளவுக்குச் சொல்லப்படுகிறதோ என்று கூட நம்மை எண்ண வைக்கிறது...

காந்தியக் கல்வி முறையே மாணவர்க்கு ஏற்றது; ஒரு கைத்தொழிலையும் கற்க வாய்ப்பிருப்பதால், தன்னம்பிக்கையுடன் மாணவர்கள் கல்வி முடித்து வெளியுலகில் கால் வைக்கிறார்கள் என்று விரிவாகவே ஆசிரியர் கூறுகிறார்.

உள்ளத்தினுள் காதலைப் பொத்தி வைத்து ஊமையாகவே நிற்கிற கார்மேகம், தற்கால இளைஞர்களைப் பற்றியும், அரசியல் பற்றியும் நினைக்கும்போது ஊமையாக இல்லை. சண்டமாருதமாகப் பொங்கி வெடிக்கிறான். கார்மேகம்தான் கதைத் தலைவன்...

''நல்லதோர் வீணைசெய்தே—அதை
நலங்கெடப் புழுதியில் எறிவ துண்டோ?''

என்று தொடங்குகிற வரிகள் நாடக அங்கதமாக அமைந்து, யார், அந்த வீணை என்கிற கேள்விக் குறியை நம் மனத்தில் எழுப்புகின்றன.

கார்மேகத்தின் காதல் மெல்லிய ஊதுவத்திப் புகை யாய்ப் புதினம் நெடுகக் கமழ்கிறது. கைக்கிளைக் காதலாக அது அமைகிறது...

ஆனால், கார்மேகத்தின் புறவாழ்க்கை திட்டவட்டமான கருத்துகளின் பிரகடனமாக, வீரநடை போடுகிறது; வாழ்க்கை நெறி விளக்கமாக இளைஞர்களைப் பின்பற்றி நடக்கத் தூண்டுகிறது.

ஓரிடத்தில் அற்புதமாகச் சொல்கிறார். ''தனித்தனி மனிதர்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு, வெறி கொண்டாடுவதே இந்தக் கால அரசியல் நெறியாக உள்ளது. கற்பவரை விடக் கல்லாதவர், நல்லவர்களை விடப் பொல்லா தவர் அரசியலில் வெற்றியும், வீறாப்பும் பெறுவதைக் கண்டு கற்ற இளைஞர் உலகம் தடுமாறுகிறது. நக்சலைட் குழு இவர்களைத் தன்பால் இழுத்துக் கொள்கிறது. அல்லது இந்த இளைஞர்கள் போதை மருந்துக்கு ஆளாகின்றனர். இவர்கள்தான் இன்றைய இந்தியா. இவர்களைக் காத்தால் தான் இந்தியாவைக் காக்க முடியும். இவர்கள் வளர்ந்தால் தான் இந்தியா வளரும்; வாழும். என்கிறாரே! சொல்லுக்குச் சொல் சொக்கத் தங்கத்தையே பரிசளிக்க வேண்டும்...

கார்மேகம் மனத்தினைக் கொள்ளை கொண்ட மலர் அருளை விரும்ப, அருளோ வார்தா ஆசிரமத்திற்குப் போய் விடுகிறான். தாயின் வற்புறுத்தலால் ஒரு போலீசு கமிஷனரை மலர் மணக்கிறாள். ஆனால் அவன் கொடுமை தாளாது பிரிந்து செல்கிறாள்.

கார்மேகமோ அவளை மறக்கவியலாது தவிக்கிறான். இதுவரை புதின இலக்கியம்... இதற்கு மேல் புதினம் பயண இலக்கியத்தின் சாயலை மேற் கொள்கிறது. வடஇந்தியப் பயணத்தைப் பற்றிய விவரங்கள்...

மலையடிவாரத்தில் மலர் வள்ளுவர் குடில் என்கிற பெயரில் முதியோர் இல்லம் நடத்துகிறாள். இப்போது புதினம் நனவோடைப் புதினமாய் மலர் தன் வாழ்க்கையை

மீண்டும் நினைத்துப் பார்த்து அது குறித்து, கார்மேகத்திடம் கூறுவதாய் நடை பயில்கிறது.

கார்மேகத்திற்குத் தன்னையும், மலரையும், அருளையும் நினைக்க நினைக்க, திரிவேணி சங்கமம்தான் மனக் கண்ணில் தோன்றுகிறது.

''பாரதியார் பல்கலைச் சிறுவர் இல்லம், உருவாக்கி ஒரு சில ஆண்டுகளுக்குப்பின், இமயச் சாரலுக்கு, வள்ளுவர் குடிலுக்கு வருகிறேன். மலர் மாதாவின் பணிகளுக்கு உதவியாக இருக்கிறேன்'' என்று கார்மேகம் கூற, ''அதுவரை காத்திருக்கிறேன்'' என்பதாக மலர் பார்வை அமைகிறது...

புதினம் இப்படி முடிகிறது. ஆனால், புதினம் நெடுக, ஆசிரியர் அள்ளித் தெளிக்கும் ஆணிமுத்துக்கள் நம் நினைவிலேயே அல்லவா நின்று கொண்டிருக்கின்றன?

குழந்தைகளுக்குப் பாடச்சுமை கூடாது என்கிறாரே! அதைச் சொல்வதா? புலம் பெயர்ந்து வாழ்பவர்கள் தமிழர் பிரதிநிதிகள்; தமிழின் பிரதிநிதிகள். அதனால் எந்த அவச் சொல்லும் வாராவண்ணம் எச்சரிக்கையாக வாழ வேண்டும் என்கிறாரே! அந்தக் கருத்தைச் சொல்வதா?

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் பிற இனத்தாருடன் திருமணத் தொடர்பு வைத்துக் கொள்வதில்லையே என்கிறாரே! அதைச் சொல்வதா?

தேசிய அளவில் இரண்டே கட்சிகள், மாநில அளவிலும் இரண்டே கட்சிகள்தான் இருக்க வேண்டும் என்கிறாரே! அதைச் சொல்வதா?

ஆசான் மு.வ. அவர்களைக் கதை மாந்தராக மாற்றி அவரை, அவர் கொள்கையை, அவர் அறிவுரையை நெடுக நினைந்து நினைந்து உருகி நிற்கிறார் ஆசிரியர். அவர் செயல் சடையப்ப வள்ளலைப் போற்றிய கம்பநாட்டாழ்வார் செயல் போன்று அமைந்துள்ளது.

மிகச் சிறப்பான விதத்தில் ஆசிரியர் குருகாணிக்கை செலுத்தியிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். இத்

தகைய அன்புள்ளம் ஆசானை அத்தானாகவே கருதும் நெகிழ்ச்சியுள்ளம் எத்தனைப்பேருக்கு வாய்க்கும்?

அதனால்தான் போலும், அவரைப் போன்ற நடையும் கைவரப் பெற்றிருக்கிறது.

இன்றைய இளைஞர் உலகம் எப்படியும் வாழலாம் என்று எண்ணாமல், இப்படித்தான் வாழவேண்டும் என்று ஓர் இலக்கு நிறுத்தி வாழ, வழி சொல்கிறார். எத்தனை எத்தனை அறிவுரைகள்... அவர் ஆழ்மனத்து ஆதங்கங்கள் நன்றாகவே புலப்படுகின்றன.

வரலாற்றுப் புதினம், அறிவியல் புதினம் என்பார்கள் அல்லவா? டாக்டர் பொன். சௌரிராசன் அவர்களின் ''சங்கமம்'' உண்மையில் அறிவுப் புதினம்... வாழ்க்கைப் புதினம்...

இன்றைய இளைஞர் உலகம் படித்தால், காந்தியக்கல்வி நெறியை அறிகிற ஆர்வம் பிறக்கும்; தொண்டு செய்வோம் என்கிற எண்ணம் பிறக்கும்.

சரி... கதைச் சுருக்கம் என்ன என்று கேட்டால் என்ன சொல்வது? பாரதியாரின் அந்தப் பாடல்வரிகள்தாம் கதைச் சுருக்கம்...

நல்லதோர் வீணை-மலர்- நலம்கெடப் புழுதியில் எறியப் பட்ட வீணை- மலர்...

கதையின் முற்பகுதியை இவ்வரிகள் சுட்டுகின்றன. ''மாநிலம் பயனுற வாழ்வதற்கே, அவள் வல்லமை பெறு கிறாள். பாரதியார் வரிகளே கதையின் பின்பகுதியைக் கூறி நிறைவு செய்கின்றன...

உள்ளத்துக்கும் ஒரு நிறைவு ஏற்படுகிறது. சங்கமம் புதின இலக்கியம் மட்டுமல்ல; இலக்கியமாகும் புதினமும் கூட...

சங்கமம்

நல்லதோர் வீணை செய்தே-அதை
நலங்கெடப் புழுதியில் எறிவ துண்டோ
சொல்லடி சிவசக்தி-என்னைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ-இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே

என்ற பாரதி பாடலை நினைந்தவனாய்ப் பாயை விரித்துப் படுத்தேன்.

''கார்மேகம்! தம்பி கார்மேகம்'' என்று என்னை அழைக்கும் ஒலி கேட்டது. எழுந்தேன். ஒலி வந்த சன்னல் அருகே சென்று பார்த்தேன். இளமுருகு அண்ணன் நின்று கொண்டிருந்தார். கைகாட்டி என்னை வெளியில் வருமாறு அழைத்தார்.

வரிசை வரிசையாகப் படுத்துக் கொண்டிருந்த மாணவர்களைக் கடந்து வராந்தாவுக்கு வெளியே வந்தேன். அங்கே காத்துக்கொண்டிருந்த அண்ணன் என்னைக் கொடிமரத்தருகே தனியே அழைத்துச் சென்றார்.

''தம்பி ஓர் உதவி. திடீரென்று புதிய ஆசிரியப் பயிற்சிப் பிரிவு ஒன்று எற்படுத்த நிர்வாகி இன்று இரவு காரில் தன்னுடன் சென்னைக்கு வருமாறு இப்போது தொலைபேசியில் கூறினார். இன்று இரவே போட் மெயிலில் மதுரைக்குப் போக மலருக்குப் பயணச் சீட்டுப் பதிவு செய்து

விட்டேன். சிதம்பரம் நிலையம் வரை அவளுக்குத் துணை போக வேண்டும். நான் போக முடியாத நிலையில் இருக்கிறேன். நீங்கள் போக வேண்டும். வண்டிக்கார முருகனிடம் சொல்லிவிட்டேன். இரவு 12 மணிக்கு வீட்டுக்கு வந்து விடுவான். நீங்களும் வந்து விடுங்கள்'' என்று வேண்டினார்.

''சரி அண்ணா!''

''தம்பி! குளிராக இருக்கும். அடிக்கடி மழை வேறு தூறுகிறது. எதற்கும் அண்ணியிடம் வீட்டில் கேட்டு ஒரு போர்வை எடுத்துக் கொள்ளுங்கள். நானும் சொல்லிவிட்டுச் செல்கிறேன்''— என்று ஆசிரியர் இளமுருகு சென்றார்.

வானத்தைப் பார்த்தேன். மப்பும் மந்தாரமுமாக இருந்தது. கீழ்த் திசையில் தென்னந் தோப்புக்குப் பின்னே நிலா மெல்ல உதயமாகிக் கொண்டிருந்தது. மூன்று நாட்களுக்கு முன் முழு வெண்ணிலவு ஆறு மணிக்கெல்லாம் அங்கு எழுந்தபோது காந்திக் குடிலில் இசைபாடி, கூத்திட்டு மகிழ்ந்தது நினைவுக்கு வந்தது. அப்போது அந்தப் பெண் இளமுருகு அண்ணனின் அண்ணன் மகள் மலர்,

'துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா!

என்னும் பாவேந்தர் பாரதிதாசனாரின் பாடலை அந்த அந்திமாலைப் பொழுதில் தேஷ் பண்ணில் பாடியது இன்னும் அங்கே சுழன்று கொண்டிருப்பது போல் இருந்தது. தென்றல் காற்றில் அசையும் செவ்வல்லி இதழ்போல், அவள் பாடும்போது அவள் இதழ்கள் நெகிழ்ந்து நெகிழ்ந்து அழகோடு பொலிந்த காட்சி கண்முன் வந்து நின்றது.

'அறம் இஃதென்றும் மறம் இஃதென்றும் அறிகிலாத போது
இறைவனாரின் திருக்குறளிலே ஒருசொல் இயம்பிக் காட்ட
மாட்டாயா'

என்னும் பாடல் தொடுப்பை அவள் எடுத்துப் பாடிய போது சந்தன வண்ணத் தொண்டைக் குழி மேலும் கீழும் இறங்கி

ஏறி இசை எழுப்பியது இனிமையாக இருந்தது. 'மனம்' ஏதோதோ கற்பனையில் வானத்தில் திரிந்து கொண் டிருந்தது.

''இயம்பிக் காட்ட மாட்டாயா! காட்ட மாட்டாயா! மாட்டாயா!'' என்று அவள் ஆலாபனை செய்ததில் அலை அலையாய் எழுந்து பரவிய இசையில் என் மனம் மிதந்து சென்று கொண்டிருந்தது. இசை நின்றதும் திடீரென்று தடுமாறிக் கீழே விழுந்துவிட்டது போல் உணர்ந்ததையும் சட்டைப் பையில் இருந்த மு.வ.வின் கையடக்கத் திருக்குறளை எடுத்துப் 'பண் என்னாம் பாடற்கு இயை பின்றேல்' என்ற வள்ளுவனாரின் இசை அனுபவத்தை எண்ணி மகிழ்ந்ததையும் மீண்டும் நினைத்துக் கொண்டேன்.

'மலர்'—மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அறங் காவல் குழுத் தலைவர் நீலகண்டனாரின் ஒரே மகள்; அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியம் பயில்கிறாள். இரண்டு வாரக் குளிர்கால விடுமுறையில் மதுரைக்குப் போகும் முன் தன் சிற்றப்பா ஆதார பயிற்சிக் கல்வி ஆசிரியர் இளமுருகு வீட்டில் ஓரிரு நாள் தங்கிப் போக இங்குக் கீழ மூங்கிலடிக் காந்திக் குடிலுக்கு வந்தாள். அவள் வந்த அன்று பௌர்ணமி—மாதந்தோறும் நிகழும் வெண்ணிலவு விழா. பல்கலைக்கழக இசைக் கல்லூரியில் நாள்தோறும் மாலையில் சிறப்பாக இசை பயில்வதால் அவளைப் பாடுமாறு அன்று இளமுருகு கூறினார். அவளும் பாடினாள்.

பொருள் உணர்ந்து, பாவின் சந்தத்திற்கு ஏற்ப இசையைக் குழைத்து குழைத்து அவள் பாடியது இன்னும் என் செவியில் ரீங்காரம் இட்டுக்கொண்டிருக்கிறது. நினைக்க நினைக்க அலை அலையாக நெஞ்சில் அந்த இசை அனுப வம் தொடர்ந்துகொண்டே இருந்தது. மழைத்தூறல் சில விழுந்தன. நினைவுக்கு வந்தேன். சுற்றும் முற்றும் பார்த் தேன். அண்ணன் போய்விட்டிருந்தார். நிலா கருமேகத்தில்

மறைந்து எங்கும் இருண்டிருந்தது. உடனே உள்ளே வந்து படுக்கையில் அமர்ந்தேன். தலைமாட்டில் இருந்த அலாரக் கெடிகாரத்தை முடுக்கி 12 மணிக்கு 'எழுப்பொலி' வைத்து விட்டுப் படுத்தேன்.

என் மனவானத்தின் மலரின் முகம் தவழ்ந்து கொண்டிருந்தது. என்ன இனிய பெயர். எவ்வளவு பொருத்தமான பெயர். புறஇதழ்கள்போல் கரிய இமை சூழ்ந்த கண்களும் மலர். திரண்ட சந்தனச் சாந்து போன்ற கன்னங்களும் மலர். குவிந்து குவிந்து அசையும் அவள் உதடுகளும் காற்றில் நெகிழும் மலர்; மெல்லிய கூரிய பற்களோ முல்லை; முகமும் பாட்டிற்கு ஏற்ப தாளமிட்ட அகங்கைகளும் மலர் மேடையில் பத்மாசனத்தில் அமர்ந்திருந்தபோது அசைந்த பாதங்களும் மலர். என்ன இனிய பெயர்; எவ்வளவு பொருத்தமான பெயர் என்று எண்ணிக்கொண்டே உறங்கி விட்டேன்.

''பளீர்'' என்று கன்னத்தில் அறைந்ததுபோல 'அலாரம்' ஒலி எழுப்பியது. சட்டென எழுந்தேன். முகம் கழுவிக்கொண்டு, ஒரு துண்டை எடுத்துப் போர்த்திக் கொண்டு அண்ணன் இளமுருகு இல்லம் அடைந்தேன். 'கிண் கிண்' என மாட்டின் கழுத்தில் கட்டிய மணி ஒலிவிட்டு விட்டுக் கேட்டது. இரட்டை மாட்டு வண்டி தயாராக வாசலில் நின்று கொண்டிருந்தது. மலரின் புத்தகப்பை, பெட்டி, படுக்கை வண்டியின் முன் பகுதியில் முருகன் வைத்துவிட்டு எனக்காகக் காத்துக்கொண்டிருந்தான். மலர் பின்னே ஏறி அமர்ந்துகொண்டாள். முருகன் வண்டியில் ஏறி மூக்கணாங் கயிற்றைப் பிடித்துக்கொண்டான். நுகத்தடியில் கைவைத்து உந்தி ஏறி அவனை ஒட்டி நான் அமர்ந்துகொண்டேன். 'கார்' இந்தாருங்கள்! என்று சிவகாமி அம்மா அவர்கள் கையில் ஒரு போர்வையை எடுத்துக்கொண்டு வந்தார்கள். 'குளிருக்காக, அண்ணன் இதைத் தங்களுக்குக் கொடுக்கச் சொன்னாங்க' என்று சொல்லி என்னிடம் தந்தார்கள்.

வண்டி புறப்பட்டது. வயல்களை ஒட்டிய ஓடையில் எழுந்த அலையில் நிலா ஒளி அசைந்து அசைந்து மிளிர்ந்தது. ஆட்காட்டிக்குருவி ஒன்று வண்டிக்கு மேலே கீச்சுக் கீச்சு என்று கத்திக்கொண்டு வந்தது. ஓடைக்கரையில் இருந்த மரமல்லிகை மலர்மணம் வழியில் 'கம்மென்று' வீசிக் கொண்டிருந்தது.

ஓடைப் பாலத்தைக் கடந்து வண்டி ஊர் தார்ச்சாலையில் ஏறிற்று. மழை தூறத்தொடங்கியது. பின்புறம் சாரல் வீசியது. திரும்பிப் பார்த்தேன். சாரலுக்கு அஞ்சி மலர் அங்கும் இங்கும் அசைவது தெரிந்தது. வண்டியை நிறுத்தச் சொன்னேன். வட்டிப் பலகையில் கைவைத்துக் கீழே குதித்தேன். பின்புறம் சென்று மலர்மேல் தூறல் படாதவாறு வண்டியில் ஏறிக்கொண்டேன்.

''கார்மேகம்! உங்கள்மேல் சாரல் படாதா?'' என்ற மலரின் அன்பு தோய்ந்த ஆதரவான குரல் என் இதயத்தில் கேட்டது.

''அண்ணி தந்த பெரிய போர்வை இருக்கிறதே? நன்றாகப் போர்த்திக் கொள்வேன். சாரல்படாது. அப்படிப் பட்டாலும் எனக்கென்ன? நான் ஒரு கிராமத்தான். வயலில் வேலை செய்யும் விவசாயியின் மகன். இந்தக் குளிர், மழை என்னை ஒன்றும் செய்யாது'' என்று சொல்லிப் போர்வையை இழுத்து நன்றாகப் போர்த்திக்கொண்டு மலருக்குப் பாதுகாப்பாக அமர்ந்து கொண்டேன்.

'ஆ! அண்ணனுக்கு என் மேல் எவ்வளவு நம்பிக்கை. நான் இந்த ஆண்டு சேர்ந்த புதிய மாணவன்: ஆசிரியப் பயிற்சி பயிலச் சேர்ந்த பழைய மாணவர்கள் எவ்வளவோ பேர் உள்ளனர். எல்லோரையும்விட அண்ணனுக்கு என்னிடம் உள்ள நம்பிக்கையைக் காப்பாற்றுவது என் கடமை. எனவே மலருக்கு எந்தத் தீங்கும் வராமல் அவள்மேல் சாரல் படாமல் பாதுகாப்பது என் கடமை என்று மழையும் சாரலும்

என்மேல் படுமாறு அவள்மேல் படாதவாறு அமர்ந்து கொண்டேன்.

கீழ மூங்கிலடியிலிருந்து நான்கைந்து மைல் தூரமே சிதம்பரம் புகைவண்டி நிலையம். பழகிய பாதை. மேகம் மறைந்த கும்மிருட்டிலும் பயம் ஏற்படவில்லை. ஓரிரு முறை நாகூர் சென்னை வண்டியில்வந்து சிதம்பரத்தில் இரவு 1 மணிக்கு இறங்கிக் கீழ மூங்கிலடி வந்துள்ளேன். என்றா லும் மலர் அஞ்சாமல் இருக்க ''ஜெயம் உண்டு பயம் இல்லை மனமே'' என்ற பாரதி பாடலை முணுமுணுத்துக் கொண்டே வந்தேன்.

மலர் கலகல எனச் சிரித்தபடியே ''என்ன? பயமா!'' என்றாள்.

''எனக்கா? பயமா? உனக்குப் பயமாக இருக்குமோ என்னமோ என்று பாடத் தொடங்கினேன்''

''அப்படியா-ஆமாம். கொஞ்சம் பயமாகத்தான் இருக் கிறது. புளியம்பட்டியில் படித்தபோது இப்படித்தான் மாலை யில் வெகுநேரம் எப்போதாவது விளையாடி விட்டு வீடு திரும்பும்போது இருட்டிவிடும். தனியே வீட்டுக்குச் சாலை யில் வரப் பயமாக இருக்கும். எனக்கு நானே, ''அச்ச மில்லை! அச்சம் இல்லை! அச்சம் என்பதில்லையே!'' என்று பாடிக்கொண்டே ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு ஓடி வருவேன். என் பாட்டை என் காதே கேட்டு யாரோ இன் னொருவர் என்னோடு துணை வருவதுபோல் இருக்கும்'' என்றாள்.

''துன்பம் நேர்கையில்''... என்று வெண்ணிலா விழா வில் நீ பாடிய அந்தப் பாடல் எனக்கு மிகவும் பிடித்த பாடல். அறம் இஃதென்றும் மறம் இஃதென்றும் அறிகிலாதபோது இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல் இயம்பிக் காட்ட மாட்டாயா? என்ற அந்த அடி எனக்கு மிகவும் பிடித்தது. அதைப் பாடிப் பாடிப் பலதடவை, பல சூழல்களில் என்னைத் தேற்றிக் கொண்டிருக்கிறேன்; தெளிவு பெற்றிருக்கிறேன்.

''இசைவகையில் பாவேந்தரின் அந்தப் பாடல் மிக இனிய பாடல். இசைமேதை தண்டபாணி தேசிகர்தான் அதனை எனக்குப் பாடஞ்சொல்லி வைத்தார். அவரைப் போல் என்னால் அவ்வளவு குழைவாகப் பாட முடியாது. 'இயம்பிக் காட்ட மாட்டாயா?... மாட்டாயா? ஆ...? என்று உணர்ச்சி ததும்பி வழிய அவர் பாடுவார்'' என்றாள்.

''என்ன அப்படிச் சொல்லிவிட்டாய். வானத்தில் அன்று விளங்கிய முழு வெண்ணிலவு போல அவ்வளவு தெளிவாக, அவ்வளவு குளிர்ச்சியாக நீ பாடியது இருந்ததே'' என் றேன்.

மெல்ல நாணித் தலை குனிந்தாள். இதழ் ஓரத்தில் புன்னகை அரும்பி மறைந்தது கண்டேன்.

அமைதியாகப் போய்க் கொண்டிருந்த எங்கள் வண்டி யைக் குறுக்கிட்டு திடீர் என்று இருவர் ஓடினர். நான்கைந்து நாய்கள் குரைத்துக்கொண்டே அவர்களை விரட்டிக்கொண்டு பின்தொடர்ந்தன. மலர் நடுநடுங்கிப் போய்விட்டாள். என் கையைச் சிறு குழந்தைபோல் கெட்டியாகப் பற்றிக் கொண் டாள். வண்டிக்கார முருகன் விரைவாக 'ஹய் ஹய்' என்று மாடுகளைத் தட்டி விரட்டினான். முக்கூட்டுச்சாலை வந்தது. சாலை விளக்குகள் ஒளி உமிழ்ந்தன. பயம் போயிருக்க வேண்டும். அவளாகவே பற்றிய தன் கையை விட்டுவிட் டாள். படபடப்பு நீங்கித் தெளிவு பெற்றாள்.

''இந்த முனையில் கள்ளுக்கடை உள்ளது. குடியர்கள் வெறியில் ஓடினார்கள். நாய்கள் குரைத்தன. பயப்படாதே. நெடுஞ்சாலைக்கு வந்து விட்டோம். ''இதோ பார்! சென்னை-சிதம்பரம் பேருந்துகள் வருகின்றன'' என்று ஆறுதல் சொன்னேன்.

அதற்குள் வண்டி கீழ வீதிக்கு வந்துவிட்டது. வீட்டுத் திண்ணையில் கடைப் படிகளில் தூங்கிக் கொண்டிருந்த ஆட்கள் அவ்வப்போது ஆங்காங்கே சிறுநீர் கழிக்க எழுந்து படுத்தனர். மனிதப் புழக்கத்தைப் பார்த்ததும் பயம் அறவே

போய்விட்டது. முருகன் வேகமாக ஓட்டியதால் முக்கால் மணி நேரத்திலேயே சிதம்பரம் புகைவண்டி நிலையத்தை அடைந்து விட்டோம்.

''பனங்கல்கண்டு பால் குடிக்கலாமா?'' என்றேன்.

''நான்தான் காசு தருவேன், அப்படியானால்

குடிக்கலாம்''-என்றாள்.

'சரி' என்று மூவரும் பால் குடித்தோம். வெகுநேரம் ஆகிவிட்டதால் பால் நன்றாகச் சுண்டிப் போயிருந்தது; மிக மிகச் சுவையாக இருந்தது.

''என் அம்மா எனக்கு எப்போதும் சுக்கு வெந்நீரில் பனங்கல்கண்டு இட்டுத்தான் கொடுப்பாங்க. அது சளிக் கட்டாமல் குரல்வளையைப் பாதுகாக்குமாம். உடம்புக்கும் நல்லதாம்'' என்றாள் மலர்.

அதற்குள் வண்டி வருவதற்கான மணி அடிக்கப்பட்டது. வண்டி இரண்டாவது பிளாட்பாரத்தில் வருவதாக அறிவிக்கப் பட்டது. புத்தகப் பையை நான் எடுத்துக் கொண்டேன். படுக்கையை முருகன் எடுத்துக் கொண்டான். துணிப் பெட்டியை மலர் எடுத்துக் கொண்டாள். குறுக்கே ரயில்வே லயனைத் தாண்டிச் சென்று அடுத்த பிளாட்பாரத்தை அடைந்தோம்.

உறக்கம் இல்லாமல் அந்த நடு இரவில் உலவ வந்திருந்த பல்கலைக் கழக விடுதி மாணவர்கள் சிலர் மெல்ல மெல்ல விடுதி நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். அங்கே நின்று கொண்டிருந்த போர்ட்டர் ஒருவரிடம் முன் பதிவு எண்ணைச் சொல்லிப் பெட்டி வந்து நிற்கும் சரியான இடத்தைத் தெரிந்து கொண்டு அங்குப் போய் நின்றோம். அதற்குள் வண்டியும் வந்துவிட்டது.

''மிக்க நன்றி! சித்தப்பாவிடம் சொல்லுங்கள்'' என்று சொல்லிக் கொண்டே வண்டியில் ஏறினாள். நாங்கள் இரு

வரும். பின் தொடர்ந்து சென்று உரிய இடத்தில் படுக்கையையும் பெட்டியையும் வைத்து விடைபெற்றோம்.

நிலையத்திற்கு அருகே இருந்த டீக்கடையில் முருகனுக்கு டீ வாங்கிக் கொடுத்தேன். பக்கத்தில் இருந்த கால்வாயில் மாடுகளுக்கு அவன் தண்ணீர் காட்டி வண்டியில் பூட்டினான்.

காலையில் இளமுருகு அண்ணன் வீட்டிற்குப் போய் 'மலர்' நலமாக வண்டியேறிச் சென்றதை அண்ணியிடம் சொல்லிவிட்டு விவசாயக் குழுப்பணி செய்யப்போனேன்.

நாள் ஒவ்வொன்றாய்ப் போயிற்று. ஓரிரு மாதங்களும் போயின. எப்போதாவது மலர் இங்குக் கீழே மூங்கிலடிக்கு அவள் சித்தப்பா வீட்டிற்கு வருவாளா — என்று மனம் அவ்வப்போது நினைக்கும்.

ஒருநாள் மாலை. இறைவழிபாடு அண்ணன் தலைமையில் முடிந்தது. உடனே மேடையில் ஏறி, ''தம்பிகாள் நாளை காலை 10மணிக்கு மு. வ. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேசப்போகிறார். தமிழ் வித்துவான், சைவச் சான்றோர் தண்டபாணி தேசிகர் எழுதிய திருக்குறள் உரைவளம் வெளியீட்டு விழா. சாத்திரியார் மண்டபத்தில் நிகழ்கிறது. பேராசிரியர் தெ. பொ. மீ., சேதுப்பிள்ளை ஆகியோரும் வருகிறார்கள். உங்களில் யார் யார் வர விரும்புகிறீர்களோ குழுத்தலைவர் அனுமதி பெற்றுக் கொண்டு நாளை காலை எட்டரை மணிக்கு ஓடை மதகடிக்கு வந்துவிடுங்கள். பல்கலைக் கழகப் பேருந்துவரும் — நாம் போவோம்!'' என்றார்.

மு.வ. பேசுகிறார் என்றதும் உடனே குழுத்தலைவரிடம் சென்று நாளை மாலை வந்து என் பணியை நிறைவேற்றுவதாகக் கூறி அனுமதி பெற்றேன். மு.வ. அவர்களை 'அல்லி' என்னும் நாவல் வழி இளமுருகுதான் அறிமுகப்படுத்தி வைத்தார். நாங்கள் எழுதுகிற நாட்குறிப்பில் தொடர்ந்து அன்றாடப் பணிகள் பற்றிச் சிலர் எழுதுவோம். கடன்

கொடுத்தது. வாங்கியது பற்றிச் சிலர் எழுதி வைப்போம். வாழ்க்கை அனுபவங்களை, சிந்தனைக் கருத்துக்களை, கற்ற நூலின் வழி அறிந்த சிறந்த செய்திகளை, சான்றோரிடம் பேசியபோது, அவர் சொற்பொழிவுகளைக் கேட்டபோது அறிந்து கொண்ட வாழ்வியல் உண்மைகளை நாட்குறிப்பில் பதிவு செய்து நினைவு கூர்வதில்லை. இந்தக் குறைகளை எல்லாம் எங்கள் அண்ணா அவ்வப்போது எடுத்துக் கூறுவார்கள். அன்றொருநாள் நான் குடிலில் சேர்ந்த மூன்றாவது வாரம் மாலை இறைவழிபாடு முடிந்தவுடன், 'தம்பிகாள்—இப்போது நான் ஒருவர் எழுதிய நாட்குறிப்பைப் படிக்கப் போகிறேன். கேளுங்கள். எப்படி நாட்குறிப்பு எழுதவேண்டும் என அறிந்து கொள்வீர்கள். என்று மு.வ.வின் 'அல்லி'யிலிருந்து பின்வரும் சில பகுதிகளைப் படித்துக் காட்டினார்.

''நாள்தோறும் தன் முகத்தையும் தலையையும் ஒழுங்குபடுத்திக் கொள்வதுபோல், தன் உள்ளத்தையும் ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். தலை வாரி அமைத்துக் கொள்ளக் கண்ணாடி வேண்டும்; அதுபோல் உள்ளத்தை ஒழுங்குபடுத்த, நாட்குறிப்பு எழுதும் வழக்கம் வேண்டும். அல்லது, ஏசு புத்தர் திருநாவுக்கரசர் போன்ற அறத்தின் வீரர்களைத் தியானம் செய்து கொண்டு, நேற்றைய இன்றைய செயல்களையும் சிந்தனைகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

—x—

கடவுள் வழிபாடு, தியானம் என்று சொல்லிக் கடவுளின் பெயர்களைச் சொல்லிப் பலவாறு அவரைப் புகழ்ந்து கொண்டிருப்பதால் பயன் இல்லை. கடவுள் நெறியாகிய அறநெறியில் நின்றது எவ்வளவு, நிற்காதது எவ்வளவு, செய்த செயல்களிலும் எண்ணிய எண்ணங்களிலும் நல்லவை எவ்வளவு, தீயவை எவ்வளவு என்று ஆராய்ந்து இறைவனிடம் முறையிட்டால்தான் பயன் உண்டு. இல்லாவிட்டால் மனம் தூறுவாராத பழைய சாய்க்கடையாகவே இருக்கும்.

—x—

நம் வாழ்க்கை, இந்த உலகத்தை நோக்க, கடலில் ஒரு துளி போன்றது. இந்தச் சிறு வாழ்க்கையில் எல்லாவற்றையும் அறியவும் முடியாது; எண்ணியவற்றை எல்லாம் செய்யவும் முடியாது வாய்ப்பும் குறைவு. வாழ்நாளும் குறைவு. ஆகையால் நம் பங்கு மிக மிகச் சிறியது. வாழ்க்கையில் எல்லாம் பெற முடியாது; எல்லாம் அறிய முடியாது. எவ்வளவோ அறியாமல் அமைதியடைய வேண்டும்.

நூல்களைப் படித்தும் வாழ்க்கையில் அனுபவித்தும் அறிந்தவை எவ்வளவோ! அவற்றிலேயே எவ்வளவோ மூளையில் நிற்காமல் மறந்துபோயின. மறக்கப்பட்டவற்றால் ஏதாவது குறை உண்டோ? இல்லை. அதுபோலவே, வாழ்வில் அனுபவித்து அறிந்து கொள்ளாமலே விடப்பட்டவற்றாலும் ஒரு குறையும் இல்லை. அறிந்தவைகளில் நல்லவைகளை மறக்காமல் இருந்தாலே போதும். பெற்றவைகளில் தீமையற்றவைகளை நுகர்ந்தாலே போதும்.

—x—

''அப்பா! ஆடம்பரமாக வாழும் ஆண்களையும் நம்பிப் பழகாதே. அவர்களுடைய வாழ்வுக்கு உன்னைக் கருவியாகிக் கொண்டு பாழாக்கி விடுவார்கள்.''

—x—

இரக்கம் இல்லாதவர்களை, பிறர் துன்பத்தைக் கண்டு கண்ணீர் கலங்காதவர்களை எளிய வாழ்க்கையை விரும்பாதவர்களை நம்பாதே. நீ திருமணம் செய்துகொள்ளும் காலத்திலும், இப்படிப்பட்ட மனம் உள்ள பெண்களை நாடாதே.''

'இன்பத்திற்குத் துணையாக யாராலும் முடியும்' எறும்பாலும் முடியும். நம் உடம்பில் நல்ல உணவு கிடைக்கும் போது ஈயும் எறும்பும் நம்மைக் கேளாமலே வந்து மொய்க்கின்றது. அதுபோல் இன்பம் உள்ள போது யார் வேண்டுமானாலும் வந்து மொய்த்துக் கொள்வார்கள். ஆகையால் இன்பத்திற்குத் துணையாக வல்லவரை நம்பாதே. துன்பத்திற்குத் துணையாக இருக்க வல்லவரைத் தேடு. உறவான

லும் நட்பானாலும் காதலானாலும் இப்படித்தான் தேட வேண்டும்.

—x—

''செய்த குற்றங்களைத் திரும்பச் செய்யாதிருந்தால் போதும். நாள்தோறும் உன் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பில் எழுதிவை. நீ தலைவனாகி மனத்தை அறிவதற்கு அது ஒரு வழி, வழிபாட்டில் நம்பிக்கை இருந்தால், சிறந்த பெரியார் ஒருவரின் உருவத்தை நினைத்து அவருடைய தூய பண்புகளை எண்ணி, உன் குறைகளையும் எண்ணித் திருந்து''

—x—

''இளைஞர்களின் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும். வாழ்க்கையில் ஒரு பொழுதுபோக்கு இருக்கவேண்டும். ஒரு வெறி - கட்சி வெறி அல்லது சமய வெறி இருந்தாலும் மேலானதே. வெளியுலகத்தில் ஒரு போராட்டம் இருக்க வேண்டும். இல்லையானால் இளமை எண்ணங்கள் சும்மா இருக்க முடியாது; நாடி நரம்புகளின் ஆசையைப் பற்றி அலைந்து உடலைக் கெடுத்து விடும். அந்த ஆசைக்கு இடம் இல்லாமல் இருபது இருபத்தைந்து வயது இளைஞன் இருக்க வேண்டுமானால், ஒரு குறிக்கோள் ஒரு வெறி இருந்து வெளியுலகம் அவனைக் கவரவேண்டும். இவற்றில் ஒன்றிலும் மனம் பற்றாத இளைஞனாக இருந்தால், பேசாமல் பெற்றோரே பார்த்துத் திருமணம் செய்து விட வேண்டும்.'' என்னும் பகுதிகள் மு. வ. விடம் எனக்கு மானசீகமான ஒரு மாணவ உறவை ஏற்படுத்தியிருந்தது.

2

பரிமேல் அழகர், பாரதியார், மணக்குடவர் முதலிய சிறந்த உரையாசிரியர்களுடைய உரைகளை அந்த அந்தத் திருக்குறளுக்குக் கீழே தந்து பாட பேதத்தோடு பதிப்பித்த தண்டபாணி தேசிகர், ''திருக்குறள் உரைவளம்'' வெளி

யீடு மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. தேசிகரோடு சேதுப் பிள்ளை, மு.வ., தெ.பொ.மீ மூவரும் சாத்திரியார் அவை மேடையில் அமர்ந்திருந்த காட்சி கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. மு.வ.வின் நெடிய தோற்றம், சேதுப்பிள்ளை யின் புன்னகை தவழும் முகம், தெ.பொ.மீயின் சிந்தனை தோய்ந்த கண்கள் என் நெஞ்சில் புனையா ஓவியம் தீட்டின.

'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், அன்று சிறப்புடன் திகழ்ந்த உலக நூல்கள் அனைத்தையும் கற்று, தன் வாழ் வில் துய்த்துக் கண்டறிந்த உண்மைகளோடு உராய்ந்து எப் போதும் எல்லோரும் வாழ்வதற்கு உரிய வாழ்வியல் நெறி களை வகுத்து வழங்கியவர் வள்ளுவப் பெருந்தகை. இன்று நேருக்கு நேர் பழகும் நாமே நம் பேச்சின் பொருளைத் தவறாகப் புரிந்துகொள்கிறோம். அப்படியானால் இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவள்ளுவர் சிந்தனைகளை இந்தத் திருக்குறள் வழிக் கற்கும்போது சிற்சிலபோது சிற் சில இடங்களில் தவறாகப் புரிந்துகொள்ள வாய்ப்பு உண்டு. அப்படித் தவறு செய்யாமல் வள்ளுவனார் வாக்குவழி அவர் உள்ளக்கிடக்கையை உணர்ந்துகொள்ள வழிகாட்டிய சான் றோர் பெருமக்களே உரையாசிரியர்கள். அவர் தரும் உரைகள் வள்ளுவர் பேரில்லத்தில் நுழையும் வாயிலுக்கு உரிய சாவிக்கொத்துக்கள்; மதித்துக் கற்கவேண்டும்.

'ஓர் உரையாசிரியர் தவறிய இடத்தில் இன்னொருவர் சரியாக வழிகாட்டியிருப்பார். அதனால்தான் பல உரைகளை ஒப்பவைத்துக் காணும்போது சரியான உண்மையை உணர்ந்து தெளிய வாய்ப்பு மிகுதியும் உண்டு. இந்த நல்ல எண்ணத்தில், உயரிய எண்ணத்தில் பேராசிரியர், என் கெழுதகை நண்பர், நற்றமிழ்ச் சான்றோர் தண்டபாணி தேசிகர் அவர்கள் 'திருக்குறள் உரைவளம்' எழுதியுள்ளார் கள். அவர்களுக்கு என் வாழ்த்துக்கள். இந்த நல்ல செந் தமிழ்த் திருப்பணியை மேற்கொண்டு போற்றிவரும் செட்டி யார் அவர்களுக்கும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்

தார்க்கும் என் நன்றி!' என்று உணர்வோடு அன்று பேசிய மு.வ.பேச்சு இன்றும் என் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

10 மணிக்குத் தொடங்கிய கூட்டம் 12.30 மணிக்கு முடிந்தது. உடனே மேடையில் இருந்த சிறப்பு விருந்தினர் அனைவரும் விருந்தினர் இல்லத்திற்குப் புறப்பட்டனர். இளைஞர் பலர் மு. வ.வைச் சூழ்ந்து கொண்டனர். அண்ணன் இளமுருகு தூரத்தில் நின்றபடியே கைகூப்பினார். கைகாட்டித் தன் அருகில் வருமாறு மு. வ. அவரை அழைத்தார்.

அவரோடு நானும் நெருங்கிப்போய் நின்றேன். எங்கேயோ இருந்து அண்ணனும் நானும் மு. வ. விடம் செல்வதைக் கண்ட மலரும் யாரோ ஒரு இளைஞரும் மு.வ.விடம் வந்தனர். மலர் என்னைப் பார்த்துப் புன்னகை பூத்தபடியே அந்த இளைஞருக்கு என்னை அறிமுகப்படுத்தினாள். என்னைப் பற்றி மு. வ.விடம் அண்ணா எடுத்துச் சொன்னார். பச்சையப்பனில் அவரிடம் தமிழ் பயிலவேண்டும் என்ற என் விருப்பத்தைச் சொன்னேன். சட்டைப் பையில் வைத்திருந்த அவர் உரையுடன் அமைந்த பையடக்கத் திருக்குறளை எடுத்துக் காட்டி அவர் கையெழுத்தைப் பெற்றுக் கொண்டேன்.

புன்னகையுடன், ''திருக்குறள் முழுதும் மனப்பாடமாக வருமா?'' என்றார்.

''இல்லை. நானூறு ஐந்நூறு குறள்கள் தெரியும்'' என்றேன்.

''ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களும் கற்று மனப்பாடம் செய்தபின் எழுதுங்கள். உங்கள் பச்சையப்பன் படிப்புப் பற்றிப் பிறகு சொல்கிறேன்'' என்று தன் ஒளி உமிழும் கண்களால் என்னைப் பார்த்தார்.

நான் தலை குனிந்தபடியே, ஆயிரத்து முந்நூற்று முப்பதும் மனப்பாடம் செய்யத் தவறி விட்டோமோ என்ற

ஏக்கத்தோடும், நாணத்தோடும் 'உம்' இன்றே தொடங்கி விடுகிறேன் என்றேன். அதற்குள் அண்ணன் இன்னார் மகள் என்று மலரை அறிமுகப்படுத்தினார்.

''என்னம்மா! உங்கள் தந்தையை நான் அறிவேன். அவர் மகளா நீங்கள்-என்ன பாடம் படிக்கிறீர்கள்''.

''ஆங்கில இலக்கியம் சிறப்புப் பாடமாக எடுத்துப் படிக்கிறேன்.''

''ஓ! அப்படியா! ஷெல்லி, வொர்ட்ஸ் வொர்த்தின் பிரிலுட், பைரனின் பிரிசினர் ஆப் சில்லான் தாமஸ் கிரேயின் கண்ட்ரி சர்ச்சியர்டு-கோல்டு சிமித்தின், சிட்டிசன் ஆப் தி ஓர்ல்டு எல்லாம் கற்பீர்கள்-அப்பா நல்ல துறையில்தான் ஈடுபடுத்தியிருக்கிறார். பிற்காலத்தில் தமிழோடு இணைத்து ஒப்பிலக்கியம் கற்று உலகத்திற்குப் பல உண்மைகளை, உணர்வுகளை உரைக்கமுடியும்-வாழ்த்துக்கள்'' என்று கூறி விடைபெற்றுப் புறப்பட்டார்-இடையில் மலருடன் வந்த அந்த இளைஞர் குறுக்கிட்டு 'வணக்கம் ஐயா' என்றார்.

மு. வ. தலைநிமிர்ந்து அவரை நோக்கினார். அவரைப் போல் நெடிய தோற்றம்; நீண்ட கைகள், அவரைவிட இளமை. நல்ல சிவந்த மேனி. பாலில் நீலப்பளிங்கை இட்டாற்போன்ற குழந்தைக் கண்கள். பார்த்துக் கொண்டே இருந்த மு. வ. யார் நீங்கள்? எனக் கேட்க நினைத்தார்—அதற்குள் அண்ணன் இளமுருகு.

''இவர் எங்கள் ஊர்ப்பையன்-பெயர் அருள். பொருளா தாரம் படிக்கிறார்'' என்றார்.

''நல்லது-ஜெ. சி. குமரப்பாவின் காந்தீய பொருளா தாரம், மார்க்சு முனிவரின் கேபிடல் படியுங்கள். வாழ்த்துக் கள்-தமிழ்நாடு, இந்தியா உங்களால் உயரும்''-என்று சொல்லி அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு மு.வ. புறப்பட்டார்.

காந்திக்குடில் செல்லும் பல்கலைக்கழகப் பேருந்தில் வந்த அனைவரும் ஏறி எங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்ததால் மலருடன் எதுவும் பேசமுடியவில்லை. திருக்குறள் முழுதும் மனப்பாடம் செய்ய வேண்டும் என்ற மு. வ. வின் கட்டளை அப்படியே நெஞ்சில் நின்றது. 'யார் அந்த இளைஞன்?-'அருள்' என்று அண்ணா சொன்னார்; சொந்த ஊர்க்காரர் என்றார். மலரோடு அவன் சேர்ந்து மு.வ.விடம் வந்தான்' என்ற எண்ணம் அடிக்கடி என் நினைவில் குறுக்கிட்டுக் கொண்டே இருந்தது. 'மலர்' என்னை விசாரிக்கவில்லையே என்ற ஏக்கம் ஏற்பட்டது. மு. வ. வைக் காண வேண்டும் என்ற ஆர்வத்தில் அறிமுகம் எல்லாம் விரைவாக நிகழ்ந்ததால் அவள் விசாரிக்காமல் போயிருப்பாள். ஆனால் அன்போடு அந்த நெருக்கடியிலும் என்னைப் பார்த்தாளே என்று என்னை நானே அமைதிப்படுத்திக் கொண்டேன்.

அண்ணாவும் நானும் விடைபெற்றுக் கொண்டோம். பேருந்தில் எங்களுக்காக முன் இரண்டு இருக்கைகளை மாணவர்கள் ஒதுக்கி வைத்திருந்தனர். நாங்கள் சென்று அமர்ந்து கொண்டோம். வண்டி புறப்பட்டது. சிறிது சென்றிருக்கும். 'தம்பி' என்று என்னை அழைத்து அண்ணா ஏதோ சொல்ல விரும்புவது போலப் பார்த்தார், சொல்லத் தயங்கினார்.

''என்ன அண்ணா? ஏதேனும் தவறு செய்துவிட்டேனா?'' என்றேன்.

''இல்லை! இல்லை! அருளைப் பார்த்தீர்களே! அவர் எப்படி?'' என்று கேட்டு நிறுத்தினார்.

''ஆ! முகத்தில் தெய்வீகக் கலை!''

''ஆமாம். உண்மைதான். அவரை நம் மலர் விரும்புகிறாள். அவளோடு இங்குப் படிக்கும் எங்கள் ஊர்ப் பெண் ஒருத்திவழி அண்ணாவுக்கு இது தெரிந்துள்ளது. என்னை விசாரிக்கச் சொல்லி எழுதியிருந்தார். எங்கள் ஊருக்குப் பக்கத்தில்தான் அவர்ஊரும் உள்ளது. அந்தக் குடும்பமும் நல்ல குடும்பமாகத்தான் தெரிகிறது.''

''இங்கு இவருக்குக் கற்பிக்கும் ஆசிரியர் ஓரிருவர் மூலம் இவரும் நல்லவர் என்று தெரிந்து கொண்டேன். காந்தி பிறந்தநாள் விழாவில் எதிர்கால உலகம் காந்திய வழியில் தான் அமைதியாக வாழ முடியும்; வளர முடியும் — என்று உலகப் பொருளாதார, சமுதாய, சமய அடிப்படை உண்மை களைச் சுட்டிக்காட்டி இங்கு அவர் பேசிய பேச்சு மலரை மிகவும் கவர்ந்துவிட்டதாகத் தெரிகிறது. அன்றிலிருந்து அவரையே மணக்கவேண்டும் என்று உறுதி செய்து கொண்ட தாகத் தெரிகிறது. ஆனால் தன் இந்த முடிவை அருளிடம் இவள் இதுவரை கூறவில்லை. அருளும் அப்படி ஓர் எண்ணம் தனக்கு இருப்பதாக யாரிடமும் குறிப்பாகக்கூட வெளியிடவில்லை'' என்றார்.

அண்ணா சொல்லச் சொல்ல நான் எங்கேயோ மலை உச்சியிலிருந்து சரிந்து விழுவதுபோல் உணர்ந்தேன். 'மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்' என்ற பாரதியின் கனவு மங்கையாக என் மலர் மறைந்துகொண்டி ருந்தாள். காந்திக்குடிலில் யந்திரம்போல் இயங்கிக் கொண் டிருந்தேன். எதிலும் ஈடுபாடு ஏற்படவில்லை. மனம் சோர்ந்துவிட்டது. சரியாக உண்ணாததால் உடலும் மெலிந்துவிட்டது.

கோடை விடுமுறையில் ஊர் சென்றேன். என் மெலி வைப் பற்றி, சோர்வுபற்றி விசாரித்தார்கள். துன்பமாக இருந்தால் மேலே படிக்க வேண்டாம் என்று கூடப் பாட்டி சொன்னார். விடுமுறை முடிந்ததும் காந்திக்குடிலுக்கு மீண்டேன்; மலரை மறக்க முடியவிலலை. ''எல்லாம் பொய் யாய்க் கனவாய்ப் பழங்கதையாய் மெல்லப் போயினவே'' என்ற பட்டினத்தார் பாடல் என்னளவில் பொய்த்து விட்டது. 'மலர்' என் மனப் பூங்காவில் கமழ்ந்து கொண்டே இருந் தாள்; என் மனமேடையில் பாடிக்கொண்டே இருந்தாள். 'துன்பம் நேர்கையில்' என்னும் அவள் பாடும் குரல் என்

அகச் செவியில் கேட்டுக் கொண்டே இருந்தது. இதழ்களைக் குவித்து, கைகளை அசைத்து—அன்று முழு வெண் நிலவில் அவள் பாடிய தோற்றத்தை என்னால் மறக்க இயலவில்லை. அன்று அஞ்சி அவள் என் கையைப் பற்றிய அந்த நினைவு இன்னும் மெய் சிலிர்க்க வைக்கிறதே!

3

ஆதாரக்கல்வி ஆசிரியப் பயிற்சி முடிந்தது. ஒரு முறை காந்திக் குடிலுக்கு வந்தபோது, ''தம்பி! விரும்பினால் பயிற்சி முடிந்ததும் நீங்கள் என் காந்தி வித்யாலயத்தில் ஆசிரியப் பணி புரியலாம்'...என்ற அருணாசலம் அண்ணா வின் அழைப்பு நினைவுக்கு வந்தது. முதலாண்டு மாணவர் களிடம், ஆசிரிய அண்ணாக்களிடம், உடன் பயின்ற நண்பர் களிடம் விடைபெற்றுக் கொண்டேன். நாள்தோறும் நடந்து நடந்து பழகிய வரப்புகள், வயல்கள், என் சிந்தனையைத் தூண்டி வளர்த்த ஓடைக்கரை எல்லாவற்றையும் விட்டுப் பிரிய வேண்டி இருந்தது. என் உடன்பிறந்தார் போல் பழகிய கணேசன், பழநிச்சாமி, குமாரசாமி, மரியசூசை, மங்கத்தாய் — நினைக்கும்போதே தொண்டை அடைத்துக் கொண்டு கண்ணீர் பெருகுகிறது. மரியசூசை கொடுத்த விவிலியத்தைப் புரட்டினேன். முதல் பக்கத்தில் 'இரக்கம் உடையோர் பாக்கியவான்கள்—அவர்கள் பரலோக ராஜ் யத்தை அடைவார்கள்'—அன்புத் தங்கை—மரியசூசை என்ற அருளுரையும், கையெழுத்தும் கண்டேன். கண்கள் பொல பொல எனக் கண்ணீர் உகுத்தன.

அருணாசலம் அண்ணா அழைத்தவாறுதிருச்சிற்றம்பலம் காந்தி வித்யாலயம் சென்றேன். எப்படியும் வேலை தேடிக் கொண்டு போக வேண்டும் என்ற ஆர்வம், யாரேனும் நம்மை விட முந்திக்கொண்டு அங்குச் சென்று வேலையில் சேர்ந்து விடுவார்களோ என்ற பரிதவிப்பு; அதனால் வீட்டுக்குப்

போகாமல் வேலை தேடி நேரே காந்தி வித்யாலயத்துக்குப் போனேன். ஓரிரு ஆண்டுகள் மட்டும் வேலை செய்ய விரும்பினேன்.

திருச்சிற்றம்பலம் காந்தி வித்யாலயத்தை அடைவதற்குள் இருட்டிவிட்டது. பேருந்தில் இறங்கி வித்யாலத்தை அடைய இரண்டு பர்லாங் தூரம் நடக்கவேண்டியிருந்தது. மழை பெய்து சாலைகள் மேடு பள்ளம் நிறைந்திருந்தன. ஓரளவு இருளும் சூழ்ந்துவிட்டது. தெரு விளக்குகளும் இல்லை. துணிப்பை, புத்தக மூட்டை, படுக்கை வேறு. தோளில் இரண்டு தலையில் ஒன்று சுமந்துகொண்டு தட்டுத் தடுமாறி வித்யாலயத்தை அடைந்தேன். அங்கு, பெரிய அண்ணன் திரு அருணாசலம் இல்லை. ஏதோ அவசரமாகச் சென்னை சென்றுள்ளதாகவும் ஒரு நாளில் வந்துவிடுவார் என்றும் அவர் வீட்டில் சொன்னார்கள்.

இரவு மாணவர் ஒருவரோடு விடுதியில் தங்கினேன். காலை 4 மணிக்கு எழுப்பு மணி ஒலித்தது. மாணவர் அனைவரும் எழுந்து குளிக்கப் போயினர். அவர்களோடு நானும் எழுந்து சென்று காலைக்கடன்களை முடித்துவிட்டுக் குளித்து இறைவழிபாட்டிற்குத் தயாரானேன். 5 மணிக்கு இறை வழிபாடு. தேவாரம், திருவாசகம், திருவாய் மொழிப் பாடல்களோடு, 'ரகுபதி ராகவ' பாடல்கள் பாடினோம். அதன்பின் சின்ன அண்ணா கீதை, குரான், பைபிள், திருக்குறளில் சில பகுதிகளைப் படித்தார். பின்னர் தியானம் 'காலை 6 மணிக்கு குழுப் பணிக்காகச் சென்றனர். நான் வித்யாலயத்தைச் சுற்றிப் பார்த்தேன். கீழமூங்கிலடி காந்திக் குடில் போலவே மாணவர் இல்லங்கள், வகுப்பறைகள், தொழிற்கூடங்கள், பசுத் தொழுவம், காய்கறித் தோட்டம் முதலியன அமைந்திருந்தன. சிறப்பாக மலர்த்தோட்டம் ஒன்றை அண்ணா உருவாக்கி இருந்தார்கள். சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற மலர்ச்செடி, கொடி, மரங்கள் பல தேடித் தேடி எங்கெங்கிருந்தோ கொண்டுவந்து சேர்த்து

வளர்ந்திருந்தார்கள். முல்லை, செம்மல், தளவம், பித்திகம்; கொடிமுல்லை, ஊசி முல்லை, நள்ளிருள் நாறி, மல்லிகை, அடுக்கு மல்லிகை, குளவி, அகுரல், மௌவல், பவழ மல்லிகை-என முல்லை இன மலர்த் தோட்டம் கண்ணையும், மூக்கையும் கருத்தையும் கவர்ந்தது-இப்படியே பல்வகை வண்ண ரோசா மலர்ச் செடிகளையும் பயிராக்கியிருந்தார் வித்யாலயத்தில் சேர்ந்தால் நாள்தோறும் இந்தக் காட்சி களைக் கண்டு களிக்கலாமே என்று எண்ணியபடி தோட்டத் தில் திரிந்துகொண்டிருந்தேன்.

மணி ஒலி கேட்டு உணவுக்கூடம் சென்றேன். விருந் தினர் அமைச்சரிடம் மாணவர் சிலர், என் வருகையைப் பற்றிக் கூறினர். அவர் சிறப்பு விருந்தினராகப் பதிவு செய்து கொண்டு உணவளித்தார். அன்று முளைகட்டிய பச்சைப் பயிறு, மோர் காலைச் சிற்றுண்டியாக அமைந்திருந்தது— பச்சைப் பயிற்றில் சிறிது எழில்மிக்க பழத்தின் சாறு சேர்த் திருந்தது, புளிப்பாகச் சுவையாக இருந்தது; ஒரு துண்டு அச்சு வெல்லமும் தந்தனர். மோரில் கறிவேப்பிலை, பெருங் காயம் இட்டிருந்தனர்; கமகம என மணந்தது.

காலை 9 மணிக்கெல்லாம் வகுப்பு தொடங்கியது. நான் நூல்நிலையம் சென்றேன். சங்க இலக்கிய நூல்கள், சைவ, வைணவ சமய சாத்திர தோத்திர நூல்கள், காப்பியங்கள் இலக்கிய வரலாற்று நூல்கள், இலக்கண மொழியியல் நூல் கள், சான்றோர் பலர் கட்டுரை நூல்கள் எனத் தமிழ் ஆங்கில மொழி நூல்கள் பல இருந்தன. அவற்றைப் பதிப்பிப்பதற் காக அண்ணன் வைத்திருப்பதாகவும், கையில் எடுக்கக் கூடாது என்றும் நூலகர் அறிவுறுத்தினார். தொட்டால் உதிர்ந்துபோகும் அளவு அவ்வளவு பழைய ஓலைச் சுவடி களாக அவை காணப்பட்டன. செல், எழுத்தாணிப் பூச்சி அரிக்காமல் நாரத்தம் புல் தைலம் தெளித்திருந்தனர்; நாரத்தம் மணம் மூக்கைத் துளைத்தது.

நண்பகல் இரண்டு மணிக்கு அன்று மாதந்திர மாணவர் அவை கூடிற்று. சின்ன அண்ணன் தலைமை தாங்கினார். துப்புரவு அமைச்சர், உணவு அமைச்சர், மருத்துவ அமைச்சர், விருந்தினர் அமைச்சர் பலர் தங்கட்கு உரிய இடத்தில் அமர்ந்தனர். 'பருப்பு கருகிப் போனது' பற்றி மாணவர் ஒருவர் உணவு அமைச்சரை கேள்வி கேட்க-அதற்கு அவர் சமையல் குழு சார்பாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

''25 வாழைக்காய், வாங்கியதாகக் கணக்கில் இருக்கிறது - ஆனால் பொறியலுக்கு நறுக்க இன்று உணவு அமைச்சர் தந்தபோது 23 காய்களே தந்தார் - இரண்டு காய்கள் என்ன ஆயின?'' என்று காய்கறிக் குழுத் தலைவர் கேள்வி ஒன்றை எழுப்பினார். சிறிது நேரம் மௌனம். அப்போது துப்புரவு அமைச்சர் எழுந்து இன்று காலை பண்டக சாலையைத் துப்புரவு செய்தபோது எலி கடித்திருந்த இரண்டு வாழைக்காய்கள் குப்பைக் கூடையில் கிடந்தன-எடுத்து எருக்குழியில் போட்டோம்'' என்றார்.

''ஆம்! ஆம்! மறந்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்—அந்த இரண்டு வாழைக்காய்கள் எலி கடித்துக் கெட்டுப் போய்விட்டன. அவற்றை எறிந்துவிட்டோம்'' என்றார்.

''கோடை மிகக் கொடுமையாக இருக்கிறது - மாணவர்கள் கண் பொங்கி விடுகிறது. உடம்பில் வெப்பம் அதிகமாகி விடுகிறது. மருத்துவ அமைச்சர் முன்னேற்பாடாக என்ன செய்யப் போகிறார்'' என்றார் மாணவர் ஒருவர்.

''தும்பைப் பூ இட்டுக் காய்ச்சிய ஆமணக்கு எண்ணெய் கண்ணில் இட்டுக்கொள்ள இரவிலும், கண்ணீர் கழுவ இளநீர் காலையிலும் தரப்பெறுகின்றன - உடல் வெப்பம், குடல் வெப்பம் தனிய மோர், ஊறவைத்த வெந்தயம் தரப் பெறுகின்றன'' என்று விடை சொன்னார் மருத்துவ அமைச்சர். இப்படி மாலை 5 மணிவரை காரசாரமாகக் கேள்விகள் தொடுக்கப்பட்டன. விழிப்புடன் ஒவ்வொரு அமைச்சரும் விடை அளித்தனர்.

அவை கலைந்ததும் மணல்வெளியில் மேற்கு நோக்கிச் சென்றுஅமைதியாக அமர்ந்தேன். தன்ஆடுமாடுகளை ஓட்டிக் கொண்டு வீடு நோக்கிச் சின்னஞ் சிறுவர் பலர் ஆடிப்பாடி மகிழ்ந்து கொண்டு சென்றனர். அவர்கள் கட்டியிருந்த கோவணமும் ஒட்டியிருந்த அவர்கள் வயிறும் எனக்குக் கவலை அளித்தன. இவர்க்கெல்லாம் என்ன செய்வது, என்ன செய்யலாம் என்று சோர்ந்த மனத்தோடு இல்லத்தை அடைந்தேன்.

மறுநாள் காலை பெரியண்ணன் வருவதாக அறிந்து வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தேன். காலை 6 மணிக்கு 'கலகல' என்று வண்டி மாட்டின் கழுத்தில் கட்டியிருந்த மணி ஓசை கேட்டது. அண்ணன் வந்து இறங்கினார்.

'வணக்கம் ஐயா?...... என்றேன்.

''உம்... உங்களைக் காந்திக் குடிலில் பார்த்ததாக நினைவு...''

''ஆம் அண்ணா... தேர்வுகள் முடிந்துவிட்டன. தாங்கள் அங்கு வந்திருந்தபோது நான் கேட்டேன். ஆசிரிய வேலைக்கு இங்கு வருவதாகக் கூறினேன் இளமுருகு அண்ணாவுடன் தாங்கள் இருந்தபோது சொன்னேன்...''

''ஆமாம்—நினைவு இருக்கிறது —இரண்டு ஆசிரியர்கள் வேண்டும். ஒன்பது மணிக்கு அலுவலக அறைக்கு வாங்க பேசுவோம்...?'' என்று தன் இல்லம் நோககிச் சென்றார். நெடிய தோற்றம், தூய கதராடை, சிவந்த மேனி, கண்டிப் பான குரல், தடுமாறாத நடை. ஆம் அருணாசலம் அண்ணா என் கண் முன்னே சென்று வீட்டினுள் நுழைந்து மறைந்தார் அவர் கையில் இருக்கும் என் எதிர்காலத்தை நினைத்து இரண்டு மணி நேரம் தவித்துக் கொண்டிருந்தேன்.

சரியாகக் காலை ஒன்பது மணி. அண்ணா அலுவலகத் துள் நுழைந்தார். நான் பின் தொடர்ந்தேன். தான் அமர்ந்தபின் என்னை அமரச் சொன்னார்.

''தம்பி! நான் மிகவும் கண்டிப்பானவன். இங்கு இந்த வித்யாலயத்தைக் காந்திய நெறியில் நடத்திக் கொண்டிருக்கிறேன்; இங்குப் பணிபுரிபவர்கள் தொண்டர்களாக - 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று தன்னைத் தியாகம் செய்துகொண்டு வித்யாலய வளர்ச்சிக்கு முழுக்க முழுக்க உழைப்பவர்களாக இருக்க வேண்டும். இன்று அலுவலகங்களில், தொழிலகங்களில் பணிபுரிவோர் மூன்று வகையினர். தங்களைத் தியாகம் செய்து கொண்டு தாங்கள் பணிபுரியும் பணியக வளர்ச்சியிலேயே, வாழ்விலேயே 'கண்ணும் கருத்துமாய இருப்போர் முதல் வகையினர்; முதன்மையானவர் அவர்கள்—தன்னையும் வளர்த்துக்கொண்டு தான் பணிபுரியும் பணியக வாழ்விலும், வளர்ச்சியிலும் ஈடுபடுபவர் இரண்டாம் வகையினர். பணியகம் எக்கேடு கெட்டால் எனக்கென்ன — நான் வளர, என் குடும்பம் வளமாக எப்படி எப்படி எல்லாம் இந்தப் பணியை, பணியகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கருதிப்பணியக அழிவில் தங்கள் ஆக்கத்தைத் தேடிக்கொள்பவர் மூன்றாம் ரகம்; இந்த நாட்டு அழிவுக்குக் காரணமாக இருப்பவர்கள் அவர்கள். எனக்குத் தேவை, என் வித்யாலயத்திற்குத் தேவை முதல் வகையினர், முன்மையான நிலையினர். தன் வளர்ச்சியில் சிந்தை செய்யாமல் வித்யாலய வளர்ச்சியையே விரும்பி உழைப்பவரே எனக்குத் தேவை. தங்களைப் பற்றி இளமுருகு குறிப்பிட்டபோது தங்களுக்கு மு.வ.விடம் உள்ள ஈடுபாட்டையும் மேலே அவர்பால் தமிழ்பயில விரும்பும் உங்கள் ஆர்வத்தையும் எடுத்துச் சொன்னார். அத்தகு தனி ஈடுபாடு, ஆர்வம் — இவற்றுக்கு இங்கு வாய்ப்பு இல்லை. உங்கள் தனிமனித வளத்துக்கு வளர்ச்சிக்கு இ த வித்யாலயம் ஒத்துவராது—இன்னும் ஒரு மணிநேரம் தருகிறேன். எண்ணிப் பார்த்து ஒரு முடிவுக்கு வருவது நல்லது என்று என்னை அனுப்பிவிட்டு அலுவலகப் பணியில் மூழ்கினார்.

வெளியில் வந்தேன். கோவனாண்டியாக ஆடு மாடு களை மேய்த்து மாலையில் வீடுநோக்கிச் சென்ற அந்த சின்னஞ்சிறுவர் காட்சி என் கண்முன்னே வந்தது. வறுமை யானாலும் உரிமையான அவர்கள் வாழ்வை நினைத்துக் கொண்டேன். தன்னை இழந்து தரணி வாழப்பணி செய்ய இன்று இந்த இந்திய நாட்டு உருவாக்கத்திற்குச் சிலராவது வேண்டும். உண்மைதான். அந்தச் சிலருள் நானும் ஒருவனாகும் தகுதியும் எனக்கு உண்டு. ஆனால் தரணி வாழ என்று சொல்லிக்கொண்டு தங்களை வளர்த்துக் கொள்ளும் சிலர்க்குக் கருவியாகி விடுவோமோ என்ற ஐயம் மனதுள் எழுந்தது—அச்சம் எழுந்தது.

'என் கனவும் வித்யாலய அண்ணன் இலட்சியமும் ஒன்றாகிப் போயின் கவலை இல்லை; மாறானால் இங்கு வாழ்வது எப்படி?... வாழ்வில் எடுத்து வைக்கும் முதல் அடி இது. ஓராண்டு தயங்கினாலும் பரவாயில்லை-தவறாக எடுத்து வைத்துவிடக் கூடாது-வழிதவறிப் போய்விடுவோம்... என்று நினைத்தேன். இப்போதைக்கு இங்குச் சேரவேண் டாம் என முடிவு செய்தேன். அப்படியே சென்று ''அண்ணா! ஒரு மணி நேரம் போதாது-இந்த ஓராண்டு வெளியில் சென்று வேலை தேடிக்கொள்கிறேன்... அடுத்த ஆண்டு வருகிறேன்'' என்றேன்.

'உம்-அடுத்த ஆண்டா?... அப்போது பார்ப்போம்... போய் வா'' என்று சுக்குச் சுவைநீர் தந்து வழியனுப்பி வைத்தார்.

மீண்டும் என் சுமைகளைத் தோளிலும் தலையிலும் சுமந்துகொண்டு பேருந்த நிறுத்தம் நோக்கி நடந்தேன். என் எதிர்காலம் தெளிவாக இல்லை. தோள் தலைச் சுமை களோடு மனத்திலும் சுமை. மிகச் சோர்வாக இருந்தது. விரிந்து பிரிந்து கிடந்த இந்தப் பாதைகளில் எதில் நடப்பது

என்று கலங்கியவனாய் மீண்டும் காந்தி வித்யாலயத்தைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு மாயவரம் பேருந்தில் ஏறினேன். நாம் படித்த காந்திக் குடிலில் வேலை காலி இல்லையே!' என்ற ஏக்கத்தோடு ஊர் வந்து சேர்ந்தேன்.

நான் அறிந்த ஒரு பஞ்சாயத்துத் தலைவர் உதவியில் 'வேர்க்குடி' என்ற ஊரில் ஆசிரிய வேலை கிடைத்தது.

வேர்க்குடி கும்பகோணம் அருகில் உள்ள ஒரு சின்ன கிராமம். கிராமத்தை ஒட்டி ஆறு. ஆற்றங்கரை இரு புறங் களிலும் ஓங்கி உயர்ந்த மரங்கள். ஆற்றை ஒட்டி கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பசும் வயல்கள், மெல்லிய காற்றில் உறங்குகின்ற மண்-மகளுக்குப் பச்சை சாமரம் வீசிக் கொண் டிருக்கும். ஊர் பஞ்சாயத்துத் தலைவரும் நல்லவர். ஊரை, ஊர்மக்களை; பள்ளிக்கூடத்தை நன்றாக வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்.

காந்திய ஆதாரக் கல்வி கற்றுவிட்டுப் பழைய ஆங்கிலேயக் கல்வி முறையில் பாடம் நடத்தப் பெரிதும் வேதனைப்பட்டேன். நான் என்னவோ ஆங்கிலேயர் அமைத்த பாடத்திட்டத்தில் படித்தவன்தான். ஆனால் அப்போது அதன் குறை எனக்குத் தெரியவில்லை. ஏதோ கணக்கு, மொழி அறிவு அந்தக் கல்வி வழி பெற்றேன் என்பது உண்மைதான். ஆனால் ஆதாரக்கல்வி உறுதியான உடல், தெளிவான, நல்லது தீயது பகுத்தறியும் அறிவு, திண்ணமான மனம் இப்படி மனிதனின் ஆளுமையை வளர்க்கும் அத்தனைக் கூறுகளையும் சிறுவர்களுக்கு அமை யும் வகையில் திட்டமிடப்பட்ட திறமான கல்வி முறை. அதில் பயிற்சிபெற்ற எனக்கு இப்போது பழைய முறையிலேயே வகுப்பு நடத்த வருத்தமாக இருந்தது.

மனிதன் நம்பிக்கையில் உருவாகிறான். காந்தியக் கல்வி முதலில் சிறுவர்களிடம் தன்னம்பிக்கையை உருவாக்கி வளர்க்க வல்ல கல்வி. சிறுவர்களுடைய கைக்கு ஒரு தொழிலை, காலுக்கு ஒரு பாதையை, மனதிற்கு ஒரு குறிக்

கோளை, அறிவில் தெளிவை வழங்கும் வகையில் கல்வி அறிஞர் ஜாகிர் உசேன் முதலான அறிஞர்களோடு கலந்து, எண்ணி, தன் வர்தா ஆசிரமத்தில் செயல்படுத்திச் சீர்செய்து உரிமை இந்தியாவுக்கு உரியதாகக் காந்தி அண்ணல் வழங்கிய கல்வித்திட்டம் அது.

ஆனால், ஆங்கிலேயர் வழி அமைந்த பாடத்திட்டம் சிந்தனையைத் தூண்டாமல் நினைவாற்றலைவளர்ப்பதாய், உரிமையை உணரச் செய்யாமல்அடிமை வயப்படுத்துவதாய், அகத்தில் அமைந்து விளங்கும் அறிவாற்றலைத் தூண்டி எழுப்பாமல், புறக்கருத்துக்களைத் திணிப்பதாய் அமைந் திருந்தது பெரிதும் வேதனையைத் தந்தது.

ஒருநாள் பஞ்சாயத்துத் தலைவரிடம் என் மனவேத னையை எடுத்துச் சொன்னேன்.

''தம்பி! நீங்கள் சொல்வது என்னவோ சரியாகத்தான் படுகிறது. ஆனால் அரசாங்கம் அமைத்த கல்வித்திட்டப்படி தானே நாம் செயல்பட வேண்டும். அப்போதுதான் ஈடுபணம் வழங்குவர். காந்தியக் கல்வியை ஒருகாலத்தில் நம் அரசு ஏற்றுக்கொள்ளும். அமுல்படுத்தும். அப்போது நீங்கள் சிறப்பாகச் செயல்படலாம். அல்லது 'கோல்டன் ஏஞ்சல் நர்சரி'-என்று ஆற்றுக்கு அப்பால் ஒரு பள்ளி நடத்துகிறார் களே அதுபோல் நாமும் நம் சொந்தச் செலவில் பள்ளி அமைத்துப் பணம் வசூலித்து வகுப்பு நடத்தலாம்'' என் றார்.

'கோல்டன் ஏஞ்சல் நர்சரி' என்றதும் அந்தப் பள்ளி பற்றிய ஞாபகம் வந்தது. என் நண்பன் சோமுவும் அங்கு வேலை செய்கிறான். ஆங்கிலப் பாடல் எல்லாம் சொல்லித் தருவதாகச் சொன்னான்.

வாய்க்கும் வயிற்றுக்கும் பற்றாக்குறை இருந்தாலும் பணம் கொடுத்துத் தங்கள் குழந்தைகளை அனுப்பும் மக்கள் மனநிலையை எடுத்து அவன்சொன்னதெல்லாம் நினைவுக்கு வந்தது.

''தம்பிகாள்! ஆதாரக்கல்வி பயின்ற உங்கள் பொறுப்பு அதிகம்; நீங்கள் அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். உங்களுக்குப் பொதுமக்கள் ஆதரவும் அவ்வளாகக் கிடைக் காது. ஒருபக்கம் நம் மக்களுக்குத் தங்கள் பிள்ளைகள் எல்லாம் உடனே ஆங்கிலம் கற்று, ஆங்கிலம் பேசி, பொறியியல் வல்லுநர்களாக, மருத்துவ அறிஞர்களாக, ஐ.ஏ.எஸ் அதிகாரிகளாக ஆகவேண்டும் என்ற ஆசை. எப்படியாவது பணக்காரன் ஆகவேண்டும் என்று லாட்டரி சீட்டு வாங்கியது போல எப்படியாவது தன் பிள்ளைகள் உயர்நிலை அடையவேண்டும் அதற்கு ஆங்கிலமே வழி என்று எண்ணி அவர்கள் ஊக்கப்படுத்தும் ஆங்கிலப் பள்ளி உங்களுக்குப் போட்டியாக உள்ளன. இவற்றிடையே நீங்கள் காந்தியக் கல்வி வீரர்களாக உங்களை அனுப்பி வைக் கிறோம்; அஞ்சாமல் செயல்பட வேண்டும்'', என்றுஎங்களை வழியனுப்பும் ஆதாரக்கல்வி ஆசிரியப்பயிற்சி நிறைவு நாள் விழாவில் தலைமை அண்ணா கூறியதை அடிக்கடி நினை வுக்குக் கொண்டுவந்து மனதைத் தேற்றுக்கொண்டேன்.

'நர்சரி பள்ளிகள் எங்கும் தோன்றி வளர்கின்றன. அதனால் தமிழ்மொழி அறிவு, இந்தியப் பண்பாட்டுச் சூழல் கெடுகிறது' என்று தமிழ் அண்ணா அடிக்கடி கூறியதை நேரில் கண்டேன். அப்படி, நர்சரி பள்ளிகள் தோன்றி வளரக் காரணம் அரசு நிர்வாகத்தில், உதவியில் நடை பெறும் பள்ளிகளின் குறைகளே காரணம் என்று உணர்ந் தேன். எது எப்படி ஆயினும், யாரை எப்படித் தேர்ந்தெடுத் தாலும் பிற அரசு பதவிகளுக்கு சாதி, பொருள், இனம், கட்சி, பணம் இப்படி... எந்தப் பின் அணி இருந்தாலும் ஆசிரிய நியமனம் காவல்துறை தேர்வு, நீதியாளர் தெரிந் தெடுப்பு- இந்த மூன்று துறையிலேனும் உண்மைக்கும் நேர்மைக்கும் வாய்ப்பளித்து நல்லவர்களை வல்லவர்களை வாழ்வித்து வளர்த்தால்தான் இந்த நாடு உருப்படும். ஆசிரியத்துறை பால் போன்றது; காவல்துறை மருந்து போன்றது. அவற்றில் கலப்படத்திற்குச் சிறிதும் வாய்ப்புத்

தரக்கூடாது என்ற என் கருத்தைப் பஞ்சாயத்துத் தலைவ ரிடம் அடிக்கடி எடுத்துரைத்தேன். அவர் சிரித்துக்கொண்டே ''அதெல்லாம் நம்மால் ஆகாத செயல்கள்; இந்த நாட்டில், இப்போது உள்ள அரசியல், கட்சி தேர்தல் சூழ்நிலையில் செயல்படுத்த முடியாத சிந்தனைகள். இப்போதைக்கு நம் பள்ளியில், பாடத்திட்டத்திற்குத் தடையில்லாமல், நீங்கள் மாணவர்க்காக என்னென்ன செய்ய வேண்டுமோ செய்யுங் கள்-நான் இயன்ற உதவி செய்கிறேன்' என்று அறிவோடும் அன்போடும் எனக்கு ஆறுதல் சொன்னார்.

அவர் துணையோடு, ஊர்ப் பெரியவர்கள் உதவியோடு மாலை நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் குழந்தை களைத் தோப்புகளுக்கு, வயல்களுக்கு, விலங்குச் சாலை களுக்கு, இசை நாடக அரங்குகளுக்கு எல்லாம் அழைத்துப் போய் புலப் பயிற்சி அளிக்க முயன்றேன். வெப்பம், குளிர்ச்சி, வன்மை, மென்மை-இவற்றைத் தொடு உணர்ச்சி யால் அளந்தறிந்து உணரவல்ல ஆற்றல் குழந்தைகளின் விரல்களுக்கு அளிக்க முயன்றேன். நீண்ட கோடுகள், வளைந்த கோடுகள், சதுரங்கள், நீண்ட சதுரங்கள், வட்டங் கள் இவற்றை ஆற்றங்கரை மணலில் வரையச் செய்து சிறுவர்தம் விரல்களின் திறனை வளர்த்தேன். நீளம், அகலம், உயரம், ஆழம் முதலிய அளவுகள், பச்சை, சிவப்பு, ஊதா முதலிய வண்ணங்கள் ஆகியவற்றைக் கண்ட உடனேயே மதிப்பிடவல்ல திறன் அவர்கள் கண்கள் பெறுமாறு செய்வதில் ஓரளவு வெற்றி பெற்றேன். பற்பல பறவைகள், விலங்குகள் இவற்றின் குரல்களை, கார், பேருந்து, இரயில், விண்ணூர்தி முதலிய ஊர்திகள் எழுப்பும் பல்வேறு ஒலி வேறுபாடுகளை உணரும் வல்லமையை அவர் தம் காதுகள் பெறுமாறு பயிற்சி தந்தேன். அந்த ஒலிகளை எழுப்பும்ஆற்றலைத் தரவல்ல நாப் பயிற்சியை பதிவு நாடாக் கள் வழி குழந்தைகளுக்கு அளிக்க முயன்றேன். ஒரு தொலைக்காட்சி பெட்டியும் சில ஒலி, ஒளி பதிவு நாடாக் களும் ஊர்த் தலைவர் வழங்கினார். ஆற்றங்கரை மணலில்

பல்வேறு மணல் வீடுகள் கட்டச் சொல்லியும், ஆற்றுக் களி மண்ணில் பற்பல பொம்மைகள் செய்யச் சொல்லியும் குழந்தைகளின் மன ஆர்வத்தையும் கற்பனைத் திறனையும் கைவன்மையையும் வளர்க்க முயன்றேன். மாலை நேரங் களில், விடுமுறை நாட்களில் குழந்தைகள் வரும் சிற்றூர்க்கு, சேரிகளுக்குச் சென்று அவரவர் பெற்றோர் சூழல், வீட்டுச் சூழல்களை அறிந்து ஏற்ற உதவிகள் செய்து வரலானேன். தமிழில் இனிய எளிய பாடல்களை, எதுகை மோனை ஒலி நயம் நிறைந்த பாடல்களைக் கற்றுக் கொடுத்தேன். மெல்ல மெல்ல மாணவர்கள் சேர்க்கை அதிகமாகியது. பஞ்சாயத்துப் பள்ளியில் பயில்வதும் பயனுள்ளது என்பதைப் பெற்றோர் உணரத் துவங்கினர்; நர்சரி ஆர்வம் குறையலாயிற்று.

இப்படி இரண்டு ஆண்டுகள் ஓடின. மலரின் நினைவு அவ்வப்போது வரும்; போகும். இதற்கிடையே ஒருநாள் 'பொங்கல்' அன்று மு.வ.வுக்கு 'அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தாங்கள் கூறியபடி திருக்குறள் ஆயிரத்து முந்நூற்று முப்பதையும் மனப்பாடம் செய்து விட்டேன். மேலும் தங்கள்பால் வந்து கற்க விரும்புகிறேன். உதவ வேண்டும். என்னுடைய பள்ளியிறுதி மதிப்பெண் சராசரி 70 விழுக்காடு' — என்று அஞ்சல் அட்டை ஒன்று எழுதினேன்.

உடனே, ஓரிரு நாளில் 'இளைஞ! மகிழ்ச்சி. இந்த சூன் திங்கள் வருக! பச்சையப்பனில் இடைநிலை வகுப்பில் சேர்ந்து தமிழ் பயிலலாம்.

பொருளுக்கு என்ன செய்வாய்

'இடைக்கண் முறிந்தார் பலர்—எண்ணித் துணிக'

மு. வரதராசன்.

என்ற அஞ்சல் அட்டை என் முகவரிக்கு வந்து சேர்ந்தது மணிகளைச் சரம் சரமாய்க் கோர்த்து வைத்தது போன்ற அந்த எழுத்துக்களைப் பார்த்துப் பார்த்து அவை எனக்

களித்த ஊக்கத்தை உணர்ந்து உணர்ந்து மகிழ்ந்தேன். பேராசிரியர் மு. வ., தமிழகம் மதித்துப் போற்றிய சான்றோர். மு. வ., புதின எழுத்தாளர். மு. வ. விடமிருந்து ஒரு துவக்கப்பள்ளி ஆசிரியனுக்கு வந்த கடிதத்தைக் கண்டு உடன் ஆசிரியர்களும், ஊரில் உள்ள பெரியவர்களும் இளைஞர்களும் பாராட்டிப் பேசினார்கள்.

''ஐயா! தவறாமல் ஜூன் திங்கள் முதல் நாள் தங்களைச் சந்திப்பேன். நான் ஆசிரியன். காலை, மாலை நேரங்களில் தங்கள் குழந்தைகளுக்கோ, தாங்கள் அறிமுகம் செய்பவர்கள் குழந்தைகளுக்கோ வீட்டிற்குச் சென்று தனிப்பாடம் சொல்லிக் கொடுத்து வேண்டிய பொருளைச் சேர்த்துக் கொள்வேன். எனவே தவறாமல் இடைநிலை 'தமிழ் சிறப்புப் பிரிவில் எனக்கொரு இடம் தந்து உதவ வேண்டும்'' என்று உடனே பதில் எழுதிவிட்டு - அதே நினைவாய் மேற்கொண்டு செய்ய வேண்டிய பணிகளில் ஈடுபட்டேன்.

தாய்க்கும், தங்கைக்கும் ஒருவருட காலத்திற்குப் பொருள் நெருக்கடி இன்றி வாழவகை செய்தேன். பாடங்களை ஒழுங்காக விரைவாக நடத்தி முடித்தேன். கோடை விடுமுறைக்கு முன்பே குழந்தைகளிடம் கூறி விடைபெற்றுக் கொண்டேன். பள்ளி நிர்வாகியிடமும் முன்கூட்டியே நிரந்தர விடுப்பு வேண்டி விண்ணப்பித்தேன் — எல்லாம் எண்ணியவாறு இயன்றன. சென்னை வந்தேன். மு. வ. வைக் கண்டேன் என்னைக் கல்லூரியில் சேர்த்துக் கொண்டார். மூன்று பேராசிரியர்கள் வீட்டில் தனிப்படம் சொல்லித்தர ஏற்பாடு செய்து உதவினார். தன் வீட்டின் மாடியின் கிழக்குப் பக்கத்தில் இருந்த ஓர் அறையைச் சுட்டிக்காட்டி இதில் நான் எழுதும்போது வந்து தங்கி எழுதுவேன்—நீ இதில் இரு. ஏதாவது எழுதவேண்டி இருந்தால் நீயும் நான் சொல்வதை எழுதி எனக்கு— உதவலாம்'' — என்று அந்த அறையை எனக்கு அளித்தார்.

ஒருநாள் மாடியறையிலிருந்த என்னை, ''கார்மேகம்! கார்மேகம்!'' என்று கீழிருந்தே இறங்கி வரும்படி மு. வ. அழைத்தார்கள் — கிடுகிடு என்று படியில் இறங்கி வந்தேன்.

''இதோ பார் இவர்களை உனக்குத் தெரியும்—நினைவிருக்கிறதா?'' என்றார்.

''அண்ணா!'' என்று கூவிவிட்டேன். இளமுருகும் 'மலரும்' சோபாவில் அமர்ந்திருந்தனர்.

அண்ணா எழுந்தார். என் தோளைப் பற்றியபடி ''தம்பி நலமா! நினைத்தபடியே ஐயாவிடம் வந்து சேர்ந்துவிட்டீர் கள்'' என்று என்னென்னவோ சொல்லிக்கொண்டு சென் றார். என் எண்ணம் எல்லாம் மலரைச் சுற்றி நின்றன.

அந்த அறியாப் பார்வை கடந்து ஏதோ ஒரு உறுதிப் பார்வை அவள் முகத்தில் நிலைத்திருக்கக் கண்டேன். வெண்மையான ஆடை; அணிகலன்கள் எதுவும் இல்லை. மூன்று அழகான திருநீற்றுக்கோடுகள் நெற்றியில் விளங்கின இடையே சிறிய சந்தனப் பொட்டு ஒன்று திகழ்ந்தது-அன்று அந்த மலரிடம் சமமாக எளிதாக நெருங்கிய மனம் இன்று ஏனோ பெரிதும் தயங்கியது.

என் எண்ணம் என்வசம் இல்லை என்று அறிந்து கொண்டோ என்னவோ ''தம்பி! எங்கே நினைவு!... காந்திக் குடிலுக்குப் போய்விட்டதா?'' என்று கேட்டபடியே தோளில் கைவைத்துத் தட்டினார்.

''உம்! உம்!'' என்று சுதாரித்துக் கொண்டேன்.

''நாங்கள் இன்று இரவு விரைவு வண்டியில் டில்லிக்குப் போகிறோம். மலருக்கு டில்லியில் ஆங்கில விரிவுரையாளர் பதவி கிடைத்துள்ளது'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே கார் வந்துவிட்டது - பேராசிரியரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுவிட்டனர். மலர் பேராசிரியருக்கும் எனக்கும் வணக்கம் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

அவர்கள் போன பிறகு ''பாவம்! 'அருள்' என்ற இளைஞனை மணந்துகொள்ள மலர் விரும்பினாள். அவனோ இப்போதைக்குத் திருமண எண்ணம் இல்லை என்று 'வர்தா' காந்தி ஆசிரமத்திற்குப் போய்விட்டானாம். இந்தப் பெண்ணும் திருமணமே வேண்டாம் என்று பிடிவாதமாகத் தில்லிக்குப் போகிறாள்'' என்று எனக்குக் கேட்கும்படித் தனக்குத்தானே பேராசிரியர் பேசிக்கொண்டார்.

அருள்பால் எனக்கு மதிப்பும் மரியாதையும் பெருகிற்று. மலர்பால் இரக்கம் உண்டாயிற்று. எவ்வளவு மென்மையான அழகான பெண் - அதற்குள் துறவிபோல் வெள்ளாடை உடுத்திக் கொண்டு வடநாட்டு வாழ்வு வேண்டிப் புறப்பட்டு விட்டாளே-தமிழகத்தில் எங்காவது ஏன் சென்னையிலேயே பணி ஏற்றால் சந்திக்கும் வாய்ப்பாவது ஏற்பட்டிருக்கும் இனி எப்போது பார்க்கப் போகிறோமோ'' என்று என் மனம் தவித்தது. ஓரிரு நாள் அதே நினைவில் தடுமாறினேன். சென்னை இயந்திர வாழ்வு அவள் நினைவை மெல்ல மெல்ல அகற்றிவிட்டது. அவளை நான் மறந்தே போனேன்.

4

முதலாண்டு இடைநிலை வகுப்புத் தேர்வில் ஆங்கிலத்தில் நூற்றுக்கு 23 மதிப்பெண்களே பெற்றிருந்தேன். ஆங்கிலப் பேராசிரியர் சுப்பையன் என்னைத்தனியே அழைத்து என் விடைத்தாளை என்னிடம் கொடுத்து நான் செய்த பிழைகளை எல்லாம் சுட்டிக் காட்டினார்.

''கருத்துக்கள் நிறைய இருக்கின்றன; பெரிதும் முயன்று கற்றது தெரிகிறது-ஆனால் தக்க சொற்கள் இல்லை; ஒருமை பன்மை மயக்கம், நிகழ்கால, இறந்த காலத் தடுமாற்றம் இவைதான் உங்கள் மதிப்பெண்

குறையக் காரணம். வருகிற ஆண்டு இறுதி பல்கலைக்கழகத் தேர்வு ஆண்டு. 40 விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப் பெண் பெற்றுவிடவேண்டும்'' என்று அன்போடு எச்சரித்து அனுப்பினார்.

அன்று மாலை சோர்வோடு இருந்த என்னைப் பார்த்து,

''கார்மேகம்! என்ன சோர்வாக இருக்கிறாய்? ஏதாவது மாணவர் தேர்தல் தகராறா?'' என்றார் மு. வ.

''இல்லை அப்பா! ஆங்கிலத்தில் மதிப்பெண் மிகக் குறைவாக வாங்கியுள்ளேன். இறுதித்தேர்வில் தவறி விடு வேனோ என்று அச்சமாக இருக்கிறது. சிறு வயதிலிருந்தே ஆங்கிலம் என்றால் எனக்கு அச்சந்தான்'' என்றேன்.

''பெரும்பாலும் எல்லாக் கிராமத்துப் பிள்ளைகளும் இப்படித்தான் வருந்துகிறார்கள். நான் பலரைப் பார்த் திருக்கிறேன். முயற்சித் திருவினை ஆக்கும். சொந்தமாக ஆங்கிலத்தில் எழுத நினைக்காதே. சொந்த சிந்தனை சொந்த மொழிநடை எல்லாம் தாய்மொழியில்தான் முடியும் ஆங்கிலத்தில் சிலர் சிந்தித்து, சிறப்பாக எழுதுகிறார்களே என்று யோசிக்கிறாயா? அதற்குக் காரணம் உனக்குப்புலப் படவில்லையா? அதற்குக் காரணம் அவர்கள் ஆங்கிலத்தைத் தங்கள் தாய்மொழி ஆக்கிக்கொண்டதுதான். நாளை யிலிருந்து ஒன்று செய். ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் ஆங்கிலமே படி. அரிய தொடர்களை, நீ படிக்கும் ஆங்கிலக் கவிதை ஆசிரியர் பற்றிய பதிப்பாளர் குறிப்புக்களை, இடஞ் சுட்டி விளக்கும் பகுதிகளை அப்படியே சிறு சிறு தாளில் எழுதிக்கொள். சட்டைப்பையில் வைத்துக்கொள். அவ்வப் போது சிறிதுநேரம் கிடைத்தாலும் ஒன்றிரண்டு துண்டுத் தாள்களை எடுத்து நீ எழுதி உள்ளதை மனப்பாடம் செய்து கொள். இரவில் படுக்கைக்குப் போகுமுன் மனப்பாடம் செய்த ஆங்கிலப் பாடல்களை, குறிப்புக்களை நெஞ்சில்

நினைத்து நினைத்து இருத்திக்கொள். எங்கேனும் தடுமாற்றம் வரின் மீண்டும் அந்தத் துண்டுத் தாளை எடுத்து நினைவு படுத்திக்கொள். காலையில் எழுந்தவுடன் பகலில் குறிப்பெடுத்து, இரவில் நினைவு கூர்ந்த பகுதிகளை அப்படியே எழுதிப் பார். இப்படியே தொடர்ந்து செய். ஆங்கிலத்தில் எளிதாகத் தேறிவிடுவாய். அச்சம் வேண்டா!'' என்று சொல்லிக் கீழே ''என்னுடன் வா!'' என்று அழைத்துச் சென்றார்.

அச்சாகிய அவர் புதினங்களின் கையெழுத்துப்படி பல கட்டுக்கள் இருந்தன. ஒரு கட்டை என்னிடம் தந்து, ஒரு பக்கம் ஒன்றும் எழுதாத என் கையெழுத்துப்படி இது. நானூறு ஐந்நூறு தாள்கள் இருக்கும். ஒவ்வொரு தாளும் காலையில் எழுதிப் பார்க்க இவை உனக்குப் பயன்படும். கவலை வேண்டா—முறை அறிந்து முயன்றால் முடியாதது இல்லை'' என்று எனக்கு ஆறுதல் கூறி, தக்க வழிகாட்டி உதவினார்.

விடுமுறையில் ஊருக்குச் செல்லவில்லை. அம்மாவும், தங்கையும் சென்னைக்கே வந்துவிட்டனர். சேத்துப்பட்டு கிராமணித் தெருவில் சிறிய அறை ஒன்று 20 ரூபாய் வாடகையில் கிடைத்தது. அதையே வீடாக்கிக் கொண்டோம். கிழக்குப் பார்த்த சுவரில் வட்டமாக மஞ்சள் தடவி நடுவில் குங்குமம் இட்டு அதைச் சாமி அறையாகவும் மேற்கு பார்த்த சுவர் மூலையில் அடுப்பை வைத்து அதையே சமையலறையாகவும், இடையில் ஒரு பாய் விரித்து அதையே படுக்கை அறையாகவும் அம்மா உருவாக்கிவிட்டார்கள். செலவு சிறிது அதிகமாகிவிட்டதால் இன்னும் ஒரு தனிப் பாடம் கற்பிக்கும் வாய்ப்பைப் பெருக்கிக்கொண்டேன்.

''உறவு விழா, நண்பர் விழா என்று இறுதி ஆண்டு எந்த விழாவுக்கும் போக வேண்டா. அறியாமையில் அவர்கள் வருந்துவர், வருந்தினால் வருந்திவிட்டுப் போகட்டும். தேர்வில் சிறப்பான வெற்றிபெற்று விரிவுரையாளராகிவிட்

டால் அப்போது எல்லோரும் தானே தேடி வருவார்கள். இப்போது எல்லாருடைய விழாக்களிலும் பங்குகொண்டு மகிழ்வூட்டித் தேர்வில் தோல்வியுற்று வேலையில்லாமல் திரிந்தால் உன்னிடம் யாரும் நெருங்கமாட்டார்கள். இது தான் உலகம்'' என்று சொன்ன மு. வ. அப்பாவே ஒருநாள் இரவு மாடிக்கு வந்து...

''கார்க்மகம்! நாளை காலை நாம் இருவரும் ஒரு திருமணத்திற்குப் போகிறோம். தயாராக இரு. எனக்கு மிக வேண்டியவர்கள் திருமணம். உனக்கும் வேண்டியவர் கள்தான். உன்னைத் தவறாமல் அழைத்து வரும்படி இளமுருகு எழுதியுள்ளார். மலருக்குத் திருமணம். யாரோ ஒரு போலீசு கமிஷனராம். தில்லியில் பணியாம். சொந்த ஊர்க்காரராம். பெற்றோர் வற்புறுத்தலால் மலர் திரு மணத்தை ஏற்றுக்கொண்டாளாம். வரத்தான் போகிறாயே நேரில் பார்த்துக்கொள்ளலாம். காலையில் 6 மணிக்கு ஆயத்தமாய் இரு'' என்று சொல்லிவிட்டுக் கீழிறங்கிப் போய் விட்டார்.

எனக்குப் படிப்பு ஓடவில்லை. படித்துக் கொண்டிருந்த சிலப்பதிகாரக் கானல்வரிப் பாடல் ஏட்டைவிட்டு என் இதயத்துள் நுழைந்தது.

தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள், அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்

என்ற மாதவியின் மயங்கிய உள்ளம் என் உள்ளம் ஆகியது— மலருக்காக ஏங்கிற்று. எப்படியோ மலர் தன் சாதிப்பெண் என்று தெரிந்து கொண்டு அந்த கமிஷனர் அவள் அப்பாவை வற்புறுத்த இந்தத் திருமணத்திற்கு ஏற்பாடாயிற்றாம். அப்பாவின் வற்புறுத்தலுக்கு இணங்கி, அம்மாவின் கண்ணீருக்கு ஆட்பட்டு 'மலரும்' ஒப்புக் கொண்டாளாம்''.

என்ற சொற்கள் இரவெல்லாம் என் செவியில் ஒலித்துக் கொண்டே இருந்தன. காலையில் உட்லன்சு ஓட்டலுக்குப் போனோம். மணமேடையைப் பார்த்தேன். விதியே! மலர்க்கு இப்படி ஒரு கதியா? என்று நினைத்து அருகில் செல்ல நினைத்தேன். அந்த முரட்டுக் கமிஷனரின் பார்வை யாரும் மலரிடம் நெருங்குவது பிடிக்கவில்லை என்பதை உணர்த்தியது—தூரத்தில் இருந்தே கனிவுடன் பார்த்தேன். அவளும் கலக்கத்துடன் ஒரு பொய்ப்புன்னகை செய்தாள். கண்ணகியின் வாயல் முறுவல் கண்டு கோவலன் பெற்றோர் கலங்கியது போல நானும் கலங்கி வருந்தினேன். மு.வ. அப்பா முகமும் வாடியிருந்தது.

திரும்பும்போது ''என்ன செய்வது-கடவுளின் திருக்கூத்து நுட்பம் விளங்கிக்கொள்வது கடினமாகத்தான் இருக்கிறது. கணவன் நல்லவனாக இருந்தால் மனைவி அப்படி இல்லை. மனைவி நல்லவளாக இருந்தால் கணவன் குடிகாரனாகவோ, கூத்திக் கள்ளனாகவோ இருக்கிறான். நல்ல ஆணுடன் நல்ல பெண், கெட்டவனுடன் கெட்டவளைச் சேர்த்து வைத்தால் பிரபஞ்ச நாடகம் சுவையாக நிகழாது என்று இப்படித் தாறு மாறாகக் கூட்டிவைத்து வேடிக்கைப் பார்ப்பதுதான் அவன் விளையாட்டோ? அல்லது வாழ்வில் பற்றுவிட்டு அவனை பற்றிக்கொள்ள வேண்டும் என்று இப்படிச் செய்கிறானோ?'' என்று அந்தத் திருமணத்தின் பொருத்தம் இன்மையைக் கவலையுடன் என்னிடம் கூறிக்கொண்டே வந்தார் மு. வ.

ஆனர்சு படிப்பு முடிந்தது. வேலைக்கு முயன்று கொண்டிருந்தேன். மு.வ. பச்சையப்பன் அறக்குழுவினரிடம் சொல்லி எனக்குத் தமிழ்த்துறையில் டியூடர் வேலை ஒன்று வாங்கித் தரமுயன்றார். அப்போது நண்பர் நடராஜன் ஆந்திர சித்தூரில் தமிழ்விரிவுரையாளர் வேலை இருப்பதாகக் கூறவே-மு.வ. ''இங்கு டியூடராக இருப்பதைவிட அங்குத் துறைத் தலைவனாக விரிவுரையாளராகச் செல்வது மேல்'' என்று வழியனுப்பி வைத்தார்.

சித்தூரில் தங்கியிருந்தாலும் மு.வ.வை மாதம் ஒருமுறை தவறாமல் சென்னைக்குச் சென்று கண்டு வருவேன். விடுமுறையில் அவர் பெங்களூரில் தங்கி நூல் எழுதும்போது சென்று உதவிவருவேன்.

ஒரு முறை சென்னை சென்றிருந்தபோது ''கார்மேகம் உனக்குத் தெரியுமா? மலர் நடத்தையில் அந்தப் போலீசு அதிகாரி சந்தேகப்பட்டு இடையறாத் தொல்லை தந்துள்ளான். அருள் காதல் எப்படியோ தெரிந்து போயிற்று. தில்லியிலும் தன் ஆங்கிலப் புலமையால் பலபேர் போற்றுதலுக்கு அவள் ஆளானதும் அவருக்குப் பிடிக்கவில்லை. இலக்கியக் கட்டங்களுக்குப் போவதையும் கண்டித்திருக்கிறார். பேராசிரியர் பதவியை விட்டுவிட வேண்டும் என்று வற்புறுத்தினாராம். இன்று காலை பத்திரிகையில் தில்லி பெரிய போலீசு அதிகாரியின் மனைவி தற்கொலை என்ற தலைப்பைப் பார்த்து நடுங்கிப் போய்விட்டேன். மலர்தான் மடிந்து போய்விட்டாளோ என்று நிலைகலங்கிப் போய்விட்டேன். பிறகு மெல்லத் தொடர்ந்து படித்தபோது நல்ல காலமாக இறந்தது மலர் இல்லை. யாரோ பாவம் — மலர் போன்ற இன்னொரு பெண். கணவனின் சந்தேகத்திற்கு ஆளாகிக் கொடுமை தாங்க முடியாமல் உயிரை மாய்த்துக் கொண்டுவிட்டாள்.

''பிடிக்கவில்லை என்றால் ஏன் எதற்கு என்று கேட்காமல் பிரிந்து வாழச் சட்டத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழ்நாட்டுப் பெண்கள் பலர் பிரிந்து வாழும் உரிமை இல்லாததால் உரிமைக்கு வழக்கு தொடுத்து வாதாட இயலாததால் இப்படித் தற்கொலை செய்து கொள்வது வருந்தத்தக்கது-மாற்றத்தக்கது'' என்றார்.

''மலரே! மலரே! நீ எங்கிருக்கிறாய் - உன்னிடம் என் உள்ளத்தை எடுத்துரைக்க இயலவில்லையே - நீ அருளை நாடாது இருந்திருந்தால் எப்படியும் என் இதயத் துடிப்பை நீ கேட்டிருக்கச் செய்திருப்பேன்; பொன்னாக உன்னைப் போற்றியிருப்பேன்'' என்று மு. வ. வுக்குதெரியாமல் வாய், பேசாது அழுதேன்.

5

'சிற்றூர்' தான் சித்தூர் என மருவிற்று என்று எண்ணினேன். ஆனால் அங்கு வாழ்ந்த பெரியோர் பலர் சித்தர் வாழ்ந்த ஊர் சித்தூர் என ஆயிற்று என்றனர். கந்த புராணத்தில் இடம் பெறும் வள்ளிமலை திருத்தணி முதலியவற்றைக் குறிப்பிட்டுச் சித்தூரும் அதில் இடம்பெறும் பழைய ஊர்; சைவசமய ஊர், சித்தர் வாழ்ந்த ஊர் என்றனர்.

சிற்றூர்தான் சித்தூர் ஆயிற்றோ-சித்தர் ஊர்தான் சித்தூர் ஆயிற்றோ? எது எப்படி ஆயினும் அது என்னைச் சென்ற உடனேயே கவர்ந்துவிட்டது. மலைகள் ஒன்றுகூடக் காண இயலாத கீழைத் தஞ்சையில் பிறந்து வளர்ந்து கடற்கரை வெளியிலேயே திரிந்த நான் குன்றுகள் சூழ்ந்த, அருவிகள் ஓடும், நீவா நதி தவழும், தோப்புகள் சூழ்ந்த சித்தூரின் இயற்கை அழகில் பெரிதும் மயங்கிவிட்டேன். ஊருக்கு மேற்கே விளங்கிய மொட்டை மலையும், அதன் அருகே அமைந்த ஏரியும், அதில் வாழும் கொக்கு, நாரை, நீர்க்கோழி முதலிய பறவைகளும் ஒவ்வொருநாளும் காலையும் மாலையும் தன்பால் வந்து தங்குமாறு என்னை அழைத்தன. ஜீவ காருண்ய சபை வடலூர் வள்ளலார் தைப்பூசத் திருவிழாவிற்கு திரு.வி.க. வந்திருந்தபோது நடந்து உலாவியதாகக் கூறப்பெற்ற நீவா நதிக்கரையில் அந்தி மாலையில்அமர்ந்து, மொட்டை மலைக்குப் பின் மறையும் மாலைக்கதிர்க் காட்சியில் தன்னை மறந்த லயம் தன்னில் இருக்கும் இன்பம் பெற்று வந்தேன்.

சித்தூர் ஏழெட்டுத் தெரு கொண்ட சின்னஊராக இருந்தாலும், தெருவுக்கு ஒரு அறநிலையம், தத்துவ மையம், பஜனைக்கூடம் அமைந்து அந்த ஊரே ஒரு கோயிலாக எனக்குத் தோன்றியது. கிழக்கு மேற்கில் செல்லும் மாதா கோயில் தெருவில் விளங்கிய ஜீவகாருண்ய சபை மிகப் பெரிய

சபை. பல ஆண்டுகளாக வள்ளலார் கொள்கையை வளர்த்து வரும் சபை அது. எனக்கு இருக்க இடம் தந்து ஆதரித்து வரும் மோகனவேல் செட்டியார் மேற்பார்வையில் பல அறவாணர்கள் அங்குவந்து தெய்வத் திருப்பொழிவு பல ஆற்றிச் செல்வர். கந்தர்சஷ்டியின்போது ஆனந்தன் செட்டியார் முயற்சியில் பத்துநாட்கள் கந்தபுராணச் சொற்பொழிவு நடக்கும். தெற்கு வடக்கில் அமைந்த சித்தூர் காட்பாடி சாலையில் தபோவனம் அமைந்திருந்தது. அதனைப் போற்றி வளர்த்தவர் திரு. கிருஷ்ணசாமி செட்டியார். அவர் தெய்வத் திருப்பொழிவுகள் எல்லாம் அங்கு நிகழ உதவி வந்தார். அங்குத்தான் வள்ளிமலை மௌனசுவாமிகளைப் பார்த்துப் பழகும்பேறு பெற்றேன். இராமகிருஷ்ண மன்றம் வைத்து வளர்த்த திரு. உலகநாதன் அவர்களையும் அங்குத் தான் சந்தித்துப் பழக நேர்ந்தது. ஊருக்கு வடமேற்கே ராம விலாச சபை. கம்பராமாயண சொற்பொழிவுக்கு ஆண்டு தோறும் திரு. இராகவன் அவர்கள் ஏற்பாடு செய்து வந்தார். இவற்றுக்கு எல்லாம் மேலாக தொழிலதிபர் ரெட்டியார் அவர்கள் சித்தூரில் சின்மயாமிஷன்' வைத்து அத்துவித தத்துவத்தை வளர்த்து வரலானார். சின்மயானந்தரை சித்தூருக்கு அழைத்து நாற்பத்தெட்டு நாள் 'கீதை யக்ஞம்' நடத்திய சிறப்புக்கு உரியவர் இவர். இவர்கள் அத்துணை பேரும் தாங்கள் நடத்தும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்குக் கல்லூரித் தெலுங்கு விரிவுரையாளர் ஒவ்வொருவரை அழைத்துச் செல்வர். அப்போது அனைவரும் என்னையும் தமிழில் சொற்பொழிவாற்ற அழைப்பர். இப்படி ஊர்ச் சமயச் சான்றோர்களுடனும் அவர்கள் நடத்தும் சபைகளுடன் சமய இலக்கியத் தொடர்புதானே வளரலாயிற்று. எல்லோரும் என்னிடம் தனித்தனியே அன்பு காட்டினர். அதனால் சித்தூர் எனக்குப் புதியதோர் பொன்னகரமாகத் தோன்றிற்று.

அங்கு வாழ்ந்த தமிழர்களும், தமிழாசிரியர்களும் தமிழ் அறிஞர்களும் என்னிடம் தனிப்பேரன்பு காட்டினர். தங்கள் வீட்டு உறவினருள் ஒருவனாகக் கருதி இந்து, இஸ்லாமிய,

கிறித்துவத் தமிழர்கள் என்னைத் தங்கள் வீட்டு இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள அழைத்தனர். நானும் என்னிடம் பயிலும் அவர்கள் பெற்ற மக்களை என் மக்களாகக் கொண்டு அவர்கள் வாழ்விலும் வளர்ச்சியிலும் என்னை அர்ப்பணித்துக் கொண்டேன்.

ஒருநாள் மு வ.வின் கடிதம் ஒன்று வந்தது. ''கார்மேகம்! நான் பெங்களூர் செல்கிறேன் ஒருவாரம் விடுமுறை எடுத்துக்கொண்டு வா. எழுத்துப்பணி உள்ளது.

'சமயச் சொற்பொழிவுக்கு ஒத்துக்கொள்ளலாமா? மங்கலங்கிழார் மன்றங்களுக்குச் சென்று பேசலாமா? 'நீங்கள் பேச்சு வேண்டா-செயல்வேண்டும்' என்ற கொள்கையினர் ஆயிற்றே' என்று எழுதியிருந்தாய்.

நான் வாழ்வது தமிழகம். இங்குச் சொற்பொழிவு ஆற்றுதற்கு என்றே பலர் உள்ளனர். இசை வித்வான்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கென தம்புரா சுருதிக்கு, தாளத்துக்கு, மிருதங்கத்திற்கு, வயலினுக்கு, கஞ்சிராவுக்கு, கடத்துக்கு-ஒரு குழு வைத்திருப்பது போலப் பட்டிமன்றக் குழுவினர் பலர் இங்குப் பேசக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு அப்படி இல்லை. நீ எல்லாச் சமயக் கூட்டங்களிலும் பேச வேண்டும். எல்லாரிடமும் சிறப்புப் பெற வேண்டும். மொழி பெயர் தேயம் ஒன்றில் வாழ்கின்ற தமிழாசிரியர் ஒரு தனி மனிதன் அல்ல. அவன் தமிழ்ப் பண்பாட்டில் தமிழகப் பிரதிநிதியாக உள்ளான். உன் பெருமை தமிழ்ப் பெருமை உன் பண்பாடு தமிழ்ப் பண்பாடு. உன்னை வைத்தே அங்கு வாழும் தெலுங்கர் தமிழை, தமிழரை மதிப்பர். உன்னை வைத்தே அங்கு வாழும் சிறுபான்மைத் தமிழரும் தமிழ்மொழி பயில, தமிழைக்காக்க ஆசைப்படுவர். எனவே தவறாமல் எல்லாச் சமயக் கூட்டங்களிலும் கலந்துகொண்டு நீ உணர்ந்த உண்மையை எடுத்துச் சொல்; வள்ளுவர் சிந்தனை எப்படி அந்தந்த சமய தத்துவத்துக்கு விளக்கமாக அமைந்துள்ளது என்று தெளிவு செய்.

இன்னொன்று குறித்திருந்தாய். மங்கலங்கிழார் மன்றம் பற்றி. அங்கெல்லாம் தவறாமல் சென்று தமிழ் இலக்கியச் சொற்பொழிவாற்று. இன்று சித்தூர், நகரி, புத்தூர்-முதலிய எல்லைப்புற ஊர்களில் எல்லாம் தமிழ் வாழக் காரணமான ஒரு வெள்ளை வேட்டித் துறவி அவர். மௌன சுவாமிகள் பற்றியும் மங்கலங்கிழார் பற்றியும் திரு.வி.க. விடம் சென்றபோது ஒருமுறை உரையாடியது நீ மறந்து விட்டாய் என நினைக்கிறேன். ''உண்டால் அம்மா! என்று தொடங்கி தமக்கென முயலாதோன்தாள் பிறர்க்குரியாளர் உண்மையானே!'' என்று அன்று பாடினானே கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி அந்தப்பாடலின் ஒவ்வொரு எழுத்துக்கும் உருவமாக அமைந்தவர் மங்கலங்கிழார். உண்மையில் தமிழ் உலகு இன்று அங்கு வாழ அவர்தான் காரணம். மங்கலங்கிழார் மாணவர் காலால் இட்டபணியைத் தலையால் செய்.

இன்னும் ஒன்று. நீ வருந்துவாய். நேற்று இளமுருகு இங்கு வந்திருந்தார். அந்த தில்லி போலீசு கமிஷனரின் கொடுமை தாங்காமல் மணமுறிவு பெற்றுக் கொண்டு மலர் எங்கோ வெளிநாட்டுக்குப் போய்விட்டாளாம். எங்குப் போனாள், என்ன ஆனாள் என்று இன்னும் சரியாகத் தெரியவில்லையாம். எனக்கு ஏதாவது மலர் எழுதியிருப்பாள், செய்தி தெரிந்திருக்கும் என அறிந்துகொள்ள அவர் வந்தார். 'ஒன்றும் தெரியவில்லை' என்றேன். வருத்தத்தோடு போய்விட்டார். இதைக் கேட்டு மலரின் தாய் இறந்துவிட்டாராம். தந்தை நீலகண்டர் படுத்த படுக்கையாகிவிட்டார். பெங்களூருக்கு வா.

மு. வரதராசன்

கடிதத்தின் கடைசிப் பத்தியை நான்கைந்து முறை படித்தேன். கடிதம் எல்லாம் கண்ணீரால் நனைந்து போய் விட்டது.

'மலர்'-நீ சாகக்கூடாது, சாக மாட்டாய், நீ உறுதியானவள்-நீ வாழ்வாய் வாழவேண்டும்' என்று பித்துப் பிடித்தவன்போல் மொட்டை மலையடிவாரம் சென்று ஏரிக்கரையில் அமர்ந்து அழுது தீர்த்தேன்.

மொட்டை மலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் வழியில் மோகனவேல் செட்டியார் வீட்டிற்குச் சென்றிருந்தேன்.

'நூறு ஆயுசு கார்மேகம் - உனக்கு!' ''வள்ளியம்மா! பார்த்தாயா - இப்போதுதானே பேசிக் கொண்டிருந்தோம். கார்மேகம் வந்துவிட்டார் பார்த்தாயா! நூறு வயசுப்பா உனக்கு' என்று வாழ்த்திவிட்டு, இப்போதுதான் தொலைபேசியில் ரெட்டியார் பேசினார். உங்களோடு பேசவேண்டும் என்றார்' என்று சொன்னார்.

அங்கிருந்தபடியே தொலைபேசியில் ரெட்டியாரிடம் தொடர்புகொண்டேன். செயலாளர் கிருட்டிணசாமி, 'ஆமாம் ஐயா உங்களிடம் பேச வேண்டும் என்றார்-இதோ தொடர்பு படுத்துகிறேன் பேசுங்கள்'' என்றார்.

''ஐயா வணக்கம். கார்மேகம் பேசுகிறேன்.''

''நன்றி-ரெட்டி பேசுகிறேன். அடுத்தமாதம் இமாலயச் சாரலில் உள்ள சின்மயானந்தர் சித்தாசிரமத்திற்குப் பத்து பேர் போறோம். ஒங்களையும் நெனச்சுக் கொண்டோம். வர சௌகரியப்படுமா''

''தவறாமல் வருகிறேன். கிடைத்தற்கு அரிய பேறு சுவாமி சின்மயானந்தர் தோற்றுவித்துச் சமயப் பணிபுரியம் அந்த ஆசிரமத்தைக் காணும் பெரிய வாய்ப்பைத் தாங்கள் தந்ததற்கு இருகையும் கூப்பி வணங்குகிறேன். போய்வர எவ்வளவு ஆகும்? முதல்தேதி தந்துவிடுவேன்' என்றேன்.

''அதெல்லாம் ஒன்னும் வேண்டாம்-உங்க அன்பு போதும்'' என்று சிரித்துக்கொண்டே தொலை-பேசியைக் கீழே வைத்தது செவியில் கேட்டது.

—x—

ஒரு நாள் 'கும்பகருணன் வதைப்படலம்' வகுப்பு நடத்திக்கொண்டிருந்தேன். பாசத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையே ஒரு போராட்டம், கும்பகருணன் வீடணன் என்னும் பாத்திர வடிவில் எப்படி எப்படி எல்லாம் தத்தம் செயற்பாட்டை நிலைநாட்ட முயல்கிறது என்று எடுத்துரைத்துக் கொண்டிருந்தேன்.

நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள்
வளர்த்துப்பின்னை
போர்க்கோலம் செய்துவிட்டாற்கு உயிர்கொடா
தங்குப் போகேன்

என்று கும்பகருணன் அண்ணன்பால் வைத்த பாசத்தையும் நன்றிஉணர்வையும் புலப்படுத்தும் பாடலையும், உடலிடைத் தோன்றிற்று ஒன்றை அறுத்து அதன்உதிரம் ஊற்றி, சுடல் உறச்சுட்டு, வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர், என்னும் வீடணனின் அற உணர்வு பற்றிய பாடலையும் எடுத்து விளக்கிக் கொண்டிருந்தேன். இன்னும் இங்கும், இன்றும் கூட கும்பகருணத்துவம், விபீடணத்துவம் உள்ளன. ஆனால் கும்பகருணனுக்கு இருந்த தியாக உணர்வு தன்னலங்கருதாத் தன்மை; அண்ணன் இராவணனுக்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் காணிக்கை ஆக்கிய நெஞ்சுரம் இந்தக் காலத்தில் யாருக்கு உள்ளது? பாசம் இருக்கலாம், பற்று இருக்கலாம். ஆனால் இன்று அவை எல்லாம் ஆடிக் காற்றில் உதிர்ந்து போகும் அரச மரத்து இலைகள்போல் உறுதியற்று, உண்மையற்று உள்ளன'' என்று இன்றைய வாழ்வை இலக்கிய வாழ்வோடு ஒப்பிட்டு உரைத்துக் கொண்டிருந்தேன்.

அப்போது அட்டெண்டர் பாலு, ''சார்; உங்களைத் தேடிக்கிட்டு நகரியிலிருந்து ரெண்டு பசங்க வந்திருக்காங்க'' என்றான். என் அறைச் சாவியைக் கொடுத்து 'அங்கு இருக்கச் சொல்' என்று சொல்லிவிட்டுப் பாடம் முடிந்ததும் நேரே என் அறைக்குச் சென்றேன்.

'ஐயா வணக்கம்'—என்று என்னைக் கண்டதும் எழுந்து இருவரும் வணக்கம் செய்தனர். 'என்ன வேண்டும்?' என் பதுபோல் பார்த்தேன்.

''இவர் தமிழ் மாணவர்மன்றச் செயலாளர் பாண்டு ரங்கம். நான் அவருடன் படிப்பவன் கணேசன். நகரி யிலிருந்து வந்துள்ளோம்''

உடனே தொடர்ந்து, ''ஐயா! எங்கள் தமிழ் மன்றத் தொடக்கவிழா செப்டம்பர் 5. தாங்கள் வரவேண்டும். சிறப் புச் சொற்பொழிவு ஆற்றவேண்டும். நாங்களே வந்து அழைத்துப் போவோம்'' எனச் செயலாளர் யாண்டுரங்கம் வேண்டிக்கொண்டார்.

பாடக் குறிப்பு அட்டவணையைப் பார்த்தேன். 5ஆம் தேதி அன்று பிற்பகல் வகுப்பில்லை. மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டேன். ''நண்பகல் 1 மணிக்கேஆயத்தமாய்விடுவேன் நீங்கள் வந்து அழைத்துப் போகலாம்'' என்று அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு என் அடுத்த கட்டுரை வகுப் புக்கு இன்னும் திருத்தவேண்டியிருந்த ஓரிரு கட்டுரை ஏடு களை எடுத்துத் திருத்தத் தொடங்கினேன்.

செப்டம்பர் முதல் தேதி கல்லூரிக்குச் சென்ற உடனேயே இந்திப் பேராசிரியர், ''என்ன கார்மேகம் நகரி போகிறீர் களா? தமிழ் மாணவர் மன்றத்தில் பாரதியார் பற்றிப் பேசப் போகிறீர்களா? நேற்று நகரி சென்றிருந்தேன். சுவர் எல் லாம் ஒரே விளம்பரம்'' என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

''எதையும் அடக்கமாக, விளம்பரம் இல்லாமல் செய்ய வேண்டும். மொழி பெயர் தேயம். சிற்சில சமயம் வீண் பழி பாவங்களும் சுமத்தப்படும். எளிய வாழ்வு, புகழ் வேண் டாமை, ஒழுங்காகப் பாடம் நடத்தல் இவைதான் அப்போது உன்னைக் காப்பாற்றும்'' என்று மு.வ. அப்பா சொன்ன அறிவுரைகளை நினைத்துக்கொண்டேன். அன்றே அஞ்ச லில் பத்து அழைப்பிதழ்களும் வந்தன. நகரி பாண்டியர்

அவர்கள் தலைமை தாங்குவார் என்றிருந்தது. நான் ஊருக்குப் புதிது. யாரோ ஊர்ப்பெரியவராய் இருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டேன்.

சொன்னபடியே செப்டம்பர் 5 பிற்பகல் 1 மணிக்குக் கார் வந்து கல்லூரி வாயிலில் நின்றது. நகரி தமிழ்மன்றச் செயலாளர் பாண்டுரங்கம் வந்திருந்தார். அவருடன் புறப்பட்டேன். நகரியை நெருங்க நெருங்க அந்த இளைஞர், நகரி பாண்டியர் கல்விக்கு, சிறப்பாகத் தமிழுக்கு ஆற்றிவரும் தொண்டு பல பற்றி எடுத்துரைத்துக்கொண்டே வந்தார். ஒரு பள்ளிக்கு அவர் கட்டடம் கட்டி உதவியதை வழியில் காட்டினார். இன்னொரு பள்ளிக்கு வேண்டிய மேசை, நாற்காலி அனைத்தையும் செய்து தந்தது, இன்னொரு பள்ளிக்கு ஒலி, ஒளிக் காட்சிப் பெட்டி வாங்கி வழங்கியது இப்படி அவர் செய்த கல்விப் பணி பலவற்றை எடுத்துச் சொன்னார். நகரியிலும் சுற்றியுள்ள சிற்றூர் பலவற்றிலும் நூல்நிலையங்கள், படிப்பகங்கள் ஏற்படுத்தித் தமிழ் நாளிதழ், வார இதழ், திங்கள் இதழ் வருவித்துத் தமிழை வளர்க்கும் பாங்கு பற்றியும் எடுத்துரைத்தார். தமிழ் ஊடகத்தில் ஆறு, ஏழு, எட்டு வகுப்புகளுக்கான கணக்கு, அறிவியல் முதலான பாடநூல்கள் அச்சிட அவர் தொடர்ந்து தந்த பொருள் உதவி பற்றியும் கூறினார். நகரி உயர்நிலைப் பள்ளி வந்துவிட்டது. கார் நின்றது. மாணவர் பலர், மன்றத்தலைவர் தலைமை ஆசிரியர் அனைவரும்வந்து வரவேற்றனர்.

ஆசிரியர் ஓய்வு அறையில் அமர்ந்தேன். தமிழாசிரியர் தேசிகர் தமிழ் ஆர்வம் உள்ள பிற ஆசிரியர்கள் அங்குக் காத்திருந்தனர். சிற்றுண்டி தயாராக இருந்தது. நகரி பாண்டியரும் வந்துவிட்டார். சிற்றுண்டி முடிந்ததும் நேரே மேடைக்குச் சென்றோம்.

வரவேற்பு உரையில் தேசிகர், 'நகரி பாண்டியர் யார்? அவருக்கு அந்தப் பட்டம் எப்படிக் கிடைத்தது' என்பது பற்றிக் கூறி அவரை எனக்கு அறிமுகப்படுத்தினார்.

"'மதுரை பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழையும், தமிழ்ப் புலவர்களையும் காத்து வளர்த்ததுபோல் இந்த மொழிபெயர் தேயத்தில் தமிழ் வாழ வளரப் பற்பலவாறு இவர் உதவி வருகிறார். அதுகண்டு அவர்க்குத் தமிழ்ச் சான்றோர் ஒருவர் வழங்கிய பட்டம் இது'' என்று கூறித் தன் வரவேற்வுரையை முடித்துக்கொண்டார்.

இந்த இந்திய நாடு உரிமை பெற்றதும் உடனேயே செய்ய வேண்டிய செயல்களாக மூன்றினைப் பாரதியார் எடுத்துப் பாடுகிறார்; ஒன்று நாட்டுப் பாதுகாப்பு, அடுத்தது நல்லன கற்று, நல்லன எண்ணி, நல்லன செய்ய வல்ல அறிவார்ந்த ஆற்றல் தரும் கல்வி, மூன்று அன்புவயப்பட்ட இந்திய ஒருமைப்பாடு-

'வெள்ளிப் பனிமலையின்மீதுலாவுவோம்—அடி
மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்'

என்ற அடிகளால் தரைப்படை, கற்பற்படை இந்தியாவைக் காத்து நிற்க வேண்டும் என்பதை முதலில் கூறுகிறார்.

அடுத்து,

'பள்ளித்தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்'

என்ற அடியால் இந்திய நாட்டுச் சிறுவர்கள், இளைஞர்கள் சிறப்பாக உருவாக்கப் பெறவேண்டும் என்று எடுத்துரைக் கிறார்.

பின்.

'எங்கள் பாரத தேசம் என்று தோள் கொட்டுவோம்'

என்ற அடியிலும் பின்வரும்

சிந்து நதியின் மிசை நிலவினிலே...முதலான தொகுப்புப் பாடல்களினாலும் இந்திய உள்ளார்ந்த, உணர்வார்ந்த ஒருமைப்பாட்டையும் உணர்த்திப் பாடுகிறார்.

இந்த மூன்று செயல்களுள் நடுவன் வைத்துப் பாரதி குறிப்பிடும் செயல் உயர் மானுடத்தை உருவாக்கும் சிறந்த கல்வியே ஆகும். வீடுதோறும் கலையின் விளக்கம், வீதி தோறும் இரண்டொரு பள்ளி...என்று நில்லாமல் தேடுகல்வி இலாதொரு ஊரைத் தீயினுக் கிரையாக மடுத்தல்...என்று உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் கல்வியின் இன்றியமை யாமையை விளக்குகிறார். இந்த நூற்றாண்டின் தலையாய தருமம் எது தெரியுமா? என்ற ஒரு வினாவுக்கு விடை தரு பவர் போல,

அன்ன யாவினும் புண்ணியம் கோடி'
ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்...

என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதன் நோக்கம் தற்கால இந்தியாவை வழிநடத்துபவர்களும், எதிர்கால இந்தியாவை உருவாக்குபவர்களும் நீங்கள்தான், ஆசிரியர்களும் மாணவர் களும்தான் என்பதைத் தெள்ளத் தெளிவாக, திட்டவட்டமாக எடுத்தெடுத்துப் பாரதியார் இயம்பியதை விளக்கி, அத்தகு நல்ல-கல்விப்பணி சீரும் சிறப்புடன் வளரத் துணைசெய்யும் நகரி பாண்டியர் அவர்களை வாழ்த்தி மாணவர் மன்றத்தைத் திறந்து வைத்தேன்.

அன்று இரவு நகரி பாண்டியனார் தம் இல்லத்தில் எனக்கு விருந்தளித்தார். இரவு வெகுநேரம் ஆகிவிட்டதால் அவருடன் தங்கிக் காலையில் போகுமாறு வேண்டிக்கொண் டார். இரவு அவரிடம் கருத்துக் கல்வி (Concept Education) புலப்பயிற்சி (Training the Sense organs) பற்றிப் பலவாறு உரையாடினோம். அவரும் ஆசிரியராக இருந்து பின்னர் நூல், ஆடை வாணிபத்தை மேற்கொண்டு அயல்நாட்டு ஏற்றுமதி வாணிபத்தில் சிறந்த நிலையில், அமெரிக்க முதலான வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர் ஆதலால் என் பேச்சைக் கவனமாகக் கேட்டார்.

ஐந்து, ஆறு என்று எண்களைக் கற்றுக் கொடுக்கும் போது அதன் பொருட்பாட்டை உணர்த்த வேண்டும். ஐந்து என்றதும் ஐந்து பூ, ஐந்து மரம், ஐந்து பசு கற்பவர் கருத்தில் இருத்தல் வேண்டும் $\frac{1}{4}$ என்ற பின்னம் ஒரு முழுப் பொருளை நான்கு பாகம் செய்து அதில் எடுத்த ஒரு பாகத்தைக் குறிப்பது என்று உணர்த்த வேண்டும். இப்படிக் கருத்தை வளர்ப்பதில் ஆசிரியன் விழிப்பாக இருக்க வேண்டும்; கிடைக்கும் சிறு வாய்ப்பையும் இழக்கக் கூடாது.

ஆலுக்கேன் விழுது அரசுக்கேன் இல்லை?

மாலை மலர்க்கு மணம் ஏன்?

வண்ண மலர்க்கு மணம் குறைவு எதனால்?

குரோட்டன் செடி பூப்பதில்லையே, காய்ப்பதில்லையே காரணம் என்ன?

கன்றுக்குட்டி பிறந்த உடன் துள்ளிக் குதிக்கிறது

குழந்தை ஆறேழு மாதம்வரை கையால் எடுத்துப்

போற்றவேண்டிய கைக்குழந்தையாய் இருக்கிறதே—

ஏன்?

இரண்டு கைகள்; வாய்மட்டும் ஒன்று—ஏன்?

இப்படித் துறைதொறும் துறைதொறும் வினா பல எழுப்பி மாணவர்களைச் சிந்திக்கத் தூண்டவேண்டும்... என்றேன்.

நீர், நீலு, பாணி, வாட்டர் என்று ஒரு பொருளைப் பற்றிய பல சொற்களைக் குழந்தையின் மூளையில் திணித்து வருத்தாமல் ஒரு சொல், ஒரு குறியீட்டு வழி பொருள் பலவற்றை, கருத்து பலவற்றை அவர்கள் பெறுமாறு செய்தல் வேண்டும்.

வானொலி, தொலைக்காட்சி, அச்சு இயந்திரம் வாராத சீன யாத்திரி யூவான்சுவாங் காலத்தில், திருவள்ளுவர் காலத்தில் பன்மொழிப் புலமை அறிவுக்கு அடையாளமாக, உலக அறிவை வளர்த்துக்கொள்ள இன்றியமையாததாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது அப்படி இல்லை. மகாகவிகள், சிறந்த இசைவாணர்கள், ஒப்பற்ற கலைஞர்கள், ஒருமொழி மட்டும், தாய்மொழி மட்டுமே அறிந்தவர் என்பது நினைவுகூறத் தக்கது. முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையிலாவது வேற்றுமொழியை நுழைக்காமல் ஒரு மொழியில்; தாய்மொழியில் சரியாக எண்ண, பிழையில்லாமல் எழுத, தவறில்லாமல் பேசவல்ல திறமான புலமையை வளர்க்கவேண்டும். தாய்மொழி, மாநில மொழி, இந்தியமொழி, ஆங்கிலமொழி என்று அறிந்தோ அறியாமலோ பலமொழி கற்பித்து இன்றையக் குழந்தைகளின் மூளையைச் சரக்கு ஏற்றிச் செல்லும் குட்சு வண்டிகள் ஆக்கி விடுகிறோம். பின்னஞ்சிறு குழந்தைகள் அகத்திலும் புறத்திலும் சுமந்து சுமந்து மெலிந்து விடுகின்றனர்; மூளைச் சூம்பர்களாய் விடுகின்றனர். கைகால் சூம்பியவர்கள் நடக்க முடியாமல், எதுவும் வேலை செய்ய முடியாமல் ஆகி விடுவதுபோல் இந்த மூளை சூம்பியவர்கள் சிந்தனை ஆற்றலை இழந்து விடுகின்றனர். நல்லது எது, தீயது இது எனத் தெளியும் திறனை இழந்து விடுகின்றனர். தெளிந்து நல்லதன் வழி செல்லும் மன ஆற்றல் இல்லாது போய் விடுகின்றனர்'' என்றேன். பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த பாண்டியர்,

''கருத்துக் கல்வி அதாவது கான்சப்ட் எஜுகேஷன் என்பது பற்றி இதுவரை நீங்கள் சொன்னது எல்லாம் உண்மைதான் — தற்காலக் கல்விமுறை அதற்குத் தடையாக இல்லை; குறுக்கே நிற்கவில்லை. திறமான ஆசிரியர்களும், ஒவ்வொரு வகுப்பிலும் அளவான மாணவர்களும் இருந்தால்

அப்படிக் கல்வி முறையும் கற்பிக்க முடியும். என்னுடைய தொழில் அனுபவத்தில் கல்வி பற்றிச் சிந்திக்கவேண்டி வந்தது. இந்தப் பகுதியில் நூத்துக்குத் தொண்ணூத்து ஒன்பது குடும்பம் நெசவாளர் குடும்பம்தான். பரம்பரை யாக அந்தத் தொழிலையே செய்து வருகிறோம். பாவு, ஊடு, நீளம், அகலம், பஞ்சின் நலம், நூலின் நிறம், வண்ண இயல்பு — இவற்றை எல்லாம் பார்த்த உடனேயே, தொட்ட உடனேயே சொல்லிவிடும் திறன் எங்களுக்கு இளமையிலேயே விரல் பயிற்சியால், கண் பயிற்சியால் வந்து விடும். ஆனால் இன்று பள்ளியில் பயிலும் மாணவர்கள் கற்றபின் சிலர் இங்குத் தொழிலாளியாகச் சேருகின்றனர். அவர்களுக்கு அந்தத் திறன் இல்லை'' — என்றார்.

''ஆமாம்! நீங்கள் சொல்வது சரிதான்'' — நான் இடைமறித்துப் பேசத் தொடங்கினேன், (கல்வி என்பது) அகத்தில் இருக்கும் அறிவை, ஆற்றலைப் புறத்தில் கொண்டு வந்து பயன்படுமாறு செய்வது ஆகும். அதற்கு வழியாகக்கண், காது, நா, மூக்கு, தோல் என்னும் பொறி களும் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐந்து புலன்களும் கூர்மை, நுட்பம், திட்பம் அடைய வேண்டும். அதற்கு ஏற்ப இந்த யூ. கே. ஜி. மற்றும் எல். கே. ஜி. வகுப்புகளை மாற்றியமைக்க வேண்டும். புத்தகச் சுமை வேண்டா-குழந்தைகள் பொருளின் மென்மை, திண்மை, வழவழப்பு, சொரசொரப்பு, வெப்பம் குளிர்ச்சி இவற்றில் எல்லாம் விரலுக்குப் பல பயிற்சி கொடுக்கலாம். இன்னும் நீண்ட கோடு, வளைவு கோடு, பிறைவடிவில் கோடு, வட்டக் கோடு, சதுரம், நீண்ட சதுரம் முதலிய வரைபட பயிற்சியும் விரல்களுக்குக் கொடுக்க வேண்டும். மூன்றாவது நிலையாக மலரின் இதழ்கள், விலங்குகளின் அலகுகள் இலைகளின் பல்வேறு வடிவங்கள் இவற்றை எல்லாம் நோக்கி நோக்கி வரையும் ஆற்றலை வளர்க்க வேண்டும். இந்த விரல் பயிற்சி முதல் வகுப்பில் குழந்தை களைச் சேர்ப்பதற்கு முன் தந்துவிட வேண்டும். இப்படியே

கண்ணுக்கு, நாவுக்கு, மூக்குக்கு எல்லாம் பயிற்சி கொடுக்க வேண்டும். அண்மையை, சேய்மையை, நீளத்தை, அகலத்தை, உயரத்தை, கனத்தை, பல்வேறு வண்ணங் களை, பழகுகின்ற மனிதர், விலங்குகள் வடிவ தனித் தன்மையைக் கண்டவுடன் வேறுபடுத்த அறியும் திறனைக் கண்ணுக்குத் தரவேண்டும், இந்தக்கல்வி அடிப்படை யானது — இன்றியமையாதது. இப்படிப்பட்ட பொறிப் பயிற்சி தந்து புலத் திறனை வளர்த்து விட்டுவிட்டால் சிறுவர்கள் பின் கற்கப் போகும் ஏட்டுக் கல்வியில் சிறப்பாக விளங்குவர்.

''உண்மைதான் — ஐயா! நன்றாக உணர்ந்திருக் கிறீர்கள் — இன்றைய கல்வி பற்றி எனக்கு இன்னொரு கவலையும் உள்ளது. என்னோடு இங்கு பயின்ற நண்பர் களில் சிலர் பள்ளியிறுதி வகுப்பில் வெற்றி பெறவில்லை. அத்துடன் அவர்கள் படிப்பு நின்று போயிற்று. அதனால் அவர்கள் தேநீர்க்கடை, வெற்றிலைப் பாக்குக்கடை, துணிக் கடை, நெய்தல் தொழில் இப்படித் தொழில் பலவற்றில் ஈடு பட்டனர். சிலர் வெற்றிபெற்று மேலும் மேலும் உயர்ந் தனர். ஆனால் கற்று வெற்றி பெற்ற அவர்கள் நண்பர் களில் பலர் தங்கள் இளங்கலை, முதுகலை சான்றிதழ்களை வைத்துக்கொண்டு வேலை தேடித் திரிந்து வாடி வருந் தினர். அவர்களுக்குத் தாங்கள் பெற்ற சான்றிதழ்களில் உள்ள நம்பிக்கை தங்கள்மேல் இல்லை. அதாவது இப்போது கற்கும் கல்வி இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கை தருவ தில்லை. நூல் அறுந்த பட்டம் காற்றின் போக்குக்கு ஏற்ப அலைக்கழிக்கப்படுவது போலச் சமூதாயச் சீர்கேட்டிற்கு ஏற்ப அழிந்தொழிக்கப்படுகிறார்கள். அவர்களைக் காப் பாற்ற வேண்டும். தன்னம்பிக்கை தருமாறு கல்வித் திட் டத்தைப் புதுப்பிக்க வேண்டும்.

''ஆம் பாண்டியாரே! நீங்கள் சொல்வது முழுக்க முழுக்க உண்மை. காந்திய ஆதாரக் கல்வித்திட்டம் அந்தப்

பணியைச் சிறப்பாகச் செய்கிறது. அந்தக் கல்விப் பயிற்சி எனக்குக் கிடைத்தது. அதனால்தான் தன்னந் தனியாகக் கையில் ஒரு காசும் இல்லாமல் சின்னஞ்சிறு கிராமத்தனாகிய நான் மாநகர் சென்னைக்கு வந்து தமிழ் எம். ஏ. பயில முடிந்தது. அந்தத் தன்னம்பிக்கையை, தொழில் திறத்தை வளர்த்தது. காந்தீயக் கல்வியே ஆகும். ஒன்றாம் வகுப்பு குழந்தையிலிருந்து பத்தாம் வகுப்பு இளைஞர்வரை வாழு கின்ற சூழலுக்கு ஏற்ப ஓரிரு தொழிலை அவர்கள் முறை யாகக் கற்று முன்னேறுகிறார்கள். முதல் வகுப்புக் குழந் தைகளின் உழைப்பால் அந்த வகுப்புச் செலவில் 10 விழுக் காடு ஈடு செய்யப்பெற வேண்டும். இப்படியே 20, 30 எனப் பெருகிப் பத்தாம் வகுப்பு மாணவர் உழைப்பின் பயனாலேயே அந்த வகுப்பு தன்னிறைவு, உடையதாய் நடத்தப் பெற வேண்டும் — இதனால் மாணவனும் வாழ்விற்கு இன்றியமை யாத பயிர்த்தொழில், நெசவுத்தொழில் அல்லது அவை போன்ற ஒரு தொழிலை நன்கு கற்றுக் கொள்கிறான். தன் கைவசப்பட்ட அந்தத் தொழில் பலத்தால் அவன் தன்னம்பிக் கையோடு பள்ளியைவிட்டு வெளியேறுகிறான். அதுமட்டும் அல்ல, எதுவும், கல்வியானாலும், மோட்சமானாலும் ஒருவன் பிச்சையாகப் பெறக்கூடாது — தன் உழைப்பின் மூலமே பெறவேண்டும் என நல்ல சமுதாய உண்மையையும் பெறுகிறான்.''

அது மட்டும் அல்ல ஐயா! நான் ஒருமுறை திண்டுக்கல் காந்திகிராமம் சென்றிருந்தேன். அங்கும் காந்தீயக்கல்வி தான். அங்குக் காய்கறித் தோட்டம் பள்ளிச் சிறுவர்கள் போடுகிறார்கள். பனைப் பொருள்களில் கலை நுட்பத் தோடு பற்பல விசிறி கூடை பொம்மை முதலியவற்றை உருவாக்குகின்றனர். இன்னும் தச்சுத் தொழில், நெசவுத் தொழில், வண்ணத்தொழில் பல தொழில் செய்கின்றனர். தாங்கள் மண்ணில் இட்ட விதை மண்ணைப் பிளந்து கொண்டு வெளிவருவதைக் காணும்போது அவர்கள் கண் களில் தோன்றும் மகிழ்ச்சி ஒளி, தங்கள் கைகளாலேயே

ஓலையைக் கழித்து வண்ணம் தோய்த்து சிறுசிறு கூழாங் கற்களைப் பெய்து செய்த சிலுசிலுப்பை ஒலியைக் கேட்கும் போது முகத்தில் தோன்றும் கலைஞன் ஒருவனின் மலர்ச்சி மிக மிக என்னைக் கவர்ந்தது. இத்தகு கல்விதான், படைப்புக் கல்விதான் இந்த நாட்டுச் சிறுவர்களை வல்லவ னாக, நல்லவனாக, உழைப்பாவனாக உருவாக்கும் என்று அன்றே நம்பினேன்,''

''நல்லது — உங்கள் நம்பிக்கைக்கு நன்றி — அந்த நம்பிக்கையைச் செயலாக்க வேண்டாமா? உங்களைப் போன்று இத்தகு கல்வியில் நம்பிக்கை உள்ளவர்கள், பொருள் வளம் வாய்ந்தவர்கள், லாப நோக்கு இல்லாத தொண்டுள்ளம் கொண்டவர்கள் ஒரு சிலராவது ஈடுபட்டால் தானே ஏதாவது செய்ய முடியும்'' என்றேன்,

திடீரென்று என் இரு கைகளையும் பற்றிக்கொண்டு, உணர்ச்சிவசப்பட்டவராய் ''நான் தயார் ஐயா? நீங்கள் வந்து எடுத்து நடத்துவதனால் நான் தயார். அப்படி ஒரு பள்ளியை, உடனுறைந்து பயிலும் தன்னம்பிக்கை தரும், புலப் பயிற்சி தரும் ஒரு கல்விக்கூடத்தை உருவாக்குவோம். அமெரிக்க தொழிலதிபர் பலர் முன்னரேயே கல்விக்கு, மருத்துவத்துக்கு உதவுவதாகக் கூறியுள்ளனர். போதிய அளவு செல்வம் என்னிடமும் உள்ளது, நீங்கள் உங்கள் வேலையை விட்டுவிட்டு வந்து இங்கேயே தங்கிப் பணி செய்ய வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

''முடியும் — இப்படி ஒரு வாய்ப்புக்காகத்தான் இந் நாள்வரை காத்துக் கொண்டிருந்தேன். என்னைக் காந்திக் குடிலில் சேர்த்த சான்றோர் இராஜகோபாலுக்குத் தந்த வாக்குறுதியும் அதுதான். நிச்சயமாக எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு வந்துவிடுவேன். இந்தியாவின் எதிர் காலம் இங்கே, இந்த நகரிலேயே இந்த நகரி ஆற்றங் கரையிலே உருவாகிடும்' என்று கூறி மகிழ்ந்தேன்.

''சரி! மணி ஆகிவிட்டது. நீங்கள் காலையில் சித்தூர் செல்ல வேண்டும். உறங்கலாம்'' என்றார்.

நெஞ்ச நிறைவோடு உறங்கி எழுந்தேன் — சித்தூரை அடைந்தேன். ஒரு வாரம் ஆகியிருக்கும். மாலையில் வகுப்பை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்தேன். மோகனவேல் செட்டியார் நண்பன் பச்சையப்பன், 'ஐயா! நகரிலிருந்து ஒரு மாணவர் வந்திருந்தார் ஒரு கடிதம் கொடுத்துவிட்டுப் போனார்'' என்று ஒரு கடிதம் ஒன்றைத் தந்தார். உறை யைக் கிழித்துக் கடிதத்தைப் பிரித்தேன். நகரி பாண்டியர் எழுதியிருந்தார்.

அன்பு நண்பர்க்கு வணக்கம்,

நகரி ஆற்றங்கரையை ஒட்டி 20 ஏக்கர் நிலம் நம் ''பாரதி பல்கலைக் கல்விக் கூடத்திற்கு'' ஒதுக்கியுள்ளேன். நாளை மறுநாள் பாரதி தினம். செப்டம்பர் 11 பிற்பகல் காரை அனுப்புகிறேன். தாங்கள் வந்து இடத்தைப் பார்க்க வேண்டும். பலவாறு பகுக்க வேண்டும். கட்டட அமைப்பு பற்றிப் பேச வேண்டும். நான் இங்குள்ள கட்டிடப் பொறி யாளர் ஒருவரைக் கலந்துகொண்டு உருவாகப் போகும் நம் கல்விக் கூட அமைப்புப் படம் ஒன்று வரைந்து வைத் துள்ளேன். எந்தப் பணியிலிருந்தாலும் ஒதுக்கி வைத்து விட்டுத் தவறாமல் வந்தருள வேண்டும்.

தங்கள் பாண்டியன்

என்ற கடிதம் பார்த்தேன். மகிழ்ந்து போனேன். இவ்வளவு விரைவில் நம் புதிய கல்வித்திட்டம் உருவாகப் போவது நினைத்துப் பெரிதும் மகிழ்ந்தேன். அன்று பிற்பகல் ஒரு வகுப்பு இருந்தது. அதை முதல் நாளே எடுத்துக் கொண்டேன். ½ நாள் செலவு பெற்றுக்கொண்டு ஆயத்தமாக இருந்தேன். கடிதத்தில் கண்டபடி கார் வந்து அழைத்துச் சென்றது.

குன்று, வயல், புல்வெளி, ஆறு அமைந்த வளமான பகுதியைப் பாரதி பல்கலைக் கல்விக் கூடத்திற்கு ஒதுக்கியிருந்தார். கிழக்கு நோக்கி மலையடிவாரத்தில் பொதுக் கூட்டம், தியானம், பாட்டுப் பயிற்சி, யோகம் இவற்றுக்கு ஏற்ப ஒரு பாரதி மண்டபம்; முகப்பில் 'ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா! வா!!'' என்னும் பாரதியார் கவிதை அடி கிரேனட் கல்லில் பொறிக்கப் பெற வேண்டும். மண்டபத்தின் இரண்டு பக்கத்தில் ஒருபால் பலகல்விக் கூடங்கள், மறுபால் பல்கலைக் கூடங்கள்; இடையில் புலப்பயிற்சி மையம். அதில் ஐந்து பிரிவுகள். ஒன்று கண்புல வளர்ச்சிப் பிரிவு, மற்றது செவிப்புல வளர்ச்சிக்கு—இப்படியே ஐந்து புல வளர்ச்சிக்கும் ஐந்து பிரிவு கொண்ட ஒரு பெரிய மையக் கட்டிடம். ஒவ்வொரு பிரிவிலும் அந்தந்தப் புலப் பயிற்சிக்குத் தேவையான ஒளி, ஒலி முதலான கருவிகள், பதிவு நாடாக்கள். வண்ணப் படங்கள்; வரைபடங்கள்; மண் உருக்கள், மேற்குப் பகுதியில் தோட்டப்பிரிவு, நெசவுத் தொழிலகம், வண்ணமிடும் பகுதி, தச்சுத்தொழில் பகுதி இப்படிப் பல தொழிற்கூடங்கள். நடுவில் சமையற்கட்டு உணவகம்—உணவகத்தை ஒட்டி இருபாலும் ஆசிரிய மாணவர் உறைவிடங்கள்; குழந்தைகள் வெளிப்புறம் அழைத்துச் செல்ல உதவும் வேன் நிறுத்தும் இடம்—சுற்றிலும் நீண்ட முட்கம்பி வேலி-இப்படிப் பலவாறு திட்டமிட்டோம். எப்படியும் தைத் திங்கள் முதல் நாள் புலப்பயிற்சிக் கூடத்தை நான்கு, ஐந்து வயது குழந்தைகள் சிலரைக் கொண்டு தொடங்கிவிட வேண்டும் என்று முடிவு செய்தோம். முதலில் அரசினரிடம் நீள் விடுப்பு எடுப்பது என்றும் பிறகு விரிவுரையாளர் பணியை விட்டுவிட்டுக் கல்விக் கூடத்திற்கே வந்துவிட வேண்டும் என்றும் முடிவு செய்தோம். இடையில் என் வடநாட்டுப் பயணம் பற்றிக் குறிப்பிட்டேன். நான் மீள்வதற்குள் கட்டடப் பணியைத் தொடங்கிவிடுமாறு கேட்டுக் கொண்டேன். எங்கெங்கு என்னென்ன மரம் வைக்க வேண்டும் என்றும் எண்ணினோம். அதற்குள் அவர் சென்னை செல்ல வேண்டியிருந்ததை அலுவலர் ஒருவர் நினைவூட்டினார், என்னைத்

தங்கிக் காலையில் போகுமாறு வேண்டினார். 'இல்லை'- நான் இரவே செல்வேன்' என்று கூறினேன். தன் காரோட்டியை அழைத்து என்னைச் சித்தூருக்கு அனுப்பி வைத்துவிட்டு அவர் சென்னை சென்றார்.

6

திட்டமிட்டபடி திரு. ரெட்டியார் நவராத்திரி விடுமுறையில் சித்தபரி சின்மயா தபோவனப் பயணத்திற்கு ஏற்பாடு செய்தார். நாங்கள் பத்து பேர் ரெட்டியார் வேனில் ரேணிகுண்டா நிலையம் சென்றோம். காலை 10 மணிக்குப் பதன்கோட் வண்டி வந்தது. நாங்கள் முன்பதிவு செய்திருந்த இருக்கைகளில் யார் யாரோ அமர்ந்திருந்தனர். படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தனர். பதிவு செய்திருந்த பயணச் சீட்டைக்காட்டி வேண்டிக்கொண்டோம். என்னவோ தங்கள் சொந்த இடத்தைவிட்டுக் கொடுப்பதுபோல முணுமுணுத்துக் கொண்டு இருக்க இடம் கொடுத்தனர்.

கையில் அவரவர் கொண்டுவந்திருந்த முறுக்கு, சீடை வடை இவற்றைத் தின்றுகொண்டே, குடும்பநலங்களை விசாரித்துக்கொண்டே உறக்கத்தில் ஆடி அசைந்துகொண்டு பயணம் செய்துகொண்டிருந்தோம்.

வண்டி ஓங்கோலில் சிறிது நின்றது. யாரோ ஒருவர் ஏதோ சமயக்குறிப்புடைய அறிக்கைளை வண்டியிலிருந்த எங்கள் கையில் கொடுத்து, 'உலகம் அழியும் காலம் வந்து விட்டது...' என்று உரக்கக் கூவிக்கொண்டே அடுத்த பெட்டிக்குச் சென்றார்.

கையில் இருந்த அறிக்கையை மேலோட்டமாகப் பார்த்த ராகவன் அந்த அறிக்கைக்குப் பதில்சொல்பவர் போல "இந்து சமயம் ஒருவரால் ஏற்படுத்தப்பட்டது அல்ல—உப

நிடதச் சிந்தனைகள், பிரம்மசூத்திரமாக ஒழுங்கு படுத்தப் பட்டது. அதற்கு அத்வைத, துவைத நெறிகளில் சங்கரரும், மத்வரும் விளக்கம் எழுதினார்கள். பகவத் ராமாநுஜர்- 'பரம்பொருள் ஒன்றுதான்—ஆனால் அதற்கு உடலாக, சரா சரங்கள் அதாவது அசைவன அசையாதன, உயிர் உள்ளன உயிர் இல்லாதன என்று இந்த உலகத்தில் உள்ள பொருள் எல்லாம் அதற்கு உடலாக அமைந்துள்ளன. நமக்கெல்லாம் அவனே உயிர்- அவனே தந்தை. அதனால் யாரும் வேண்டா தவர் இல்லை' என்று விசிட்டாத்துவித நெறியில் விளக்கம் தந்தார். நம்மாழ்வாரும் யார்யார் யார் யாரை இறைவன் என்று தாங்கள் தங்கள் வாழும் கால, இடச்சூழலுக்கு ஏற்பத் தொழுதாலும்... தொழட்டும்.

''அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.''

இறுதியில் எல்லாம் அவனையே வந்தடையும். ஏனெனில் எல்லாவற்றுக்கும் உயிர்க்கு உயிராய், அந்தர்யாமினாக அமைந்திருப்பவன் அவனே.

என்று நெற்றி நிறைய திருநீறு விளங்க எதிரே அமர்ந் திருந்த ஆனந்தரைப் பார்த்துச் சொன்னார்.

அவர் சிரித்துக் கொண்டே, ''நண்பரே! சைவ சமயம் ஐம்பூதம், ஐம்பொறி, ஐம்புலன் எனத் தொடங்கி முப்பத் தாறு தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டது. அது தொண்ணூற்றாறு வரை விரியும். உலக சமயங்கள் ஒவ் வொன்றும் ஒன்று, இரண்டு, மூன்று, இருபத்துநாலு என்று சில தத்துவங்களையே விளக்குவன. எல்லாச் சமயங்களும் இறைவனை நோக்கி மனிதனைக் கொண்டு செல்வனதான். ஆனாலும் முடிந்த முடிவு சித்தாந்தமே. சோபான மார்க்க மாக—படிநிலை நிலைகளில் அந்தச் சமயங்கள் எல்லாம் மனிதனை ஒவ்வொரு மேல்நிலைக்கு அழைத்துச் சென்று அங்கே நிறுத்தி விடுகின்றன; நின்று விடுகின்றன. எனவே

சைவ சமயம் எல்லாச் சமயங்களையும் படிமுறைச் சமயங்களாகத் தன்னுள் அடக்கிக்கொண்டுள்ளது: அதற்குவைணவமும் அப்பாற்பட்டது அல்ல. சிதம்பரத்தில் பாருங்கள்! தில்லைத் திருக்கூத்தன் சந்நிதிக்குப் பக்கத்திலேயே கோவிந்தராசப் பெருமாள் திருச்சித்ர கூடத்தில்திருமகளோடு இனிதமர்ந்துள்ளார்.''

இரண்டையும் கேட்டுக்கொண்டிருந்த ராஜு எதையோ சொல்ல வாயெடுத்தார். அவரைக் கைகாட்டி அமர்த்திவிட்டு மோகனவேல் செட்டியார் குறுக்கிட்டார்.

''ஒரு மலை உச்சிக்குப் பாதை பல. வடக்கேயிருந்து வர்ரவுங்களுக்குச் சுலபமா வடக்கு மலைச்சாரலில் ஒரு பாதை தோன்றியிருக்கும். தெற்கேயிருந்து மலெ ஏர்ரவுங்க அந்தப் பக்கம் ஒரு பாதையை உண்டாக்கியிருப்பாங்க. கிழக்குப் பக்கத்தவர் கடல் வியாபாரிகள். அவர்களிடம் நெறைய பணம் புழங்கும். கிழக்கேயிருந்து நல்ல சாலைபோட்டு உந்து வண்டிகளில் அவர்கள் போய்வருவாங்க. இப்புடி மலெ உச்சிக்கு எத்தனையோ பாதை இருக்கும். அவுங்க அவுங்க, அவுங்க வசதிக்கு, வாழ்க்கைக்குத் தகுந்தாப்போல ஏதோ ஒரு பாதை வழியிலே பரம்பரையா ஏறுவாங்க.

''அடிவாரத்திலெ, ஒருவர் பாதையிலேயிருந்து இன்னொருத்தர் பாதை மாறுபடுவதுபோல, வேறுபடுவதுபோலத்தான் தோணும். ஆனா கடைசியிலே எல்லாம் ஒரே இடத்தில் ஒன்னா கூடிடும். அடிவாரத்துலே எழுந்த தர்க்கம், குதர்க்கம், அல்லோலம் எல்லாம் முடிவாரத்துலே அடங்கி ஒடுங்கி அமைதியாயிடும். எக்காளம் இட்டுத் தம் தெய்வம் எம்தெய்வ முன்னவுங்க வாயெல்லாம் அதைப் பார்த்துதானே மூடிக்கொள்ளும். இதைத்தான் தாயுமான சுவாமி. ''சமயம் கடந்த மோன சமரசம்''னு பாடுறாரு.

''ஆமாம் செட்டியாரே! நீங்க சொன்ன தென்னவோ நெசமே. ஆனா பாருங்க. நடைமுறை அப்புடி இல்லெயெ.

சமயத்தின் பேராலே எத்தனை சண்டைங்க, எவ்வளவு சச்சரவுங்க எத்தனை ஆயிரம் அப்பாவி சனங்க மாண்டு மடி யிறாங்க; கொன்னு குவிக்கப்படுறாங்க...'' என்று அங்க லாயத்துக் கொண்டார் உலகநாதன்.

இவற்றை எல்லாம் அமைதியாகக் கேட்டுக்கொண் டிருந்த ரெட்டியார், ''அவுனு அவுனு. ஆமாம். நிஜமே லோகநாதன் காரு. தேசம் அண்ட்டே மட்டி காது மனுஷுலு டோய்-னு' குரஜாடா அப்பாராவ் சொல்லியிருக்காரு. அது போல மதம்னா மதம்காது. அகங்காரம் அல்ல- மனமுடோய் மனப்பக்குவம் டோய்-னு நெனச்சி வாழணும்'' என்றார்.

''ஆமாம். என்ன செய்வது ரெட்டியார்! அப்படி நெனச்சு வாழுறவுங்க இப்பொ ரொம்ப கொறைஞ்சுட்டாங்க எவன் பிறருக்காக இரக்கப்படுறானே அவன்தான் வைஷ்ணவனு ஆச்சார்யர் இராமநுசர் கூரத்தாழ்வான் வாழ்ந்து காட்டியிருக்காங்க...'' என்று ராகவன் மீண்டும் உரையாடலில் கலந்துகொண்டார்.

ராஜு இடைமறுத்து ''பாருங்கோ! செட்டியார் சொன்ன உபமானம் இருக்கே. மலைக்குப்போற பல பாதைங்கிறது ரொம்பசரி. ஆனா ஒரு பாதையிலே போற வன் தன் போக்கிலே போகலாம் இல்லியோ. அப்படி ஏனோ போறது இல்லே. செட்டியார் போறவழியிலே ரெட்டியார் போகவிடறது இல்ல. ரெட்டியார் பாதை தப்புன்னு நாயுடு உரக்கவே பேசுறாரு. அவனவன் பாதையிலே அவனவன் போறது சரி அவன் அப்படிப் போறானே பொயிட்டுப் போறான்னு இருக்கலாம். இல்லயா? அப்படி இருக்க முடியல லேன்ன 'ஐயோ' பாவம்னு கவலைப்படலாம். அதுவும் இல்லேன்னா ஏ'ண்ணா நீங்க அப்புடிப் போறிங்க. நாங்க இப்புடிப் போறோம் எது சரின்னு சமத்துவ உணர்வோடு நெனச்சுப் பார்ப்போமேன்னு கூடிக்குலாவி நெனச்சுப் பாக்கலாம். அதுவரைக்கும் சரின்னு படுது'' என்று பேசிக்

கொண்டே போனார். கிருஷ்ணா நதி பாலம் தடதட சப்தம் எழுப்பியது; விஜயவாடா நெருங்கியது.

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டே வந்த டாக்டர் பச்சையப்பன் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். எல்லோரும் அவரைப் பார்த்தோம். ராஜுவும் தன் பேச்சை நிறுத்திக்கொண்டார்.

''எல்லாச் சமயங்களும் ஏதோ ஒருவகையில் கடவுள் தான் தந்தை மூலம், மூத்தப்பன் என்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கு. அப்படின்னா மக்கள் எல்லாம் கடவுளின் குழந்தை, கடவுளின் படைப்புன்னுதானே அர்த்தம். கடவுளைப் பாக்க முடியாட்டியும் அவர் குழந்தைகளான ஜனங்களை எல்லாம் பாக்க முடியும்லே. அவுங்க எல்லாம் நம்ப சகோதரர் தான்னு அவுங்க கஷ்ட நஷ்டத்துலே பங்கு கொண்டு காப்பாத்துலாம்லே. நம்ப சமயத்துலே அந்தக் காலத்துலேயிருந்து இப்பொ வள்ளலார் காலம்வரை 'ஜீவ காருண்யமே திறவுகோல்'ங்கிற செய்தி பேசிக்கிட்டேயிருக் கோம்லே. இஸ்லாம் சாப்பிடறது, தொழுவுறது எல்லாம் சமத்துவத்தை சகோதரத்துவத்தை நடைமுறையா கொண் டிருக்கு. கிறிஸ்து 'உன் பக்கத்து ஊட்டுக்காரனுக்கு நீசெய்த உதவி எனக்கே செய்த'துன்னு சொல்லியிருக்காரு. ஆக கடவுள்தான் எல்லாங்குற விஷயத்துலே, மக்கள் சேவையே மகேசன் சேவைங்கிற விஷயத்திலே உலக சமயம் எல்லாம் ஒத்துப்போவுது. கொஞ்சங்கூட வேறுபடல, அந்த ரெண்டை யும் நாம எல்லாரும் சேர்ந்து செய்யலாமே. சமயச் சண்டை யும் வராது. சச்சரவும் இருக்காது'' என்று ஒரு சிறு சொற் பொழிவு ஆற்றினார். விஜயவாடா சந்திப்பில் ஒரு குலுக்கி குலுக்கி வண்டி நின்றது.

''கார்மேகம்! சாமான்களையெல்லாம் கவனமாகப் பாத்துக்குங்க. ஒங்களுக்குச் சாப்பாடு வாங்கியாறோம்'' — என்று எனக்கு வேலை கொடுத்துவிட்டு அனைவரும் உண

வுண்ண இறங்கிப் போயினர். நான் சாமான்களில் ஒருகண் வைத்தபடியே.

''எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு''

என்ற வள்ளுவனார் வாக்கை அசைபோட்டுக் கொண்டிருந் தேன்.

அனைவரும் உணவுண்டுவிட்டு எனக்கு ஒரு பொட்டலம் சாம்பார் சாதம், தயிர்ச்சோறு, வடை, சர்க்கரைக்கேளி வாழைப்பழம் எல்லாம் வாங்கி வந்தனர். வயிறார உண்ட களைப்பில் அனைவரும் கண்ணயர்ந்தோம்

வழியில் வர்தா நிலையத்தில் வண்டி நின்றது. எதிரே வந்த மிக விரைவு வண்டிக்காக இந்த வண்டி நிறுத்தப் பட்டது; இன்னும் 30 நிமிடம் இங்கேயே நிற்கும் என்று அறிந்து இறங்கினேன். அங்கே கதராடை அணிந்திருந்த இளைஞர்கள் சிலர்சூழ ஒரு பெரியவர் நடுவில் நின்று கொண்டு இந்தியில் என்னவோ சொல்லிக் கொண்டிருந்தார். அந்தக் குரல் எங்கோ கேட்ட குரலாக இருந்தது. அருகில் சென்று நோக்கினேன். அருள்போல் தோன்றிற்று. அந்தக் கதர்க் குல்லாய், கதராடையால் உடனே இனங்கண்டு கொள்ள இயலவில்லை. அதற்குள் அருள் என்னைக் கண்டு பிடித்து விட்டார். 'என்ன கார்மேகம்! எங்கே இவ்வளவு தூரம்?' ' நலமா? மலர் எப்படி இருக்கிறார்? ஏதாவது தெரி யுமா?' என்று கேட்டார். நான் சிலருடன் வடநாட்டுப் பயண மாகப் புறப்பட்டுச் செல்வது பற்றி மட்டும் சொல்லி அவரைப் பற்றியும் அவரைச் சுற்றியுள்ள இளைஞர்களைப் பற்றியும் கேட்டேன்.

''கார்மேகம்! அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெறும் அறிவை மட்டும் வளர்க்கவில்லை, அங்குப் பெறும் பயிற்சி ஏட்டுச் சுரைக்காய் அல்ல, நாம் வாழும் இந்தச் சமுதாயத்தை, நம்மை ஆளும் இந்த ஆட்சியை, ஆட்சியாளர்

களை அங்கு நன்கு இனங்கண்டு கொள்ள வாய்ப்புப் பல உண்டு. நூல்கள், சொற்பொழிவு மேடைகள், முற்போக்குச் சிந்தனையுள்ள பேராசிரியர் தொடர்பு எல்லாம் அங்கு எனக்குக் கிடைத்தன. அந்த நூல் பயிற்சி, சொற்பொழிவில் பேசியும் கேட்டும் தெரிந்து கொண்ட உண்மைகள், பேராசிரியர் தம் அனுபவ உரைகள் இந்தக் கால இளைஞர்கள் பற்றி என்னைப் பெரிதும் எண்ணத் தூண்டின; எனக்குப் பெரிதும் துயரத்தை உண்டாக்கின. என் விடுதியில் பக்கத்து அறை மாணவன் நல்ல மாணவன் ஒருவன் காதல் தோல்வியில் போதை மருந்துக்கு ஆளாகிப் பயித்தியம்போல் ஆகி விட்டான். இன்னொரு இளைஞன் பாவம் குடிப் பழக்கத்தால் சிந்திக்க முடியாதவனாகச் சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கத் தொடங்கிவிட்டான். அன்போடு பண்போடு பழகும் இளைஞன் ஒருவனுக்கு எவனோ கஞ்சா பழக்கத்தை ஏற்படுத்தி விட்டான். எப்போது பார்த்தாலும் எவரைப் பார்த்தாலும் அவன் திட்டுவது வழக்கமாகி விட்டது. ஒரு நாள் தேர்வு எழுதும்போது என்னைத் திரும்பிப் பார்த்தான். நானும் பார்த்தேன்—''ஏய் அருள்! என்ன உனக்கு நான் எளக்காரம் ஆகிவிட்டேனா? என்னை ஏன் அப்படிப் பார்க்கிறாய்!' என்று கத்தினான்— தேர்வு மேற்பார்வையாளர் அவனைப் பணியாளன் இருவர்க்குச் சொல்லி இழுத்து வெளியே அனுப்பினார். அப்புறம் எங்கே போனானோ! பரங்கிப் பேட்டையிலிருந்து அவனுடைய அம்மாவும் அப்பாவும் வந்து, தன் பிள்ளை எங்குப் போனானோ? என்ன ஆனானோ!' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு எங்களைப் பார்த்துக் கதறிக் கதறி அழுதது என்னை உலுக்கி விட்டது. பகலில் வகுப்பறையில்கூட, இரவில் உறக்கத்தில்கூட அந்தப் பெற்றோரின் ஓலம் என் மனச் செவியில் கேட்டுக்கொண்டே இருந்தது. அந்த ஓலம், இப்படி வழிதவறிய, வாழ்விழந்த இளைஞர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற வெறி, என் வாழ்வை வர்தா நோக்கித் திருப்பிவிட்டது. வர்தா அடைந்தேன். அண்ணல்

காந்தி அமைத்திருந்த பாதை மிகத் தெளிவாக, திட்டமாக எனக்கு உதவியது.

நான் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். அருள் தொடர்ந்தார். ''உடல், உளம் வாழ்க்கைச்சூழல்— இவற்றின் அடிப்படையில் இன்றைய இளைஞர்கள் பெரிதும் ஆராய்ச்சிக்கு உரியவர்கள். சல்விச்சூழல், வாழ்க்கைச் சூழல் சரியாக அமையாத இளைஞர்களே மனநிலையில் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

''ஆம், அருள்! உண்மைதான், அன்றைய கல்வியில் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் ஒரு நெருக்கம், நட்பு, ஏன் ஒரு தந்தை மகவு உறவே இருந்தது. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டனர்.''

''நீங்கள் சொல்வது சரிதான், பெற்றோர்களும் பெரும்பாலும் உடன் இருந்தனர். தன் மகனுக்கு, மகளுக்கு ஏற்படும் நட்பை, நண்பர் குடும்பத்தை ஓரளவு அறியும் வாய்ப்பு அவர்களுக்கு இருந்தது. நல்லவர் நட்பை இரு குடும்ப நட்பாக வளர்த்து கஷ்ட நஷ்ட காலங்களில் அண்ணன் தம்பிகள் போல், அக்காள் தங்கைகள்போல் ஒருவர்க்கு ஒருவர் உதவும் வகையில் அந்தக் குடும்பங்களின் நட்பு வளர்ந்தது. அந்தந்தக் குடும்பப் பெரியோர்கள் அப்பா, அம்மா, மாமா, மாமி என்ற உறவு வைத்துக்காண்டு குடும்பச் சச்சரவுகளைக்கூட அவர்கள் உதவியால் நல்ல வகையில் சரிசெய்து கொள்ளும் வாய்ப்பும் இருந்தது''— என்றேன்,

'கார்மேகம்! இன்னொன்றையும் கருத வேண்டும். இப்போது போல் அப்போது மக்கள் தொடர்புக் கருவிகள் அதிகமாக இல்லை. படக்காட்சி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் சிறுவர்களை, குழந்தைகளைப் பகலிலும் இரவிலும் பாதிக்கின்றன. அந்தப் பாதிப்பு நட்பைவிட, உறவைவிட மிக நீண்டதாகவும் ஆற்றல் உடையதாகவும்

உள்ளது, அந்தப் பாதிப்பு நன்மை செய்வதைவிடத் தீங்கையே செய்கிறது. இளைஞர்கள் மன நலத்தைக் கெடுப் பதில் பெரும் பங்கு இந்தச் சமுதாயத்தில் அதற்கே உண்டு. இதிலிருந்து இளைஞர்களைக் காக்கும் வாய்ப்பும் ஆற்றலும் பெற்றோர்க்கும் இல்லை, ஆசிரியர்க்கும் இல்லை. ஏன் நண்பர்களுக்குக்கூட இல்லை என்று புலப்படுகிறது இல்லையா?

ஏதோ சொல்ல வாயெடுத்தேன். கையமர்த்திவிட்டு மேலும் தொடர்ந்தார். ''இவை எல்லாவற்றையும்விட இன்றைய அரசியல் கட்சிகள் இளைஞர்களுக்குச் செய்யும் கேடுகளைக் கண்டு நான் கலங்குகிறேன். கொள்கையற்ற வர்களாக, குறிக்கோள் இல்லாதவர்களாக, வெறியர்களாக, சிந்திக்கும் திறன் அற்றவர்களாக, இளைஞர்களை உருவாக் குவதில் இன்றைய அரசியல் கட்சிகள் போட்டிப் போட்டுக் கொண்டு செயல்படுகின்றன. தனித்தனி மனிதர்களைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு வெறிகொண்டாடுவதே இந்தக்கால அரசியல் நெறியாக உள்ளது. கற்பவரை விடக் கல்லாதவர், நல்லவர்களைவிடப் பொல்லாதவர் அரசியலில் வெற்றியும் வீராப்பும் பெறுவதைக் கண்டு கற்ற இளைஞர் உலகம் தடுமாறுகிறது. நக்சலைட் குழு இவர்களைத் தன்பால் இழுத்துக் கொள்கிறது. அல்லது இந்த இளைஞர் கள் போதை மருந்துக்கு ஆளாகின்றனர். இவர்கள்தான் இன்றைய இந்தியா. இவர்களைக் காத்தால்தான் இந்தியா வைக் காக்க முடியும். இவர்கள் வளர்ந்தால்தான் இந்தியா வளரும்; வாழும்.''

''ஆம். அருள் இவர்களுக்குத் தன்னம்பிக்கையை வளர்க்கவேண்டும்; வாழ்வு என்பது போட்டியில் பொறாமை யில், பொய்ப் புகழில் இல்லை என்ற தெளிவை இவர்களுக்கு உண்டாக்க வேண்டும். இவர்களாலேயே இவர்களுக்கு வேண்டிய உணவு, உடைக்கான பொருளைச் சம்பாதிக்க முடியும் என்ற தொழில் வாய்ப்பை அளிக்க வேண்டும். இது ஒரு புறம்.''

''அது மட்டும் போதாது கார்மேகம்!-நிறைய செய்ய வேண்டுவன உள்ளன. இன்னொரு புறம் அரசியல் அமைப்பைத் திருத்தி அமைக்க வேண்டும். தேசீய அளவில்இரண்டு கட்சிகள், மாநில அளவில் இரண்டு கட்சிகள், இரண்டு கட்சிகளுக்கே வாய்ப்பளிக்க வேண்டும்-அவையும் கொள்கை அடிப்படையில் அமைய வேண்டும். அதுதான் இயற்கை. உயரம் குட்டை, வெப்பம் குளிர்ச்சி, இரவு பகல், ஆண் பெண், இப்படி இரண்டிரண்டாகவே இயற்கை உலகைப் படைத்துள்ளது-வளர்த்துள்ளது. அப்படி இரண்டு கட்சிகள் மட்டும் மாநில, தேசீய அளவில் அமையுமாறு மாற்றி அமைக்க வேண்டும்.

அந்தக் கட்சிகளும் தொகுதி தொகுதியாகத் தங்கள் வேட்பாளரை நிறுத்தாமல் மாநில அளவில் தேசீய அளவில் தங்கள் கொள்கை அடிப்படையில் தேர்தலின்போது வாக்குகளைத் திரட்ட வேண்டும். அவ்வாக்குகளின் விகிதத்திற்கு ஏற்ப மாநில அவையில், தேசீய அவையில் தங்கள் பிரதிநிதிகளைக் கட்சி தேர்ந்து அனுப்ப வேண்டும். எடுத்துக் காட்டாக:- 'அ' கட்சிக்கு ஒரு தேர்தலில் அறுபது கோடி வாக்குகள் கிடைத்து 'இ' கட்சிக்கு எழுபது கோடி வாக்குகள் கிடைப்பதாக வைத்துக் கொள்ளலாம். மொத்தம் 390 தேசீய அவை உறுப்பினர்களுள் 'அ' கட்சிக்கு 180 உறுப்பினர்களையும் 'இ' கட்சி 210 உறுப்பினர்களையும் தெரிந்தெடுத்து அனுப்ப வேண்டும். ஐந்து ஆண்டுகள் வரை முதலில் வாய்ப்பு கிடைத்த கட்சியே நாட்டைஆளும். சாவு, கொலை செய்யப்படல் இப்படிப்பட்ட காரணத்தால் உறுப்பினர் ஒருவர் போய்விட்டால்-இடைத்தேர்தல் ஒன்றும் நடக்காது. கட்சியே இன்னொரு உறுப்பினரை நியமிக்கும். துப்பாக்கி நாகரிகத்தால் மனிதனைக் கொல்ல முடியுமே அன்றிக் கட்சிகளைக் கொல்ல முடியாது; கொள்கைகளைக் கொல்ல முடியாது. போட்டியால் பொறாமையால் மனிதர்கள் அழிவார்களே அன்றிக் கட்சிகள் அழியாது. கொள்கை

கள் அழியாது. கட்சிகள் ஒன்றுக்குள் ஒன்றாய்ப் பிளவுபடாது இணைந்து வாழும், துப்பாக்கி நாகரிகம் செயலிழந்து போகும். கொள்கையோடு மனிதரும் வாழ்வர்.

'அருள்' உங்கள் கருத்துக்கள் உண்மையான நன்மை தருவன''-என்று தயங்கினேன்.

''என்ன கார்மேகம்! ஏன் தயங்சிவிட்டீர்கள். வாய்ப் பேச்சளவில் ஏதேதோ கூறுகிறேன் என்று நினைத்து விட்டீர் களா? ஓ! உங்களுக்குத் தெரியுமா? உங்கள் காந்திக் குடிலுக்கு அடிக்கடி வருவாளே மலர். அவளை என் மனம் எவ்வளவு விரும்பியது தெரியுமா? அவள் கூட என்னை விரும்பியதாக அறிந்தேன். ஆனால் காந்தியத்தின் அழைப்புக்கு இணங்கி இதோ இன்றும் கஷாயம் இல்லாத் துறவியாய் இந்த வார்தாவில் வாழ்கிறேன். இங்குத் தொழிலகம், தொண்டகம் வைத்துள்ளேன். வேலை இல்லா எந்த இளைஞனும் இருவர்க்கு வேண்டிய அளவு சம்பாதிக்கத் தக்கத் தொழில் தொழிலகத்தில் தரப்பெறுகிறது. தச்சு வேலையிலிருந்து தேர் செய்யும் வேலை வரை, சுவர் எழுப்புவதிலிருந்து சிலை செய்யும் கலை வரை, மின்கம்பிகள் இணைப்பதிலிருந்து தொலைக்காட்சிக் கருவிகள் கணிப் பொறிகள் உருவாக்கும் வரை இப்படிப் பல தொழில் வாய்ப்பு கள் இங்கு உள்ளன. எத்தனை அறிவியில், பொறியியல் வல்லுநர்கள் வந்து இங்குப் பணிசெய்கிறார்கள் தெரியுமா?

''தொண்டகத்தில் உடல்நல, சமூக நல, மன நல அறிஞர்கள் ஈடுபட்டுள்ளனர். இளைஞர்களை நெறிப்படுத்து வதில் அவர்கள் செய்யும் பணி விலை மதிப்பற்றது. வளமான குடும்பத்தில் பிறந்த மூவர் தங்கள் செல்வம் அனைத்தையும் செலவிட்டு மனநோய் மருத்துவ சிகிச்சைக் கருவிகள் பல இங்கு அமைத்துள்ளனர். காதல் தோல்வி, குடும்பத் தகராறு, அரசியல் புறக்கணிப்பு, தாழ்வுச் சிக்கல், வேலை இன்மை, கூடா நட்பு இப்படிப் பல காரணங்களால் மனநலம் கெட்டுக் கஞ்சா, பெத்திடின், அபினி, தூக்க மாத்திரைகள்.

மன எழுச்சி மாத்திரைகள்-இவற்றிற்கு ஆளாகி உடலும் உணர்வும் கெட்ட பல இளைஞர்களுக்கு இங்கு இந்தத் தொண்டகத்தில் சிகிச்சையும் புணர்வாழ்வும் தரப்பெறு கிறது. காவல் துறை, நீதி மன்றங்கள்கூட இப்படிப்பட்ட இளைஞர்களை இங்கு அனுப்பி வருகின்றன என்றுசொல்லிக் கொண்டே போனவர் என் முகத்தை ஏறிட்டுப் பார்த்து என்ன! கார்மேகம்! ஏதோ சிந்தனையில் இருக்கிறீர்கள்? நான் சொல்வதில், செய்வதில் ஏதேனும் தவறா?வெளிப்படை யாகச் சொல்லுங்கள். காந்திக் குடிலில் தாங்கள் பெற்ற அனுபவம் எனக்கும் பயன்படுமே'' என்றார்.

''இல்லை! இல்லை! ''நீங்கள் கருதுவனவும் செய்வன வும் எல்லாம் நல்லவைதான். நானும்கூட நல்லவர் சிலர் துணையுடன் குழந்தையகம் வைத்துச் சிறுவர் கல்வியில் ஈடுபட எண்ணியுள்ளேன். நான் சொல்ல நினைப்பது...'' என்று சிறிது தயங்கினேன்,

''சொல்ல நினைப்பது என்ன?... தயங்காமல் சொல் லுங்கள்.''

அருள் கையைப் பற்றிக் கொண்டேன். கண்கள் கலங் கின. பேச்சு வரவில்லை.

''கார்மேகம்! என்ன இது? ஏன் இத்தக் கலக்கம்!...

''ஆங்... மலர் பற்றித் தெரியுமா?... தங்களை இழந்த தால் அவள் சிதைந்து போய்விட்டாள்—மணத்தையே வெறுத்து வாழ்ந்தாள்— பெற்றோர் வற்புறுத்தலில் கடைசி யில் ஒரு போலீசு ஆபீசருக்கு வாழ்க்கைப்பட்டு, தொல்லைப் பட்டுப் பிரிந்து போய்விட்டாள்—எங்குப் போனாளோ? என்ன ஆனாளோ— பெற்றோரும் அவள் கவலையிலேயே இறந்து போய்விட்டனர்'' என்றேன்.

அருளின் கைகள் என்னை அழுத்தமாகப் பற்றின; அவர் உடல் சிறிது நேரம் நடுங்கியது. பிறகு சமாளித்துக் கொண் டார்.

''கார்மேகம்! ஒன்றை இழந்தால்தான், ஒன்றைப் பெற முடியும்; என் மலரை நான் இழந்தேன்— ஆனால் இந்த இளைஞர்களுக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டேன். இந்த இளைஞர்களுள் உன் போன்றவர்களும் உள்ளனர். மலர் போன்றவர்களும் உள்ளனர். ஒரு மலர் ஒரு கார்மேகத்தைக் காக்க எத்தனையோ பேர் உண்டு. ஆனால் ஓரிருவராவது அவ்வப்போது இப்படி என்னைப்போல் வாழ்ந்துதான் ஆக வேண்டும்—எங்கு இருக்கிறாளோ!'' இதற்குமேல் பேச்சில்லை. ஒருவரை ஒருவர் ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டே இருந்தோம். வண்டி புறப்படும் அறிவிப்புக் கேட்டது.

''கார்மோகம்! எங்களுக்குப் பக்கத்துப் பெட்டியில்தான் பதிவாகி உள்ளது, ஏறிக்கொள்கிறோம். இயலின் மீண்டும் சந்திப்போம்.'' என்று வேகமாகத் தன் இளைஞர் குழுவோடு சென்று மறைந்தார். அவரையும் மலரையும் நினைத்தபடியே படுக்கையில் சென்று படுத்தேன். காலையில் எழுந்தேன். அருள் இல்லை, பல்துலக்கக் கையைஉயர்த்தியபோது மணிக்கட்டில் கைக்கடிகாரப் பட்டிக்கு அடியில் ஒரு சிறுதாள் நான்காக மடித்துச் சொருகப்பட்டிருந்தது தெரிந்தது, வியப்போடு எடுத்துப் பிரித்தேன். அருள் என்னவோ எழுதியிருந்தார். படித்தேன்.

''கார்மோகம்! மலர் என்பால் அன்புதான் கொண்டிருந்தாள். நானோ அவளைக் காதலித்தேன். செல்வக் குடியில் பிறந்தவளாயிருந்தாலும் அவளது எளிமை என்னை ஆட்கொண்டது. ஆங்கிலம் பயின்றாலும் அவள் கொண்டிருந்த தமிழ் ஆர்வம் என்னை ஆட்கொண்டது.

நான் ஒரு காந்தீய வாதி. இந்த இந்திய மண்ணை அவர் நெறிதான் காக்கும், வளர்க்கும், வாழ்விக்கும் என்று நம்புகிறவன். என் முதல் சந்திப்பில் அவள் கையில் சத்திய சோதனையைக் கண்டேன். அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரு சொற் பொழிவுப் போட்டி, காந்தீயக் கொள்கைகளை விளக்கிப் பேசினேன். அன்று

தான் அவள் என்னைச் சந்தித்து சத்தியசோதனையில் என் கையெழுத்தைப் பெற்றாள்.

''நான் ஒன்றும் அமைச்சன் இல்லை! பெரிய அரசியல் தலைவனும் இல்லை'' என்று முதலில் மறுத்தேன்.'' அவள் சிரித்துக்கொண்டே அமைச்சரிடம், அரசியல் தலைவரிடம் எனக்கொன்றும் ஈடுபாடு இல்லை. என் தந்தை ஒரு காந்தியவாதி — அவர் வாழ்வு, வழி எனக்கு மிகவும் பிடித்தன — அத்தகு நல்ல சிந்தனையை, நெறியினைத் தங்களிடம் கண்டேன்'' என்று சொல்லிக் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டாள். இப்படித்தான் எங்கள் நட்புத் தொடர்ந்தது.

திருக்குறள் விழாவில் ஜான் மீல்டன், கதே முதலிய மேனாட்டு அறிஞர்களோடு திருவள்ளுவரை ஒப்பிட்டு மலர் ஒருநாள் பேசினாள். 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறம்' இல்வாழ்வு தொண்டுக்கு உரியது'' என்று அன்று அவள் குறளை மேற்கோள்காட்டி ஆற்றிய சொற்பொழிவு என்னை அவளவனாக ஆக்கிவிட்டது. என் இலட்சியங்களுக்கு உகந்த துணையாக விளங்குவாள் என்று உணர்ந்தேன். ஆனால் அவள் மென்மையிலும் மென்மையானவள். மலரினும் மெல்லியது அவள் மனம் என்று பழகப்பழக அறிந்து கொண்டேன். நான் மேற்கொள்ளப்போகும் தவ வாழ்வில் அவள் கருகிடுவாளோ என்று அஞ்சியே, அவள் பால் அருள் கொண்டே நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு அவளை வேண்டா என்று மறுத்து விட்டேன். யாரேனும் வேறு ஒருவரை மணந்து கொண்டு அமைதியாக வாழட்டும்'' — என்றுதான் அப்படிச் செய்தேன்.

'அன்புள்ள மலர் நினைவுகள் என்னை சிதைத்து விடுமோ என்று அஞ்சுகின்றேன், அவளைக் காணவேண்டும். கார்மேகம் அவளோடு இணைய வேண்டும் என்று என் ஆவி துடிக்கிறது. ஆனால் இந்தப் பிறவியில் காண

மாட்டேன். காணக்கூடாது — எங்கேனும் தாங்கள் கண்டாலும் ஏதேனும் அவளைப் பற்றிக் கேட்டாலும் எனக்குத் தெரிவிக்க வேண்டா — என்னைப் பற்றியும் அவளுக்குத் தெரிவிக்க வேண்டாம்.

குறிப்பு. தாங்கள் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தீர்கள்; பிரிய வேண்டிய நேரம், இறங்கவேண்டிய நிலையம் வந்து விட்டது; சொல்லாமலேயே பிரிகிறேன் — வருந்தற்க-வாழ்வுத் தொடக்கமும் முடிவும் இப்படித்தானே!

கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டே இருந்தேன். எவ்வளவு நேரம் இருந்தேனோ! ''என்ன பால் குடிக்கவில்லையா, பல் துலக்கவில்லையா? உங்களுக்காகப் பால் வாங்கி வந்தேன்.'' என்ற மோகனவேலு அய்யா பேச்சொலி கேட்டு பிரக்ஞைக்கு மீண்டேன்.

மூன்றாம்நாள் மாலை பதன்கோட் நிலையத்தை அடைந்தோம், நிலையம் மிகச் சிறியதாக இருந்தது, மின் விளக்கும் மினுக் மினுக்கு என்று கொஞ்சமே வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்தது. நாங்கள் பயந்தபடி அவ்வளவு குளிர் இல்லை. திரு ரெட்டியார் முன்கூட்டியே அங்குள்ள சின்மயா தபோவனத்தார்க்கு எங்கள் வருகை பற்றி எழுதியிருந்தார், தபோவனத்திலிருந்து எங்களை அழைத்துப் போக இளைஞரும் காவி அணிந்த முதியர் ஒருவரும் வந்திருந்தனர். முதியவரைக் கண்டதும் 'அரி ஓம்' என்று அவர் அடியில் வீழ்ந்து ரெட்டியார் வணங்கினார். நாங்களும் அப்படியே வணங்கினோம். அதற்குள் அந்த இளைஞர் இரண்டு வாடகைக் கார்களைப் பேசிக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டார். ஆளுக்குப் பத்து ரூபா வீதம் அவர் வாடகை பேசியிருந்தார். 65 கிலோ மீட்டர் தூரம் என்றனர். சிறிது தூரந்தான் சென்றிருப்போம். ஒரே மழை பிடித்துக் கொண்டது. 20 கிலோ மீட்டர் தூரத்தில் பஞ்சாப் எல்லைப் பலகையைக் கண்டோம். பகவத்சிங் பிறந்த மண், குருநானக் வாழ்ந்த மண் என்ற எண்ணம் நெஞ்சில் நிறைந்தது.

கண்ணீர் ததும்பியது. இரவு 10 மணிக்குத் தபோவனம் வந்தடைந்தோம்.

எங்களை அழைத்துச் சென்ற துறவியார் இருவர் இருவர்க்குத் தங்க ஓர் அறை அளித்தார். அறைகள் எல்லாம் தேவையான வசதி கொண்டதாய் அமைந் திருந்தன. ஒவ்வொன்றிலும் இரண்டு படுக்கைகள் இருந்தன; வெப்பநீர் வசதியோடு கூடிய குளியல் அறை ஒன்று, அமர்ந்து, எழுத மேசை, நாற்காலி, துணிமணி, பெட்டி வைத்துக்கொள்ள சுவர் அலமாரி எல்லா வசதிகளும் இருந்தன.

நன்றாக அலறக் குளித்தேன். சுடச்சுட பஞ்சாப் அரிசிச் சோறு, ரசம், சப்பாத்தி பச்சைப்பயறு கூட்டு; வயிறார உண்டோம். படுத்து உறங்கினோம்.

காலையில் கணகண என மணி ஒலி கேட்டது. படுக்கையை விட்டு எழுந்தேன். வெந்நீருக்குரிய சுவிட்சைப் போட்டுவிட்டுப் பல்தேய்த்துக் காலைக் கடன்களை முடித்தேன். குளித்துவிட்டு நேரே தியான மண்டத்திற்குப் போனோம். அங்கே பார்வதி பரமேஸ்வரன் விநாயகர் சிலை உருவில் மண்டபம் ஒன்றில் எழுந்தருளப் பண்ணியிருந்தனர். அருகருகே இராமன், சீதை, அனுமன், இலட்சுமணன் கூடிய தண்ட காருண்ய ஓவியம் ஒன்றும் தபோவன சுவாமி ஓவியம் ஒன்றும் வைக்கப்பெற்றிருந்தன. மங்கிய குத்து விளக்கு ஒளியில் தெய்வீகப் பொலிவுடன் அவை விளங்கின. யார் யாருக்கு எந்தெந்த தெய்வ உரு உள்ளத்தில் குடி கொண்டுள்ளதோ அதனை நினைத்து நெஞ்சில் நிறுத்தி தியானம் செய்தனர்.

பொழுது மெல்லப் புலர ஆரம்பித்தது; கிழக்கே வெண் பனியில் கதிரவன் ஒளி பட்டுத் தெறித்தது. பறவைகள் கீழ்த்திசை நோக்கிக் கூட்டம் கூட்டமாகப் பறந்து கொண் டிருந்தன. நாங்கள் தேனீர் குடித்துவிட்டுக் காலாறச் சிறிது

நேரம் அங்கும் இங்கும் நடந்து இமயமலைச் சாரலின் எழிலைப் பருகினோம். மீண்டும் மணி ஒலி கேட்டது. பல திக்குகளில் திரிந்து கொண்டிருந்த நாங்கள் அனைவரும் தியான மண்டபத்தை நோக்கித் திரும்பினோம். அங்கே மேடையில் தபோவன சுவாமி அமர்ந்திருந்தார். 'அரி ஓம்'... என்று வணங்கி விட்டு நாங்கள் உபநிடத பாடல் கேட்க அமர்ந்தோம்.

"அத யதித-மஸ்மின் ப்ரஹ்மபுரே தஹரம்... எனத் தொடங்கும் சாந்தேக்கிய உபநிடத்தின் எட்டாவது அத்தியா யத்தைத் தொடங்கி, அறிதற்கு அரிய, உரிய தஹரவித்தை பற்றிச் சுவாமிகள் விளக்கத் தொடங்கினார்கள்.

தஹர என்றால் சிறியது என்பது பொருள். ஆகாசம் என்பது இடம் என்ற பொருள்படும். தஹர ஆகாசம் என்பது இந்த மனித அகத்தைக் குறிப்பது. வானத்தைப்போல இதற்கு வடிவில்லை. மிகவும் நுண்மையானது. வானவெளி புல் நுனியில் உள்ள ஒரு பனித்துளியில் ஒடுங்கிக் காணப் பெறுவதுபோல இந்த உள்வெளியிலும் (அந்தராகாசம்) அனைத்துப் பொருள்களும் அடங்கும்.

காலத்துக்குக் கட்டுப்பட்டதாய், ஓர் இடத்தில் அடங்குவ தாய், நிகழ்ச்சி வயப்பட்டதாய் உள்ளனவே மனிதனுடைய மனத்துக்கு அகப்படுகிறது. எந்தவித குணங்களுமற்றதாய் காலதேசவர்த்தமானம் கடந்ததாய் உள்ள பிரமத்தை உணர்ந்துகொள்ள முதல் படியாக ஒரு வழிபாடு வடிவத்தை நெஞ்சில் நினைந்து தியானிக்கவேண்டும். சாந்தோக்ய உப நிடத்தில் இந்த எட்டாவது அத்தியாயம் இதனைப்பற்றியே விளக்கிச் செல்கிறது. இந்த உடம்பே ஆலயம். இதனுள் தாமரையைப் போன்ற சிறு கருவறை ஒன்று உண்டு. அதனுள் சிற்றம்பலம், ஞானவெளி உள்ளது. அதை ஆராய்ந்து தேடவேண்டும்.

இந்தச் சிற்றம்பலத்துள் ஞானவெளியில் வான்-மண் நீர், காற்று, கதிர். நிலவு, விண்மீன் அனைத்தும் உள;

இந்த அண்டத்தில் என்னென்ன உண்டோ எல்லாம் அதனுள் அடங்கும்.

இந்த உடல் முதுமை அடைவது; ஆனால் ஆன்மா மூப் படைவதில்லை. இந்த உடல் இறப்பது; ஆனால் அது இறப் பதுஇல்லை. அதனைப்பசி,தாகம் அணுகாது. அதற்குப்பாவ புண்ணியங்கள் இல்லை'' என்று சாந்தோக்ய உபநிடதத்தின் எட்டாவது அத்தியாயத்தைச் சுவாமிகள் விளக்கிக் கொண் டிருந்தார்கள். திரு.வி.க. அவர்களுடைய உள்ளொளி என்னும் நூலை என் நெஞ்சம் நினைவு கூர்ந்தது.

உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோயிற் கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

என்னும் திருமூலர் திருமந்திரப் பாடலை என் நா ஓதிக் கொண்டிருந்தது. இந்த உபநிடத வகுப்பு முடிந்ததும் காலைச் சிற்றுண்டி தயாராக உணவுக் கூடத்தில் வைக்கப் பெற்றிருந்தது. சப்பாத்தி, பச்சைப் பயறு, பருப்பு வேண்டு மளவு தந்தனர். பால் தேனீர் பருகினோம்.

சரியாகப் பத்தரை மணிக்குச் சிறப்புச் சொற்பொழிவு ஒன்று. சிறப்புச் சொற்பொழிவாளராக தயானந்தர் வந் திருந்தார்கள். தாயுமானவர் பற்றிச் சொற்பொழிவு ஆற் றப்போவதாக அறிந்து அங்குச் சென்றோம்.

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வஸிஷ்யதே
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்னும் பிருஹதாரண்ய கோபநிஷத்தில் முதல் சுலோகத் தைச் சொல்லி,

ஓம். அது நிறைவு. இதுவும் நிறைவு நிறைவிலிருந்தே நிறைவு தோன்றியுள்ளது. நிறைவிலிருந்து நிறைவு வந்த பின்னும் நிறைவு நிறைவாக இருக்கிறது.

$0+=0$; $0-0=0$; $0\times0=0$; $0\div0=0$.

என்று துவங்கிப் பேசத் தொடங்கினார்.

—✕—

சமஸ்கிருத உபநிடங்கள் தமிழ்ப் பக்தி இலக்கியங்கள் இரண்டிலுமே ஒருசேர முற்ற நிறைந்த ஞானம் கைவரப் பெற்றர் தாயுமான அடிகளார். பதினைந்தாம் நூற்றாண்டு வரை இந்திய தத்துவ ஞான உலகில் நிலவிய சமயங்கள் அத்தனையிலும் கற்றுத் தெளிந்த அனுபவ அறிவு உடையவ ராக அவர் திகழ்ந்தார். அந்த அனுபவத்தின் பயனாக அவர் கண்ட நெறி, சமயம் கடந்த மோன சமரச நெறி. இதுவே இறைவன் தனக்கும், உலகுக்கும் முடிந்த முடியாகத் தந்தருளியுள்ளான்'—என்பதே அவர் கண்ட காட்சி.

''வான், காற்று, தீ, நீர், மண்—இவற்றைப் படைத்து அவற்றின் வழி இயக்கமில் உலகைத் தோற்றுவித்து அதில் இயங்குகின்ற உயிர்களை உண்டாக்கி, மெல்ல மெல்ல அவற்றின் அறிவை ஒன்றாய் இரண்டாய் பலவாய் வளர்த்து, அந்த அறிவின் நிறைவாய் மறை நூலை ஆங்காங்கு உரு வாக்கி, அதன் அதன் வழி பற்பல சமய நெறிகள் தோன்று மாறு செய்து, இறுதியில் சமயம் கடந்தமோன சமரச நெறியை இறைவன் வழங்கி அருளினான். அவனை அழுக் காறு, அவா முதலிய அக அழுக்குகள் உடையவர் காண முடியாது. மன மாசற்றவர்கள் காண்பர். அறிவில் எப்போ தும் நிறை ஞானமாய் என்றும் நின்று திகழ்பவன் அவன். அவனை அவன் தன்னருள் கொண்டு காணவேண்டும்'' என்று கூறித் தாயுமானவர் கண்ட கடவுட் காட்சியை விளக்கி,

ஐவகை எனும்பூத ஆதியை வகுத்து அதனுள்
அசரசர பேதமான
யாவையும் வகுத்து, நல்லறிவையும் வகுத்து, மறை
ஆதி நூலையும் வகுத்து,ச்
சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்து,மேற்
சமயங்கடந்தமோன
சமரசம் வகுத்த நீ உன்னையான் அணுகவும்
தன்னருள் வகுக்க இலையோ!
பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே!
பொய்யிலா மெய்யர் அறிவில்
போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்றபொருளே!

என்ற பாடலைப் பாடி முடித்தார்.

பிற்பகல் (myths) தொன்மங்கள் என்ற பொருளில் அறிவியல் அறிஞர் ஒருவர் இந்திய இதிகாச புராணங்கள் எல்லாம் எப்படி இறைவன் உயிர், உலகம், படைப்பு பற்றிய கருத்துக்களைச் சுட்டாகக் கொண்டு அமைந்திருக்கின்றன என்பதைக் காரண காரிய வகைப்படி விளக்கிக் காட்டினார். முற்பகல் நிகழ்ந்த கதையை மேற்கோளாகக்கொண்டு 'ரதம்' என்பது மானுடம்; ஐந்து குதிரைகள், ஐந்து புலன் கள், பார்த்தன் மனம்; பார்த்தசாரதியாகிய கண்ணன் புலன் களை நெறிப்படுத்தும் அறிவு என்று ஒரு விளக்கம் கொடுத் தார். குருட்சேத்திரம் இந்தப் பிரபஞ்சமே; இதில் எல்லா யுகத்திலும் கொடுமையும் கொடியவர்களும் மிகுதியாகத் தான் இருப்பார்கள். அறத்தையும் அருளையும் பின்பற்றும் சான்றோர்கள் மிகமிக அரிதாகவே காணப்படுவார்கள். ஆனால், சத்தியத்தின் துணைக்கொண்டு இறுதியில் அவர் களே வெல்வார்கள்.

குருட்சேத்திரமே ஒவ்வொரு மனிதனின் மனம். இங்கே நல்ல உணர்வுகள் சில உள்ளன. மானுடத்தை வீழ்த்தும் உணர்வுகள் பல கூடிக் குலாவுகின்றன. அறம், அருள்,

உறுதி, விடாமுயற்சி இவற்றால் சத்தியத்தின் துணைக் கொண்டு இறுதியில் நல்உணர்வுகள் வெற்றி பெறுகின்றன. எனவே, குருட்சேத்திரம் என்பது ஓர் இடத்திற்கு உரிய தன்று; ஒரு காலத்திற்கு உரியதன்று; ஓர் இனத்துக்கு உரியதன்று. எல்லாருக்கும் எல்லா இடத்துக்கும் எல்லாக் காலத்துக்கும் உரியது. இப்படி அவர் இந்தியத் தொன்மங் களுக்கு விளக்கம் கொடுத்தார்.

மாலையில் மீண்டும் ஒரு மணி நேரம் ஓய்வு கிடைத்தது. தேனீர் பருகிவிட்டு அருகிலுள்ள இராமர் கோயில் முதலான இடங்களுக்குச் சென்று வழிபட்டோம். இரவு கூட்டுப்பாடல் கள் பல தபோவன மாணவர்கள் பாடிக்கொண்டிருந்தனர்.

மீண்டும் அதே சப்பாத்தி; அதே பச்சைப்பயிறு கத்திரிக் காய் கூட்டு. நல்ல காலமாக நல்ல பால் கிடைத்தது. உண்டுவிட்டு மறுநாள் ஜம்முவிலுள்ள வைணவி கோயி லுக்குச் செல்லத் திட்டமிட்டுக்கொண்டு உறங்கினோம்.

8

ஜம்மு வைணவி கோயிலுக்குப் போவதற்கு முன் சாமுண்டி அம்மன் கோயில் தலைலாமா முதலான இடங் களைக் காணத்திட்டமிட்டோம். அதற்கு ஏற்றவாறு டிரைவர் காலை 6 மணிக்கே வந்துவிட்டார். வழியெல்லாம் மலைகள், பாறைகள், பள்ளத்தாக்குகள்; மரங்கள் அடர்ந்த காடுகள், வழியில் சாமுண்டி என்னும் சிற்றூர். அங்கே சாமுண்டி அம்மன் கோயில் அழகாக இருந்தது. கரும்பளிங்குச் சிலை யில் அம்மன் வடிவு பெற்றிருந்தாள். காலை 9 மணிக்கெல் லாம் தலைலாமாவை அடைந்தோம். அங்கே தலைலாம மடம் மிகப் பெரியது. முதல் லாமா அமர்ந்து ஆட்சி செய்த பெரிய காவி வண்ண நாற்காலி, காலியாக இருந்தது. சுற்றிலும் புத்த பிட்சு சிலைகள் சின்னசின்ன அளவில் மிக

அழகாகச் செதுக்கப் பெற்றிருந்தன. புத்த பிட்சுணிகளும் புத்த பிட்சுகளும் எங்கும் சூழ்ந்திருந்தனர்.

அங்கே அவலசேசுவரர் இந்துக் கோயில் ஒன்று மிக அழகாகக் கட்டப்பட்டிருந்தது. சிவபெருமான், பார்வதி, இராமர், சீதை, இலக்குவன், அனுமன் முதலியோர் சிலைகள் கண்ணைக் கவர்வனவாக அங்கே இருந்தன. இங்குச் சிதம்பரத்தில் போல் நடராஜர் சிலை இருக்கிறது. இது அதைவிடப் பெரியது; கூத்தன் தன் திருவருள் இங்கும் ஆட்சிப் பெற்றுள்ளதை எண்ணி மகிழ்ந்தேன்.

பிறகு ஹாங்கடா என்றும் ஊரை அடைந்தோம். வஜ்ரேஸ்வரி கோயில் மிகச் சிறியது. அதனைப் பார்த்தோம். பகல் 12 மணிக்குக் கோயில் கருவறையைத் திறந்தனர். வஜ்ரேஸ்வரி என்று சுவாமி பெயர் இருந்தாலும் அங்கும் ராமர், சீதை, மண்சிலைகளே வழிபடு தெய்வங்களாக இருந்தன. ஏறக்குறைய இரண்டுமணி நேரம் கோயிலையும் சுற்றுப் புறத்தையும் சுற்றிப் பார்த்தோம்.

அதனைவிட்டுப் புறப்பட்டு ஜ்வாலமுகி என்னும் ஊருக்குப் புறப்பட்டோம். அங்கே குமுதாஜி அம்மன் கோயிலுக்குச் சென்றோம். கோயில் ஒரு மண்டப வடிவில் உள்ளது. மண்டபச் சுவரில் ஆங்காங்கு தீக்கொழுந்து நாவிட்டு எரிந்தது பார்த்து வியந்தோம். வேறொரு இடம் சிறு குகைபோல் இருந்தது. அங்கே நீர் இயற்கையாகக் கொதித்துக் கொண்டிருந்தது. அரிசியை ஒரு துணிப்பையில் கட்டிப் போட்டால் சிறிது நேரத்தில் சோறாக ஆகிவிடும் என்றனர். எங்களுக்கு நேரம் இல்லாததால் முயன்று பார்க்கவில்லை. மாலை மணி ஆறாகி விட்டது. தபோவனத்திற்கு மீண்டோம். வழியில் டயர் பஞ்சராகிவிட்டது. இரவு பத்து மணிக்கு வந்து சேர்ந்தோம்.

காலை 4 மணி எப்போதும் போல் ஒலித்தது. விரைவாக எழுந்து குளித்து ஜம்மு வைஷ்ணவி கோவில் காணப் புறப்பட்டோம். நேற்று சொல்லியபடி வாடகைக்கார் காலை

6 மணிக்கே வந்துவிட்டது. தபோவனத்தில் தேநீர் அருந்தினோம். காலை நண்பகல் உணவுக்காகச் சப்பாத்தி, பொங்கல் பொட்டலங்கள் தயாரித்துத் தந்தனர். நன்றி சொல்லிப் பெற்றுக் கொண்டோம்.

வழியில் மீண்டும் சாமுண்டிதேவியை வணங்கிவிட்டுச் சிற்றுண்டியை அங்கேயே உண்டோம். 8 மணிக்குக் கார் புறப்பட்டது. சாலை மிகக் குறுகியதாக இருந்தது. எதிரே ஏதேனும் வண்டி வந்தால் நிறுத்தி நிறுத்திச் செல்ல வேண்டி வந்தது. ஜெஸ்ஸமிர் கடந்து மன்னாவை அடைந்தோம். கார் சூடாகிவிட்டது என்று சிறிதுநேரம் நிறுத்திவிட்டுக் காரோட்டி தேநீர் அருந்தினார். பிறகு நண்பகல் மாதவப்பூரை அடைந்து கையில் கொண்டு வந்திருந்த சப்பாத்தியைக் காரோட்டியுடன் பகிர்ந்து உண்டோம். வழியில் கோட்டியா சிவன் கோயிலைப் பார்த்தோம். சிவலிங்க வழிபாடு அங்கு நிகழ்ந்து கொண்டிருந்தது.

அதனைக் கடந்தபின் பஞ்சாப் அருகில் உள்ள விஜய பூரை அடைந்தோம். பிறகு கட்சு வழியாக பஞ்சநதியைக் கடந்தோம். நீண்ட பாலம். கீழே மிகக் கீழே சீலம், சீனாப், ரவி, பியாஸ், சட்லஜ் என்றும் ஐந்து நதிகளும் கலந்து கரைந்து ஒன்றாகி ஓடிக்கொண்டிருந்தன. பஞ்சாப்பைக்கடந்து லட்சுமணபுரி வழியாக ஜம்முவை அடைந்தோம். ஏறக்குறைய 350 கிலோ மீட்டர் பயணம் செய்திருந்தோம். மாலை ஜம்மு ரகுநாயகன் கோயிலை அடைந்தோம். வெண்பளிங்கில் பெரிய வடிவில் இராமர், சீதை இலக்குவன், அனுமன் எழுந்தருளியிருந்ததைப் பார்த்து வணங்கினோம். இந்தக் கோயிலில் பல சிறு சிறு அறைகள் இருந்தன. ஒவ்வொன்றிலும் எண்ணிக்கையற்ற சின்னசின்ன சிவலிங்கங்கள்; கோடி லிங்க வழிபாடு செய்தோம். பத்ரிநாதர் முதலிய வடநாட்டுத் தெய்வங்கள் எல்லாம் இங்கு எழுந்தருளப் பண்ணியிருந்தனர்.

வைணவி கோயிலுக்குப் புறப்பட ஆயத்தம் ஆனோம். மேலே ஏறிச் சென்ற மலைப்பாதை வழியே மெல்லக் கார்

சென்றது. ஏறக்குறைய 70 கிலோ மீட்டர் பயணம்; காட்ரா என்னும் ஊரை வந்தடைந்தோம். அதன்பின் நடந்தோ, குதிரையிலோ, ஏணையிலோ செல்ல வேண்டியிருந்தது. இருட்டிவிட்டது. காட்ராவில் பரமேஸ்வரி தர்மசாலையில் தங்கினோம். தங்குவதற்கு இடம் தந்து சுடச்சுட பஞ்சாப் அரிசிச்சோறு சமைத்து தர்மசாலையினர் விருந்தளித்தனர். யார் யாரோ வள்ளல்கள் தந்த செல்வம் இங்கே வருகின்ற பயணிகளுக்கு உதவுவதை எண்ணி நன்றி உணர்வோடு அவர்களை வாழ்த்தினேன்.

காலையில் குதிரையில் வைணவி கோயிலுக்குப் புறப்பட்டோம். ஏறக்குறைய 4 மணி நேரப் பயணம். ஒரு பக்கம் ஓங்கி உயர்ந்த மலை; மறுபக்கம் ஆழ்ந்து தாழ்ந்த பள்ளத்தாக்கு-கரணம் தப்பினால் மரணம்.

வைஷ்ணவி கோயிலை அடைந்தோம். வரிசை வரிசையாகப் பயணிகள் தரிசனத்திற்காகச் சென்றுகொண்டிருந்தனர். நாங்களும் சென்று வரிசையில் நின்றுகொண்டோம். உள்ளே ஒரு சிறு குகையில் வைஷ்ணவி கல் இருந்தது. அதற்கு ஒருபுறம் சரசுவதி; இன்னொருபுறம் காளி; எல்லாம் கற்களே. அருகில் எல்லோரும் தங்களால் இயன்ற காணிக்கையைச் செலுத்தினர். நான் ஒரு ரூபாய் செலுத்தினேன். பக்கத்தில் ஒருவர் நின்றுகொண்டு வைஷ்ணவி பிரசாதமாக நாணயங்கள் வழங்கிக் கெகண்டிருந்தார். எனக்கு எட்டணா நாணயம் கிடைத்தது. இந்தியாவிலேயே இங்குதான் நாணயங்களைப் பிரசாதமாக வழங்கும் வழக்கத்தைக் கண்டேன். வைஷ்ணவி கோயில் அருகில் இராமர் அனுமன் சிலைகள் இருந்தன. சிவலிங்கம் அழகாக இருந்தது.

இன்னும் மேலே இரண்டு கிலோ தூரத்தில் பைரவி கோயில் இருப்பதாகக் கூறினார்கள். மேலும் 500 அடி ஏறினோம், இங்கும் கல் வடிவே. சிலை இல்லை. நேரம் கடந்து கொண்டிருந்தது. குதிரைக்காரர் வற்புறுத்தினார்;

இறங்கினோம். மாலை 6 மணிக்கு மீண்டும் நாங்கள் தங்கியிருந்த காட்ரா சத்திரத்தை அடைந்து இரவைக் கழித்தோம்.

மறுநாள் ஆர்வத்தோடு சீக்கியர் தங்கக் கோயில் திகழும் அமிர்தசரசுக்குப் புறப்பட்டோம். அமிர்தசரசு என்றதும் அங்கு நிகழ்ந்த சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகளும், ஜாலியன்வாலாபாக்கில் ஜெனரல் டயர் நிகழ்த்திய கொலைகளும், மாவீரன் பகவத்சிங்கின் அஞ்சா நெஞ்சமும் என் கண் காட்சியளித்தன. குர்தாபூர், சோஜன்பூர் வழியாக நண்பகல் அமிர்தசரசை அடைந்தோம்.

விடுதி ஒன்றில் தங்கிச் சிறிது ஓய்வு கொண்டோம். டாங்கா என்ற பெயரில் குதிரைவண்டிகள் இருந்தன டாங்காவில் ஊர்சுற்றிப் பார்க்கலானோம். முதலில் ஜாலியன் வாலாபாக் கோட்டைக்குள் டாங்காவாலா அழைத்துச் சென்றான். சுதந்திர வீரர்களைச் சுட்ட குண்டுகள் பாய்ந்த குழிகள் இன்னும் அந்த மதில் சுவர்களில் காணப்பெற்றன. அதனை அந்த நினைவுச்சுவராக வைத்துள்ளனர். இறந்தவர் சமாதியையும் பார்த்தோம். குண்டுகளுக்கு அஞ்சி அங்கிருந்த பெரிய கிணற்றில் குதித்து உயிர் துறந்த நினைவுக் கிணற்றையும் பார்த்தோம். பகவத் சிங் நினைவும் வந்தது. உரிமைப்போரில் சுதந்திர வீரர்களைக் கொல்ல ஆங்கிலேயன் அமைத்தத் தூக்கு மேடையில் தானே ஏறி, தானே தூக்கிட்டுக்கொண்டு தேசவிடுதலைக்காகத் தன் உயிரைத் தந்த தலைமகனின் நினைவு வந்தது; கண் கலங்கின;

''மாண்டார் பகவத் சிங்கம்-தூக்கில்
மாணட தங்கம்...''

நான் பள்ளிப் பருவத்தில் கேட்ட அந்தப் பாடல் அடிகளை நா தழுதழுக்கப் பாடியது; சிறிது நேரம் யாருக்கும் தெரியாமல் தேம்பித் தேம்பி அழுதேன்.

கதிரவன் மறையும் மாலைவேளையில் சீக்கியர் தங்கக் கோயிலை அடைந்தோம். மண்ணில் ஒரு தங்கக் கதிரவன் போல் பொன்னொளி வீசித் திகழ்ந்தது. சுற்றிச் சூழ்ந் திருந்த ஏரியில் கதிரொளிகள் பட்டுத் தெறித்தன. அந்த அலை ஒளிகளுக்கு இடையே அமைந்த தங்கக் கோபுரச் சுடர் ஒளி சூரியனுக்குள் ஒரு சூரியனாகத் தோன்றிற்று. முதல் வாயிலை அடைந்தோம். எல்லோரும் கைகால் கழுவிக் கொண்டிருந்தனர். பின்பு பெண்கள் முக்காடிட்டுக் கொண்டும், ஆண்கள் துண்டு தலையில் கட்டிக்கொண்டும் சென்றனர். நாங்களும் அப்படியே பின்பற்றினோம். துண்டு களை வாயிலார் வழங்கினர்.

ஏரியைச் சுற்றிக் கொண்டு கோயில் வாயிலுக்கு நேரே அமைந்திருந்த பாலத்தருகே வந்தோம். அழகான நீண்ட பாலம் கோயிலுக்கு எங்களை அழைத்துச் சென்றது. இரு மருங்கும் துள்ளித் திரியும் மீன் கூட்டங்கள். பாலத்தின் பக்கத் தூண்களில் அழகான விளக்குகள் ஒளி உமிழ்ந்து கொண்டிருந்தன.

கோயிலுள் நுழைந்ததும் சீக்கிய சமாதிச் சுவரை வழிபட்டு மேலே சென்றோம். சுற்றிலும் தாழ்வாரம். நடுவில் சமாதி. மலரிட்டு வணங்கினோம்.

ஆங்காங்கே படிந்திருந்த கால் தூசுகளைப் பெண்கள், ஆண்கள் பலர் போட்டிப் போட்டுக்கொண்டு தூயதுணியால் துடைத்துக் கொண்டிருந்தனர்; கவர்னர் மனைவிகூட அன்று அங்கு அழுக்குத் துடைத்ததாக அறிந்து வியந்தேன்; மகிழ்ந்தேன். தெய்வ சன்னிதியில் யார் பெரியர், யார் சிறியர்—'அனைவரும் சமமே' என்ற அருள்வாக்கை நினைத்துக் கொண்டேன்.

சமாதிக்கு அருகில் சீக்கியகுருமார்கள் 'பெரிய மந்திரத்' தைப் படித்துக் கொண்டிருந்தனர். சற்று தூரத்தில் இருந்த

துர்க்கை, கிருஷ்ணன், இராம லக்குவனர் கோயில்களைப் பார்த்தோம். விடுதிக்கு வந்து இரவு ஓய்வு கொண்டோம்.

காலையில் சிம்லா பயணம் மேற் கொண்டோம். வழி யெல்லாம் மலைகள், மலைச்சாரல்கள், வாதாம் மரக் காடுகள்—உள்ளமும் உடலும் குளிர்ந்தன. சிம்லா கடைத் தெருவில் மிளாம்பழம், பச்சை வாதாம் கொட்டைகள் வாங்கித் தின்றோம். ஊர்க்கோடியிலிருந்த சிவன் கோயி லுக்குச் சென்று வழிபட்டோம். நாங்களே நீரிட்டு லிங்கத்தை முழுக்காட்டி பாட்டுப்பாடி விளக்கேற்றி, பழம், பூ படைத்து வழிபடும் வாய்ப்பு எங்களுக்கு அங்கு கிடைத்தது.

நேரே சண்டிகார் வந்தோம். இந்தியாவின் எழிலார்ந்த நகரங்களில் தலையாய இடம் அதற்கு உண்டு. சாலைகள், பூங்காக்கள், மரங்கள் ஒழுங்காக, அழகாக, ஊரெங்கும் அமைந்திருந்தன. எங்கும்பச்சை, எங்கும் தூய்மை. ஆனால் சிற்றுண்டிச் சாலைகள், பேருந்து நிலையம் முதலிய பொது மக்கள் கூடும் இடங்கள் எல்லாம் அழுக்கும், அசிங்கமும் நிறைந்திருந்தன.

சண்டீசுவரி கோயிலுக்குச் சென்றோம். கொடுமையை, கொடியவர்களை அழிக்கும்தேவி அவள் என்று கூறினார்கள் சண்டீசுவரி கல் சிலையில் வடிவெடுத்திருந்தாள். அருகில் மானஸா தேவி கோயில்; நம் ஊர் அம்பாள் கோயில்போல் இருந்தது. அங்கு யார் வேண்டுமானாலும் உண்ணும் வாய்ப்பும் வசதியும் செய்து வைத்திருந்தனர். இரவு விடுதி ஒன்றில் சண்டிகரில் தங்கிவிட்டோம்.

காலையில் புறப்பட்டு மீண்டும் சிம்லா வழி குருக்ஷேத் திரம் சென்றோம். பிற்பகல் 3 மணி அளவில் குருக்ஷேத் திரத்தை அடைந்தோம். மகாபாரத நிகழ்ச்சிகள் அனைத் தும் அங்குச் சித்திரிக்கப் பெற்றிருந்தன. மகாபாரத யுத்தத் தில் இடம் பெற்றிருந்ததாகக் கருதப்பெறும் பொருள்கள், கடலுள் மாய்ந்து அழிந்த துவாரகையின் அழிபடு பொருள் கள் கொண்ட பொருட்காட்சியகமும் அங்கிருந்தன.

பார்த்தசாரதியாகிய கண்ணபிரான் அருச்சுனனுக்குக் கீதை போர்க்களத்தில் உபதேசம் செய்த நிகழ்ச்சி, இறுதி நாட்கள் முள்படுக்கையில் கழித்த பீஷ்மாச்சாரியாரின் தோற்றம், அவர்க்கு மண்ணிலிருந்து நீர் பீரிட்டு எழுந்து வந்து அவர் தாகத்தைத் தீர்க்குமாறு அர்ச்சுனன் அம்பெய்த நிகழ்ச்சிகள் எல்லாம் சிலை வடிவில் மிக தத்ரூபமாக அமைக் கப்பெற்றிருந்தன.

மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்கும் பீஷ்மனைச் சுற்றி பஞ்சபாண்டவர்கள் கலங்கிய நிலையில் சூழ்ந்திருந்த காட்சி நெஞ்சை உருக்கிக் கண்கலங்க வைத்தது. ஊரே ஓர் அருங்காட்சியகமாகத் திகழ்ந்தது. காலா காலமாகத் நிகழ்ந் துவரும் அகப்புற பாரதப்போர் ஒன்றில் ஈடுபட்டு விடு பட்டது போன்ற உணர்ச்சி இரவில் நெஞ்சில் நிலவிக் கொண்டிருந்தது.

நேரே பதன்கோட்டைக்குச் சென்றோம். வழியில் இடை யிடையே சிற்றுண்டி, உணவுக்கு மட்டுமே வேன் நின்றது. இரவு சென்று தபோவனத்தை அடைந்தோம்.

காலையில் மீண்டும் அருகில் இருந்த எல்லா இடங்களை யும் சுற்றிப் பார்த்துவிட்டு நண்பகல் விடுதியை அடைந் தோம். உணவு பரிமாறியவருள் ''தமிழ் நாட்டைச் சார்ந்த ஒருவர் எனக்குச் சோறு போட்டுச் சாம்பார் ஊற்றிக் கொண்டே என்னங்க எல்லா இடத்தையும் பார்த்திட்டீங் களா?'' என்று கேட்டார்.

''எனக்கென்னப்பா தெரியும்-உடன் தில்லிக்காரர் அந்த நீலச்சட்டை பாஷா வந்திருக்கிறாரே—அவர்தான் எல்லா இடங்களுக்கும் அழைத்துக் கொண்டு போனார். இங்கே தில்லியில் அவர் ரெட்டியார் ஏஜெண்டு. அதனால் தன் செலவிலேயே எங்களை எல்லா இடங்களுக்கும் இங்கு அழைத்துச்சென்று காட்டினார்'' என்று சாப்பிட்டுக் கொண்டே சொன்னேன்.

''நாளைக்கு ஊருக்குப் போகிறீர்களா? அதோ அங்கே 'வள்ளுவர் குடில்'னு ஒண்ணு இருக்கு. அந்தப் பெயர் இங்கு வருகிற ரொம்ப பேர்க்குத் தெரியாது. தமிழ் நாட்டிலிருந்து வருகிறவர்க்குள்ளே சிலபேர், வெளி நாட்டுப் பயணிகள் சில பேர் மட்டும் அங்குச் சென்று வருவார்கள். நீங்கள் நன்றாகத் தமிழ் பேசுகிறீர்கள். தஞ்சாவூர்க்காரர்போல் இருக்கிறது; எனக்கும் கும்பகோணம்தான்; சின்னவனாக இருக்கும்போது அப்பாவுடன் இங்கு வந்துவிட்டேன். அந்தக் குடிலை யாரோ ஒரு அம்மா நடத்துறாங்க—அவங்களை மாதா மாதா என்று எல்லோரும் சொன்னாங்க; காலை மாலையில் திருக்குறள் பாராயணம் நடக்குது; மாலை 6 மணிக்கு அந்த மாதா பகவத்கீதை, இந்தி சொற்பொழிவுசெய்யறாங்க-முதியோர் இல்லம், அனாதைப்பள்ளிக்கூடம், பசு பராமரிப்புப் பண்ணை எல்லாம் வைத்து நடத்துறாங்க; ஒருதரம் அவுங்களைப் பார்த்திருக்கேன். ஒங்க வயசுதான் இருக்கும் மஞ்சள் கதர் புடவையை உடுத்தியிருந்தாங்க; ஊருக்குப் போறதுக்குள்ளே நீங்களும் ஒருமுறை போய்ப் பார்த்துட்டு வந்துடுங்களே. 'கிட்டதான்; கிழக்கே மலையடிவாரத்தில் அதோ அந்த மரக்காட்டுக்குப் பின்னாலே மலைச்சரிவில் இருக்குது'' என்றான்.

இந்த வடவிமயச் சாரலில் 'வள்ளுவர் குடிலா? எனக்கு வியப்பாக இருந்தது, குமரி முனையில் விவேகானந்தர் மண்டபம் இருக்கலாம். உதகைக் காட்டுப்பகுதிக்கு வால்மீகி வனம் என்று பெயர் வைக்கலாம். திருவரங்கக் காவிரிக் கரைத் துளசி வனத்திற்கு 'மீரா நத்தவனம்' என்று பெயர் சூட்டி மகிழலாம். ஆனால் இந்த வடகோடியில் இப்படி ஒரு 'வள்ளுவர் குடிலா' நினைக்க நினைக்க எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இதை ஒரு வடநாட்டுப் பெண் தோற்றியிருந்தாள் என்றால் நிச்சயமாக நம் இந்தியா வாழும்—ஒருமைப்பாட்டில் உயர்ந்தோங்கி வாழும்' என்று எண்ணியவனாய்ப் பக்கத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்த கிருஷ்ண சாமியைப் பார்த்து, 'ஏதோ ஒரு மைல் தூரத்தில் 'வள்ளுவர்

குடில்' என்று ஒரு ஆசிரமம் இருக்குதாம்; பார்த்துவிட்டு உடனே வந்துவிடுவோம்'' என்று நூண்டினேன். அவருக்கு அவ்வளவாக ஈடுபாடில்லை. மேலும், அங்கும் இங்கும் திரிந்து சோர்ந்துபோயிருந்தோம்; என்றாலும் என் வேண்டுகோளையும் ஏற்று அங்கு என்னோடு புறப்பட்டார்.

சுமார் அரை மணி நடந்து அந்தச் சமையற்காரர் சொன்ன மரக்காட்டை அடைந்து விட்டோம். அங்குச் சென்ற உடனேயே 'வள்ளுவர் குடில்' என்று எழுதிய தோரணம் கண்ணில் பட்டது. மேலே தொடர்ந்து சென்றோம். இயல்பாகவே பழமரங்களும், பூஞ்சோலைகளும் அமைந்த சூழலில் ஆசிரமம் அமைந்திருந்தது. எளிய முறையில் சிறு சிறு அறைகளைக் கொண்டு நான்கைந்து விடுதிகள் மலைச்சாரலுக்கு ஏற்பக் கட்டப்பட்டிருந்தன. அதன் நடுவில் வட்ட வடிவில் அமைந்த...பெரிய சொற்பொழிவு மண்டபம் ஒன்று இருந்தது. அதனை ஒட்டியிருந்த ஒரு சிறு குடிசையில் மாதா—அதாவது அந்த வள்ளுவர் குடில் தலைவி வாழ்வதாகவும் அவரை ஆசிரமத்தைச் சேராத பிறர் மாலை சொற்மொழிவு போதுதான் காண முடியும் என்றும் அங்குக் காவல் செய்தவன் ஒருவன் சொன்னான்.

'அவர் யார்? இங்கு எப்படி வந்தார்? இவ்வளவு பெரிய கட்டிடங்கள் எப்படி அவரால் உருவாக்க முடிந்தது' என்று அறிய ஆர்வம் மிக்கவன் ஆவேன். உடன் வந்த கிருஷ்ணசாமி உடனே மீள நினைத்ததால் 'நான் எப்படியும் இரவு அல்லது காலையில் குழுவினர் புறப்படுவதற்கு முன் வந்து உடன் சேர்ந்துகொள்வேன்' என்று சொல்லி மாலை எப்போது வரும் என்று காத்திருந்தேன். அப்படிக் காத்திருந்தபோது நேரத்தை விணே கழிக்காமல் அனாதைப் பிள்ளைகள் பயிலும் இடம், தொழில்கற்கும் இடம், முதியோர்கள் வாழும் இடங்கள் இவற்றைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தேன். முதியோர் சிலர் குழந்தைகளுக்கு கதை சொல்லிக் கொண்டிருந்தனர். அவர்கள் மடியில்

உட்கார்ந்துகொண்டு சிறார் சிலர் ஆர்வத்தோடு கதை கேட்டுக் கொண்டிருந்தனர்.

இன்னும் சிலர் பூச்செடிகள் நட்டுக்கொண்டும் வட்ட வட்டமாகப் பாத்தி கோலிக் கொண்டும் நீர் இயல்பாக ஓடச் சிறு சிறு கால்வாய்கள் வெட்டிக்கொண்டும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டு ஒத்துழைத்துக் கொண்டு பணி யாற்றிக் கொண்டிருந்தனர்.

சிலர் பசுக்களைக் குளிர்ப்பாட்டிக் கொண்டும், புல்போட் டுக் கொண்டும், கன்றுக்குட்டியோடு லட்சுமி, காமதேனு, கண்ணா கோபாலரா என்று பேசி விளையாடிக் கொண்டும் இருந்ததைப் பார்த்தேன்.—இப்படிப் பகற்பொழுது கழிந்தது.

மாலை வந்தது. சொற்பொழிவு மேடைக்கு அருகில் போய் அமர்ந்து கொண்டேன். சரியாக ஐந்து மணிக்கு மணி அடித்தது. அனாதைச் சிறுவர் பலர் திரண்டு வந்தனர். குடிசையிலிருந்து பக்கக் கதவு வழியாக மாதா சொற்பொழிவு மேடைக்கு வந்தார். ஒரே மஞ்சள் புடவை உடலைச் சுற்றித் தலைவரை சென்று முக்காடிட்டுக் கொண்டிருந்தது. கால் விரல்கள், கைவிரல்கள் முகம் கண் இவையே கண்ணுக்குக் காட்சி தந்தன. வந்து அமர்ந்தவுடன் அன்போடு அவை யோரை மாதா நோக்கினார். சேய்மையிலிருந்து கண் மேடைவரை பார்த்துக்கொண்டே வந்து என்னிடம் நிலைக் குத்தி நின்றுவிட்டது. அந்தக் கண்கள் ஆம் அந்த மலர்க் கண்கள், என்னை ஆட்கொண்ட கண்கள்—ஆம் அவைதான். என்னிடம் நிலைக்குத்தி நின்றுவிட்டது. ஆம் அவள்! மலர் தான்' என் மலர்தான் என்று அறிந்து கொண்டேன், கை கால் முகத்தை எல்லாம் முச்காடிட்டு மறைத்துக் கொண் டாலும் அந்தக் கண்ணின் ஒரு வினாடி பார்வை போதுமே. எந்த வடிவில், எந்தச் சூழலில் இருந்தாலும் அவள் மலர் தான் என்று என் கண் கூறிவிடுமே. வினாடியில் புரிந்து கொண்டு விட்டேன். சட்டென்று என்பால் நிலைக்குத் தி

நின்ற கண்ணைத் தன்வயப்படுத்திக்கொண்டு, நிமிர்ந்து, கணீர் என்ற குரலில், பகுதாரி பண்ணில்,

நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி என்னைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ — இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே (சொல்லடி)

என்ற பாரதி பாடலைப் பாடினார், அந்தக் கந்தர்வ இசையில் அங்குக் குழுமியிருந்த சின்னஞ்சிறுவர்களும், முதியவர்களும் வெளியூர்ப் பயணிகளும் ஓவியமாக்கப் பெற்றிருந்தனர். பாடல் முடிந்ததும் அதன் பொருளை இந்தியில் சொல்லிவிட்டுத் தன் சொற்பொழிவைத் தொடர்ந்தார்.

சொற்பொழிவு இந்தியில் இருந்ததால் என்னால் தொடர்ந்து முழுமையாக அறிந்து கொள்ள இயலவில்லை. இடையிடையே மனத்துக்கண் மாசிலன் ஆதல்...பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல்...என்ற குறள்களைக் கூறி கீதையின் சுலோகங்களையும் கூறி அவர் விளக்கிய பாங்கிலிருந்து வள்ளுவத்தின் தனித்தன்மையை எடுத்துரைப்பதாக ஒருவாறு உணர்ந்து கொண்டேன். அவையோர் வைத்தகண் வாங்காமல் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்; ஓரிரு அறிஞர்கள் குறிப்பெடுத்துக்கொண்டிருந்தனர்.

கூட்டம் தொடங்கியலிருந்து நான் மலரையே பார்த்துக் கொண்டிருந்தேன்' அந்த மலர்க் கன்னங்கள், மரக் கிளையிலிருந்து விழாத, அணில் கொறிக்காத கிளி கொத்தாத குரங்கி குதறாத, வண்டு துளைக்காத ஒரு ஒட்டு மாங்கனி, கனிந்து வற்றி, காய்ந்து, ஒட்டி உலர்ந்தாற்போல் மஞ்சளும் சிவப்பும் கலந்த வண்ணத்தில் சுருங்கி இருந்தது. பாடம் செய்யப்பெற்ற அத்திச்கனிகள் போல் அந்த செம்மலர்க் கைகளும் கால்களும் மெலிந்துபோய் இருந்தன. கண்கள் மட்டும் வானத்து மீன் போல் ஒரு தெய்வீக ஒளியை அலை

அலையாய் மண்டபம் எங்கும் பரப்பிக் கொண்டிருந்தது. தொடர்ந்து காண்பவர் மனமாசுகளை—அவர் வெகுளிகளை அகற்றி ஆட்படுத்தவல்ல அருள் ஒளியாய் அவை திகழ்ந்தன.

கூட்டம் முடிந்ததும் அவரவர் தாம் தாம் கொண்டு வந் திருந்த காணிக்கைகளைச் செலுத்தி வணங்கிவிட்டு விடை பெற்றுச் சென்றனர். மூடிய கண் திறவாமல் தியானத்தில் இருந்த மலர்க்கு யார் என்ன கொடுத்தார் என்று தெரியாது. நானும் சென்று முன் நின்றேன். என் கையில் கொடுக்க காணிக்கை ஒன்றும் இல்லை. அன்றைய மங்கை மலரையும், இன்றைய மாதா மலரையும் எண்ணினேன். நா வரண்டது. நெஞ்சு முட்டியது, கண்கள் கலங்கின. பொல பொல என்று கண்ணீர் பெருகி பத்மாசனத்தில் இருந்த மாதாவின் கை களில் உதிர்ந்தன. கண்களைத் திறந்து பார்த்தார்.

'கார்மேகம்! — வடநாட்டுப் பயணம் வந்தீர்களா? நாளைக்கு இருப்பீர்களா?' என்றார்.

இல்லை உடனே போக வேண்டும்' என்று நினைத் தாலும், உம்—இருக்கிறேன் என்று நா சொல்லிவிட்டது.

அனைவரும் சென்று விட்டனர். பக்கத்தில் வயது முதிர்ந்த அம்மையார் மூவர் மட்டும் இருந்தனர். அவர் களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

''என்ன கார்மேகம்! அதற்குள் தலையில் ஓரிரு நரை தோன்றிவிட்டதே! கவலையா? அம்மா, தங்கை நலமா...'' என்று என்னைப் பற்றி உருக்கத்தோடு விசாரிக்கத் தொடங் கினார்.

''நான் மிக்க கவலையோடு, 'ஏன் மலர்! உங்கள் வாழ்வு...இப்படியா?...எப்படி இதெல்லாம் நேர்ந்தது?'' என்று கலங்கினேன்.

''ஏன் கார்மேகம்! ஏன் இந்தக் கலக்கம். திருவருள் எப்படி எப்படியோ பாதை வகுத்துக் கொடுக்கிறது. நாம்

மட்டும் நேர்மையாய், உண்மையாய் இருந்தால் போதும். எப்போது, எங்கு, எப்படி நம்மை அழைத்துச் செல்ல வேண்டுமோ அப்போது ஏதோ ஒரு மாயக்கை நம் கையைப் பிடித்து வழி நடத்துகிறது. அப்போது ஏதோ ஒரு மாயஒளி நம்முன் நமக்காகக் கிடக்கும் பாதையை நமக்குக் காட்டிக் கொடுக்கிறது.

''மு. வ. இல்லத்தில் நான் தில்லிக்குப் போகும்போது சித்தப்பாவுடன் உங்களைச் சந்தித்தேன் அல்லவா? அன்றே தில்லிக்குப் பயணமாகி விட்டேன். நான் சிறுமியாக ஓடி ஆடிய, மங்கையாகப் பயின்று பழகிய தமிழ் மண்ணைவிட்டுப் பிரிந்து, மொழியிலும், பண்பிலும் முழுக்க முழுக்க வேறுபட்ட தில்லியில் வேலை தேடிக் கொண்டு ஏன் வந்தேன்? உங்களுக்கு அவ்வளவாகத் தெரிந்திருக்காது. ஆண்கள் என்று எடுத்துக் கொண்டால் நான் பழகியது அப்பா, சித்தப்பாவுடன்தான். அவர்களிடம் மட்டும்தான் என் வாழ்நாளில் நான் நெருங்கிப் பழகியுள்ளேன். அப்புறம் கள்ளங் கபடம் இல்லா உங்கள் பேச்சு, சித்தப்பா உங்களைப் பற்றிச் சொன்ன நல்ல வார்த்தைகள், மு. வ. விடம் நீங்க கொண்ட ஈடுபாடு உங்களிடமும் என்னை நட்பு கொள்ளச் செய்தது. ஆனால் நான் மணந்து வாழ விரும்பிய அந்த காந்தீயத் தொண்டன், அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உங்களுக்குச் சித்தப்பா அறிமுகப்படுத்தி வைத்தாரே அந்த அருள், என்னை மறுத்தபோது, என் வாழ்வே எனக்கு இருண்டுவிட்டது. பயின்ற அண்ணாமலையிலும், தந்தை வாழ்ந்த மதுரையிலும் எனக்கு வேலை கிடைத்தாலும், என் மனம் என்னவோ அங்கெல்லாம் அருள் நினைவிலிருந்து தப்ப முடியாது என்று தில்லிக்கு ஓடிவந்து விட்டேன். ஆனால் விதி இங்கு வேறுவிதமாக விளையாடி விட்டது.

லேடி ஸ்ரீராம் கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராகச் சேர்ந்தேன். ஆர்வத்தோடு பயின்ற மாணவியர் என்னிடம் அன்பு மிக வைத்துப் பழகினர். கல்லூரி வளாகத்தில் இயல்பாக ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்த பல்வேறு மரங்களும்,

குறுக்கு நெடுக்குப் பாதை நெடுகிலும் வைத்து வளர்த்த பல வண்ண மலர்ச் செடிகளும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. நான் திருநெல்வேலியைச் சார்ந்தவள் என்று அறிந்து கொண்ட நாகர்கோவிலைச் சார்ந்த கல்லூரி முதல்வர் இராஜேஸ்வரி அம்மையார் 'மலர்' 'மலர்' என்று என்னைத் தன் மகள்போல் எண்ணி, என்மீது அன்புவைத்துப் பழகினர். இவை, அன்பு நிறைந்த அருளிடமிருந்தும், அப்பா—அம்மாக்களிடமிருந்தும் பிரிந்து வந்திருந்த எனக்கு ஆறுதலாக அமைந்தன.

கல்லூரி, நூல் நிலையத்தில் பண்டைய—இன்றைய ஆங்கில இலக்கிய நூல்கள் ஒன்றுகூட விடாமல் எல்லாம் வாங்கப் பெற்று, சிறப்பாக வரிசை செய்யப் பெற்றிருந்தன. என் கவலைகளை ஷெல்லியும் கீட்ஸீம் போக்கினர். வேர்ட்ஸ்வொர்த்தின் 'ப்ரிலூட்' (Prelude) உடல்—உள்ளம் கடந்த பேரருட் காதல் அனுபவத்தை என்னுள் சிறக்கச் செய்தது.

ஆ!... இப்படியே வாழ்நாள் சென்றிருக்கக் கூடாதா? என் வாழ்வில் அப்படி ஒரு கொடிய நாள் ஏன் வந்தது? அன்று என்னவோ அது என்வாழ்நாளில் மிக நல்ல நாளாகத் தோன்றியது. முதல்வர் இராஜேஸ்வரி அம்மையாரும் பெரு மகிழ்ச்சியோடு அந்த நாளைப் போற்றினார். இறைவன் திருவிளையாடல்' அல்லது 'லோக மாயை' என்பது இது தானோ? அருள் அன்பில் உறுதியாக இருந்து வாழ்வைத் துறந்த என்னை மீண்டும் பிறவிப் பெருங்கடல் துன்பத்தில் அமிழ்த்தி அமிழ்த்தித் திக்குமுக்காடச் செய்தது ஏன்? மென்மையான மலரை வன்மையான காயாக்கிப் புளிக்கச் செய்தது, துவர்க்கச் செய்தது, கசக்கச் செய்தது ஏன்? இப்போது எனக்குப் புலனாகிறது. பொன்னைச் சுட்டுச் சுட்டு ஒளிபெறச் செய்வது போல இறைவன் என்னை இப்படி மாதாவாக உருவாக்கத் திட்டமிட்டுத் தான் அப்படி எல்லாம் செய்தானோ? 'உலகமே ஒரு நாடகம்' (World is a stage) என்னும் ஷேக்ஸ்பியரின் சிந்தனைகள் எவ்வளவு நுட்ப

மானவை—தெளிவானவை. அவற்றை எல்லாம் அனுபவித்து அனுபவித்து உணர்ந்து கொள்ள காரணமான நாள் அது.

அன்று கல்லூரி முதல்வர் இராஜேஸ்வரி அம்மையார் இல்லத்திற்குத் திருநெல்வேலியிலிருந்து அவருடைய அண்ணன் பாலுசாமி வந்திருந்தார். அவருடைய நண்பர் மகன் திரு. நன்னன், ஐ. பி. எஸ். தில்லி, ஜனக்புரி பகுதியின் எஸ். பி. (Superindent of Police) யாக வேலைபார்த்து வருகிறார் என்றும் அவரைப் பார்த்து வருமாறு நண்பர் தன்னிடம் சொல்லியனுப்பியதாகவும் அவர் சொன்னார். அந்தக் காவல் அதிகாரியை, இராஜேஸ்வரி அம்மையார் அந்த வார ஞாயிற்றுக்கிழமை, தன் இல்லத்திற்கு வரவழைத்தார். என்னையும் ஏனோ அழைத்தார். அன்று. அவர் வீட்டில் பரிமாறப்பட்ட உணவுகளைவிட, அங்கே பகிர்ந்து கொள்ளப் பட்ட உணர்வுகள் சிறப்பாக இருந்தன. முதல்வரின் அண்ணன் பாலுசாமி ஒரு பக்கமும் அந்த ஐ. பி. எஸ். ஒரு பக்கமும் அமர்ந்திருந்தனர். எல்லோரையும் ஒரே டேபிளில் அமர்ந்து உண்ணுமாறு ஏற்பாடு செய்திருந்தார் அம்மையார் முதல்வரின் அண்ணன் பாலுசாமி, அந்த ஐ. பி. எஸ். அதிகாரி நன்னனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். வந்த விருந்தினர்கள் இருவரையும் பொதுவாகக் கவனித்துக் கொண்டிருந்த நான், அப்போது உற்றுநோக்கிப் பேச வேண்டியதானது.

'வணக்கம்' என்றேன்,

அவர் 'வாழ்த்துக்கள்' என்றார்.

மிடுக்கான தோற்றம், கார்மேகம் போல் உயரமாக, அருள்போல் சிவந்த மேனியராகத் தோன்றினார். ஆனால். அவருடைய கண்கள் ஆழங் காண முடியாதனவாக அமைந் திருந்தன. அவர் என்னைப் பார்த்த பார்வை, எனக்கு நல்ல தாகப் படவில்லை. என்றாலும் வாய் இயற்கையாக 'நன்றி என்று சொன்னது. ஊரைப் பற்றி, உலகைப்பற்றி என்

னென்னமோ பேசிக் கொண்டு உண்டோம். சில நாட்களில், இவை எல்லாம் மறந்து போயின.

திடீரென்று ஒருநாள், அப்பாவிடமிருந்து அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை என்று தந்தி வந்தது. நான் கலங்கிப் போனேன். இராஜேஸ்வரி அம்மையார், புதுதில்லி இரயில்வே நிலையத்திற்கு வந்து, ஜி.டி. இரயிலில் என்னை அனுப்பி வைத்தார்கள். வண்டி புறப்படுவதற்கு முன், ''அம்மா, நீ சிறுபெண். நான் உன் அம்மா எல்லாரும் எவ்வளவோ வாழ்வின் மேடு பள்ளங்களில் ஏறி இறங்கி, இன்ப துன்பங்களை அனுபவித்திருக்கிறோம். உன்னைவிட நிறைய தெரிந்து வைத்திருக்கிறோம். நிறைய படித்தவள், வாழ்வியல் உண்மைகளைக் கவிஞர்கள், கவிதைகள் மூலம், நாடகங்கள் மூவம் உணர்ந்தவள் நீ. பாலுசாமு அண்ணன் இங்கு வந்திருந்தபோது, 'உன் தாய் உன் வாழ்வு பற்றி மிகவும் கவலையாகஇருக்கிறார்கள்; உன்னையே நினைந்து நினைந்து ஏங்கி, மிகவும் மெலிந்து போய்விட்டார்கள். என்று சொன்னார். அம்மாவுக்கு நீ ஒரே பெண்தான். வேறு பிள்ளை குட்டிகள் கிடையாது, அம்மாவுக்கு நீதான் ஆறுதல் சொல்ல வேண்டும். அவர்கள் மனதுக்கு ஆறுதலாக நீ நடந்து கொள்ள வேண்டும். தந்தி வந்திருக்கிறது. பயமாக இருக்கிறது. உன்னைப் பற்றிய கவலைதான் அவர்கள் படுக்க காரணமாக இருக்கும் என்று நம்புகிறேன். நீ அவர்கள் மனம் நொந்து போகாமல் நடந்து கொள். முதல்வர் என்ற நிலையில் இருந்து நான் இதைச் சொல்ல வில்லை. தமிழ் மண்ணில் பிறந்த ஒரு பெண்ணாக—அம்மா வாக இருந்து சொல்கிறேன்'' என்று இராஜேஸ்வரி அம்மையார் என் கைகளைப் பிடித்துக்கொண்டு, நா தழு தழுக்கக் கூறி வழியனுப்பினார்கள்.

இரவு தூக்கம் வரவில்லை. அம்மாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். பட்டுப் பாவாடை வாங்கிக் கொடுத்தால்தான் பள்ளிக்குப் போவேன்' என்று அடம் பிடித்த என்னை என் அப்பா நையப் புடைத்தபோது அதைத்

தடுத்துக் காப்பாற்றி, தன் தாலிக்கயிற்றில் இருந்த பொன் காசொன்றினை விற்று வாங்கித் தந்ததை நினைத்துக் கலங்கினேன். பின்னாளில் அப்பாவுக்குப் பதவிகள் உயர்ந்தன, தாமிரபரணிக் கரையில் நிலபுலங்கள் வாங்கிப் பணக்காரர் ஆனார். எல்லாம் நான் பிறந்த பேறு என்று கொண்டாடினார்கள். வாழ்வின் தொடக்க நாளில் நான் சின்னஞ் சிறுமியாக இருந்த அந்த நாளில் கண்ணும் கருத்துமாக என்னை வளர்த்து ஆளாக்கிய அம்மாவின் செயல்கள் ஒவ்வொன்றும் என் கண்முன் வந்தன.

அப்பா அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவார். அப்போது எல்லாம் தத்தையாய் அறிவுறுத்தி, தாயாய் அன்பு காட்டி என்னை வளர்க்க அந்த நாளில் அம்மா பட்ட அவதிகள் எல்லாம் என் கண்முன் நிழற்படமாக வந்து அலைக்கழித்தன

சின்னஞ் சிறுமியாகத் தொடக்கப் பள்ளியில் படித்த அதே நாளில், வீட்டிலிருந்து எனக்குப் பிடித்த பால்சோறும் அச்சு வெல்லமும் ஊட்டி ஊட்டி வளர்த்த நாள்கள் நினைவுக்கு வந்தன. தன் பசி மறந்து, நான் பள்ளிக்குச் செல்லும் வரை என்னைக் குளிப்பாட்டி, அழகு செய்து, தலைபின்னி, பூ வைத்து, பொட்டுஇட்டு, முத்தம் கொடுத்து, தெருமுனை திரும்பும்வரை என்னைப் பார்த்துக் கொண்டே நின்று பின்னர் கசியும் கண்ணீரோடு வீட்டுக்குள் செல்லும் அம்மாவின் தோற்றம் என்னை என்னென்னவேர செய்தன.

அண்ணாமலைக்கு அனுப்பிவிட்ட பிறகுகூட வாரம் தோறும் கடிதங்களும் மாதந்தோறும் எனக்குப் பிடித்த தேன்குழலும் அதிரசமும் எப்படியோ, யார் யார் மூலமோ அனுப்பிவைத்த அம்மாவின் அந்த அன்புக் கைகளும், ஆர்வக் கண்களும் என் அருகில் வந்து என்னைத் தழுவிக் கொண்டன. அடக்க முடியாது வந்த அழுகையை அடக்கிக் கொண்டு, பக்கத்திலிருந்தவர்கள் பார்க்காதவாறு பீறிட்டு எழுந்த அந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன்.

எப்படியோ ஊர்வந்து சேர்ந்தேன். ஓடோடிப் போய் அம்மாவைப்பார்த்தேன். ஆர்வத்தோடு என்னைவரவேற்கும் அந்தக் கண்கள் மயக்கத்தில் மூடியிருந்தன. எலும்பு தோலு மாக இளைத்துப் போயிருந்தார்கள். வந்த எங்கள் குடும்ப மருத்துவர், என்னைத் தனியே அழைத்துச் சென்று,

''மலர், உன்னைப்பற்றி அம்மா மனதில் ஆழ்ந்த ஏக்கம் உள்ளதம்மா. இரவு பகலாகச் சரியாக உண்ணாமல்—உறங் காமல் இப்படித் தன்னைக் கொன்று கொண்டிருக்கிறார்கள். அதை எழுதி உன்னைப் புண்படுத்தவும் இவர்கள் விரும்ப வில்லை. இனி மருந்து ஒன்றும் காப்பாற்றாது. நீதான் காப் பாற்ற வேண்டும். நீ பிறந்த நாளிலிருந்தே அம்மா, உன் சுகத்தைத் தன் சுகமாக எண்ணி வாழ்ந்தார்கள். நீ டைபாய்டு ஜுரத்தில் மூடிய கண் திறவாமல் படுத்திருந்த போது, எதுவும் உண்ணாமல் சுக்கு வெந்நீர் மாத்திரம் குடித்துக்கொண்டு, நெல்லையப்பரை நெஞ்சில் நினைந்தவ ளாய் அந்தப் பதினைந்து நாளும் உன் அம்மா செய்த தவம் இராமாநுசர், காந்தியடிகள் செய்த தவத்தில் சற்றும் குறைந்தது அல்லம்மா? சமயத்திற்காக இராமாநுசரும், நாட்டிற்காகக் காந்தியடிகளும் செய்த அதே தவத்தை— நோன்பை உனக்காக அம்மா செய்தாரம்மா? நீ கற்றவள். இலக்கியம் கற்றவள். மானுட உணர்வுகளைக் கற்றவள். அம்மாவின் வாழ்வும் சாவும் உன் கையில்தான் இருக்கின் றன'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

நான் அம்மாவின் படுக்கை அருகே சென்றேன். பக்க மாக அமர்ந்தேன். ஒட்டிய கன்னங்களை—உலர்ந்துபோன உதடுகளை—சுருங்கிய நெற்றியை—கலைந்து கிடந்த கூந்தலை—மூடியிருந்த கண்களைப் பார்த்தேன். நீலம்போல் குளிர்ந்த பார்வை, நன்றாகப் பின்னித் தொங்கிய கூந்தல், மாம்பழம் போல் திரண்ட கன்னங்கள், தாமரை போல் மலர்ந்த முகம், குளிர்ந்த, என்னை அணைத்து அணைந்து மகிழ்ந்த அந்த மார்புகள் இப்படி மெலிந்தனவே என்று எண்ணி, அம்மாவை மெல்ல அணைத்துக் கொண்டு தேம்பித்

தேம்பி அழுதேன். அம்மா கண்திறந்து என்னைப் பார்த்தார்கள். இடது கையால் என்னை அணைத்துக்கொண்டு வலது கையால் என் கூந்தலை வருடினார்கள். அப்படியே மயக்கம் போட்டு விட்டார்கள்.

உடனே ஓடிச் சென்று மருத்துவரை வரவழைத்தேன். மீண்டும் ஊசி, குளுக்கோஸ் செலுத்தப்பட்டன. இரண்டு நாள்களுக்குப் பிறகு அம்மா மீண்டும் கண் திறந்தார்கள். சற்று தெம்பாகக் காணப்பட்டார்கள். அப்பாவை அருகில் கொண்டு என் கழுத்தைத் தடவினார்கள், கலங்கினார்கள். உதடுகள் அசைந்தன; பேச்சு வரவில்லை.

அருகிலிருந்த என் அப்பா, ''மலர் உன்னைப் பற்றிய நினைவுதானம்மா அம்மாவுக்கு! எல்லோரையும் போல இன்னும் நீ திருமணம் செய்து கொள்ளவில்லையே என்ற ஏக்கம் தானம்மா அம்மாவுக்கு! இராஜேஸ்வரி அம்மையாரின் உறவுப் பையன் அங்கே எஸ் பி. ஆக இருக்கிறானாமே. அவனைப்பற்றி பாலுசாமி வந்து சொன்னார். அவனை நீ மணந்து கொள்ள வேண்டும் என்று சில நாட்களாக அம்மா புலம்பிக் கொண்டிருக்கிறாள். கனவில்கூட உளறிக் கொண்டிருக்கிறாள். உன் வார்த்தைக்காகத் தன் உயிரைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறாள். நீ 'ஆம்' என்றால் அது நிற்கும். இல்லை என்றால் அது போய்விடும். உனக்கு அம்மா செய்த தியாகங்கள் எவ்வளவோ? அதற்கு அம்மா வரமாகக் கேட்பது இது! மறுத்து விடாதே அம்மா'' என்று அப்பா வேண்டிக் கொண்டார்.

'இந்தத் தமிழ் மண்ணில் பெண்ணாகப் பிறந்துவிட்டால் உரிமையோடு வாழ முடியாதா? அமைதியாக ஓடிக் கொண்டிருந்த என் வாழ்வு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அருளைச் சந்தித்தபிறகு சிறிது தடுமாறியது. என்னை மணந்துகொள்ள அவர் மறுத்தபோது, கல்லாய் மனதை மாற்றிக்கொண்டு தில்லிக்கு ஓடிப்போய் ஒருவகை இயந்திர வாழ்வில் நெஞ்சைத் தேற்றிக் கொண்டேன். மறுபடியும்

கலக்கமா? பெண் திருமணமின்றி வாழ முடியாதா? வாழக் கூடாதா? அன்பையும் ஆதரவையும் காட்டி ஆளாக்கிய அம்மாவின் மனம், ஏன் இப்படி ஆகிவிட்டது? திருமணம் என்ற பெயரில் என் நெஞ்சத்தை நானே கொன்று போட வேண்டுமா?' என்று பலவாறு எண்ணிக் குழம்பிய மனத் தோடு அம்மாவின் அருகில் போய் அமர்ந்தேன்.

மெல்ல வாடி வதங்கிய அம்மாவின் முகத்தைப் பார்த் தேன். ஒட்டி உலர்ந்திருந்த கன்னங்களை மெல்ல வருடிக் கொடுத்தேன். அம்மா கண் திறந்து என்னை ஏக்கத்தோடு பார்த்தார்கள். என் கழுத்தைப் பற்றிக்கொண்டு, திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று குறிப்பாகச் சொன் னார்கள். சாவி கொடுக்கப்பட்ட யத்திரம்போல் நானும் தலையசைத்தேன். சென்னையில் உட்லண்ட்ஸ் ஓட்டலில் நடந்த என் திருமணம்தான் உங்களுக்குத் தெரியுமே! திருமணம் நடந்த மறுநாளே நேரே தில்லிக்கு வந்து விட் டோம். ஜனக்புரியில் அவருடைய பங்களாவில் குடியேறி விட் டோம். என் அன்பை, என் அறிவைப் பகிர்ந்துகொண்டு என்னைப் புரிந்துகொண்டு வாழ நினையாமல் என் உடம்பை அனுபவிப்பதில் வெறி பிடித்தவராக இருந்தார். அவ்வப் போது தில்லியில் நிகழும் ஆங்கில இலக்கிய மன்ற நிகழ்ச்சி களில் கலந்துகொள்வதை அவர் விரும்பவில்லை. தன் சம்பளமே குடும்பத்திற்குப் போதும் நீ வேலையைவிட்டுவிடு என்றுகூட வற்புறுத்த ஆரம்பித்தார். என் மனத்துன்பங் களை எல்லாம் போக்கி அமைதி கொடுத்துக் கொண்டிருந்த இலக்கிய வாழ்விலிருந்து என்னைப் பிரித்துவிடத் துடியாய்த் துடித்தார். நாளடைவில் அவருக்குத் தேவை ஓர் அன்பு மனைவி அல்ல; காமக்கிழத்தி என்று அறிந்துகொண்டேன். மனைவி என்ற பெயரில் அவர் வெறிகளுக்கு ஆளாகி, என்னை அழித்துக்கொள்ளத் தயங்கினேன்.

இதற்கிடையில் அம்மாவுக்கு உடல்நலம் இல்லை யென்று தந்தி வந்தது. தந்தியைப் பார்த்துவிட்டு ''நீ

போய் வா. எனக்கு வேலை அதிகமாக இருக்கிறது'' என்று விரைவு வண்டியில் என்னை அனுப்பிவிட்டார். தனியாகப் பயணம் செய்வது எனக்குப் பழக்கமாகிவிட்டது. ஆனால் அம்மாவுக்கு உடல்நலம் இல்லை என்று தெரிந்தும் ஆதர வோடு துணைக்குவராமல், என்னை மட்டும் அனுப்பி வைத்தது எனக்குப் பெரிதும் வருத்தமாக இருந்தது. என்னைவிட அம்மாவின் மனம் பெரிதும் நோகும் என்று எனக்குத் தெரியும். என்ன செய்வது?

நான் வந்ததில் அம்மாவுக்கு மகிழ்ச்சியே. ஆனால் அவர் உடன்வராதது, அவர்கள் மனத்தைப் பெரிதும் பாதித்தது. சில நாட்கள் உடனிருந்தேன். அப்புறம் ஆதரவோடு அம்மாவுக்கும் எனக்கும் வேண்டியன எல்லாம் வாங்கித் தந்து உதவினார்கள். அம்மா உடம்பு சிறிது தேறியது. பத்து நாட்கள்தாம் விடுமுறை கிடைத்திருந்தது. அதனால் உடனே புறப்பட்டு விட்டேன்.

வருவது பற்றித் தந்தி கொடுத்திருந்தேன். நியூ டெல்லி இரயில்வே ஸ்டேசனில் இறங்கி, சுற்றும் முற்றும் பார்த் தேன். அவர் வரவில்லை. ஜீப் டிரைவர் பானர்ஜி வந் திருந்தான். ''அய்யா, ஊரில் இல்லை! சமையல்காரர் தங்கள் தந்தியைப் பார்த்து ஆபிசுக்குப் போன் செய்திருந் தார்'' என்று ஹிந்தியில் அவர் சொல்லிவிட்டு, என் கைப் பெட்டியை வாங்கிக் கொண்டு ஜீப்புக்குப் போனான். நான் கவலையோடு பின் தொடர்ந்தேன்.

பங்களா அமைதியாக இருந்தது. சமையல்காரர் அவ் வளவு கலகலப்பாக இல்லை. ''வெந்நீர் வைத்திருக்கிறேன் அம்மா, குளியுங்கள். இட்லி தயாராக இருக்கிறது'' என்றார்.

''சரிங்க. கொஞ்சம் தோட்டத்தைச் சுற்றிவிட்டு வரு கிறேன். வெந்நீரை விளாவி வையுங்கள்'' என்று சொல்லி விட்டுப் தோட்டத்துத் பக்கம் போனேன். அங்கேஒரு மூலை

யில் குடிசையிலிருந்து தோட்டக்காரர் மாரிமுத்து கிழவர் என்னைப் பார்த்துவிட்டு வந்தார்.

அவர் வருவதைப் பார்த்து நின்று கொண்டிருந்தேன். "அம்மா! என்னை ஊருக்கு அனுப்பி வைத்து விடுங்கள். இங்கு இருக்க எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. நீங்கள் ஏன் அவரை விட்டுவிட்டு ஊருக்குப் போனீர்கள். தினமும் குடியும் கும்மாளமும்தான். அந்தப் போலீஸ்காரன் பெண், நீங்க போனதிலிருந்து இங்குக் குடித்தனத்திற்கு வந்துவிட்டாள். இப்போது இருவரும் எங்கேயோ வெளியூர் சென்றிருக்கிறார்கள், அவர் வருவதற்குள் என்னை ஊருக்கு அனுப்பிவைத்துவிடுங்கள். உங்களுக்குத் துணையாக இருக்க, அங்கு அமைதியாக இருந்த என்னை அம்மா வற்புறுத்தி இங்கு அனுப்பி வைத்தார்கள். இந்தப் பாவச் சோறு எனக்கு வேண்டாம் அம்மா" என்று அழுதான்.

எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது. அவளோடு அவருக்குத் தொடுப்பு இருந்ததாக அரைகுறையாக எனக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு மோசமாகப் போவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. சீற்றம் பொங்கி வந்தது, மாரிமுத்துவை ஊருக்கு அனுப்பிவிட்டு, அவரை அவர் வருகையை எதிர்பார்த்திருந்தேன்.

இரண்டு நாள் கழித்து ஒருநாள் காலை அவர் வீட்டுக்கு வந்தார்.

"அம்மாவுக்கு உடல் நலம் இல்லை. தந்தி வந்தது. நீங்களே பார்த்தீர்கள். நாம் இருவரும் வருவோம் என்று எதிர்பார்த்திருந்தார்கள். வேலை நிறைய இருப்பதாகச் சொல்லி நீங்கள் வரவில்லை. என்னை மட்டும் அனுப்பி வைத்து விட்டு இங்கு எவளுடனோ ஊர்சுற்றியிருக்கிறீர்கள். இது நியாயமா? நான் ஏமாந்து போனேன். ஐயோ! அம்மா!! ஏமாந்துபோய் விட்டேன் அம்மா!" என்று என் முகத்தில் அறைந்துகொண்டு ஓவென்று அழலானேன்.

'பளார்' என்று ஓர் அறை கன்னத்தில் விழுந்தது. பொறி கலங்கிவிட்டது. என்ன என்று பார்ப்பதற்குள் என் தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளி உதைத்தார்.

''என்னடி! பெரிய பத்தினியா நீ! அண்ணாமலையிலே எவனோ அருள் உன்னோடு படித்தானாமே? அவனுக்கும் உனக்கும் இருந்த பழக்கம் எல்லாம் எனக்குத் தெரியாதுன்னு நெனச்சுட்டியா? எனக்கு எல்லாம் தெரியும்—நான் எஸ். பி- ஜாக்கிரதை''—என்று கண்டபடி திட்டிவிட்டு, குடித்திருந்த பிராந்தியை வாந்தி எடுத்துவிட்டுத் தட்டுத் தடுமாறியபடியே உள்ளே போனார். நான் கட்டிய புடவையோடு வெளி யேறினேன்.

யாரிடமுப் சொல்லவில்லை—என்ன செய்வதென்றும் தெரியவில்லை. திடீரென்று ஆசிரிய ஓய்வறையில் தமிழ்ப் பேராசிரியை உலகத் தமிழ் மாநாட்டிற்கு மலேசிய செல்லப் போவதாகக் கூறியது நினைவுக்கு வந்தது, இரவெல்லாம் உறக்கம் இல்லை. பொழுது விடிந்ததும் விசாரித்தேன்; இன்னும் ஒரு மாதத்தில் புறப்படுவதாகவும் பார்வையாளர் விசா, எளிதில் கிடைத்துவிடும் என்றும் சொல்லி என் பாஸ் போட்டுக்கு — உதவினார். மலேசியா கருத்தரங்கச் செயலாளருக்குத் தொலைபேசிவழி கூறி எனக்கும் உரிய ஏற்பாடுகள் செய்தார்.

மெல்ல இராஜேசுவரி அம்மையாரிடம் விவரம் கூறினேன், வருந்தினார். தில்லியைவிட்டுப் போக விரும்புவ தாகவும் தமிழ்ப்பேராசிரியை மலேசியப் பயணம் அதற்குத் தனக்கு ஊன்று கோல்போல் அமைநீது விட்டதையும் சொன்னேன். அவரும் ஒரு திங்கள் விடுமுறை தந்து, என் பெயரில் சேர்த்திருந்த பிடிப்புப் பணத்தின் பெரும்பகுதியைச் செலவுக்கு எடுத்துக் கொடுத்தார்கள், புறப்படும்போது யாருக்கும் தெரியாமல் மணமுறிவுக் கடிதத்தைப் பதிவஞ் சலில் நன்னனுக்கு அனுப்பி வைத்தேன். அந்த விலங்கு வாழ்விலிருந்து விடுதலை பெற்றேன்.

மலேசியப் பயணத்தில் பேரார்வம் காட்டினேன். கருத்தரங்கப் பேராளர் இல்லாவிடினும் தமிழ் ஆங்கில இலக்கிய ஒப்பியல் நோக்கில் சிறப்பாக மகளிர் நிலைபற்றிச் சில கட்டுரைகள் தயாரித்துக்கொண்டேன். அந்த நல்ல நாளும் வந்தது—வானூர்தியில் புறப்பட்டோம்—தமிழகத்திலிருந்து ஏராளமான பேராளர் வந்திருந்தனர், இறங்கியதும் சொகுசுப் பேருந்தில் அழைத்துச் சென்று நட்சத்திர உணவு விடுதிகளில் தங்க வைத்தனர்—

மூன்று நாளும் விழா கோலாகலமாக நிகழ்ந்தது. பேராசிரியை இரண்டாம்நாள் ''சங்க இலக்கிய அமர்வுக்குத் தலைமை தாங்கினார்கள். சிலப்பதிகாரக் கட்டுரைகள் அன்றைய அமர்வில் சிறப்பாக இடம்பெற்றன. கோவலன், மாதவி, கண்ணகி பற்றிய வினாக்கள் பல தொடர்ந்து கேட்கப்பெற்றன. கேட்டவர்கள் பெரும்பாலும் இலங்கை மகளிர்கள். தலைமை தாங்கிய பேராசிரியர் தக்கவாறு விடைதந்து விளக்கம் கூறிச் சிறப்பித்தார்கள். மூன்றாம் நாள் மாலை பலர் சிங்கப்பூர் செல்லத் திட்டமிட்டனர். பேராசிரியருடைய உறவினர் ஒருவர் கார்த்திகேயன் சிங்கப்பூர் அரசாங்கத்தில் பொறியியல் ஆலோசகர் பதவி வகிப்பவர் அறிமுகமானார். அவருடைய மனைவி வாசுகி அம்மையார் சிங்கப்பூர் மகளிர் சேவாகேந்திரத்தின் செயலாளர். எங்களை மாநாடு முடிந்ததும் சிங்கப்பூர் தங்கள் கேந்திரத்திற்கு வருமாறு அவர் வேண்டிக்கொண்டார். எங்கள் வருகை குறித்து முன்கூட்டித் தெரிவிக்கச் சொல்லி தொலைபேசி எண் உள்ள கேந்திர முகவரி அட்டை தந்தார். நாங்கள் நன்றியோடு ஒப்புக்கொண்டோம்.

மூன்றாம் நாள் மாலை மலேசிய ரப்பர் தோட்டப் பகுதிக்கு எங்களைப் பார்வையாளராக அனுப்பிவைத்தனர். எங்களுக்குச் சிவகாமி என்னுப் மலேசிய தொடக்கப்பள்ளி ஆசிரியை வழிகாட்டியாக அமைந்தார். அவர் தன் பள்ளி அமைந்துள்ள ரப்பர் தோட்டச் சிற்றூர் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார்.

அறிமுகப்படுத்திக் கொள்ளும் தேநீர் விருந்தொன்று தந்தார். அப்போது ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொண்டோம். என் பெயர் ஊர் சொல்லி நான் என்னை அறிமுகப்படுத்தியவுடன் சிவகாமி ஓடிவந்து தான் என் ஊர் தான் என்று ஆர்வத்தோடு கூறி என் கையை அழுத்தமாகப் பற்றிக்கொண்டார். தன் பள்ளியைச் சிறப்பாக எனக்குக் காட்டினார். தன்னைப் பற்றி, தன் பெற்றோர் பற்றி எல்லாம் விவரமாக விரிவாகப் பேசிக் கொண்டே ரப்பர் தோட்டத்தைச் சுற்றி வந்தோம்.

மூன்றாம் நாள் இரவு மாநாட்டு அமைப்பாளர் எங்களுக்கு வாழ்த்தும் நன்றியும் கூறி மறுநாள் காலை நாங்கள் அறையைக் காலி செய்து விடவேண்டும் என்று எடுத்துரைத்தார். உடனே மறுநாள் காலை புறப்படும் சிங்கப்பூர் வான ஊர்தியில் எங்கள் இருக்கைகளை உறுதி செய்து கொண்டு சிங்கப்பூருக்கு வாசுகி அம்மையாருக்கு எங்கள் வருகை பற்றித் தெரிவித்தோம். ஊர்திவிட்டு இறங்கியவுடன் எங்கேயும் போகாமல் பார்வையாளர் பகுதியில் தங்கியிருக்கும்படி அறிவரை கூறித் தானே மகிழ் வுந்தில் வந்து அழைத்துச் செல்வதாகச் சொன்னார்.

சொன்னபடியே வைகறை யாமத்தில் சிங்கப்பூர் வானூர்தி நிலையம் வந்து எங்களை அழைத்துக்கொண்டு மகளிர் கேந்திரம் சென்றார். அங்குச் சிறப்பாக எங்களுக்கு ஏற்பாடு செய்திருந்த கேந்திர மகளிர் விருந்தனர் அறையில் தங்க வைத்து கேந்திரக் காப்பாளர் திருநாவுக்கரசு என்பவரை அழைத்து எங்களுக்குத் தேவையான உதவி செய்யுமாறு வேண்டிக்கொண்டு விடை பெற்றார்.

அன்று பிற்பகல் கேந்திரத் தலைவி இன்னும் சில உறுப்பினர் வாசுகி அம்மையாருடன் வந்து எங்களோடு அளவளாவினர். சிங்கப்பூரில் பார்க்க வேண்டிய இடங்கள் பற்றிக் கூறிக் காண்பதற்கான ஏற்பாடுகள் செய்தார்கள்.

புறப்படுவதற்கு முதல் நாள் சொற்பொழிவு ஒன்றுக்கு ஏற்பாடு செய்தனர். பேராசிரியையும் என்னையும் சொற்பொழிவாற்ற வேண்டினர். ''தமிழ் இலக்கியத்தில்மகளிர்'' என்ற தலைப்பில் பேராசிரியையும், ''இலக்கியப் படைப்பில் இன்றைய வாழ்வில் மகளிர் நிலை'' என்ற தலைப்பில் நானும் பேசினோம்.

கபிலர், இளங்கோ, வால்மீகி, வியாசர், காளிதாசன், ஹோமர், ஷேக்ஸ்பியர், மில்டன் படைத்த மகளிர் பற்றியும் தற்காலத்தில் உலகில், சிறப்பாகத் தமிழகத்தில் மகளிர் எதிர்கொள்ளும் போராட்டங்கள் குறித்தும் விளக்கிச் சொற்பொழிவாற்றினேன். என் வாழ்வில் நேர்ந்த தொல்லைகள், துன்பங்கள், தோல்விகள் எப்படியோ என்னை உணர்ச்சி வயப்படுத்திவிட்டன. நீண்ட நேரம் சொற்பொழிவாற்றி விட்டேன், அவையோரும் என்னைப்போல் உணர்ச்சிவயப் பட்டுள்ளதை உணர்ந்தேன்.

என் படிப்பு, பணி, இப்போதுள்ள என் மனநிலை எல்லாவற்றையும் மேலும் துருவித் துருவிக் கேட்டு அவர்கள் அறிந்து கொண்டார்கள். சிறிது நேரம் அவர்கள் தங்களுக்குள் பேசி ஒருமுடிவு எடுத்தார்கள். என்னைப் பார்த்து,

''மலரம்மை! எதற்கும் கலங்க வேண்டா. நாங்கள் இருக்கிறோம். நீண்ட நாட்களாக எங்கள் மனதில் ஓர் எண்ணம் உண்டு, முதிய பெண்களுக்கு நல்வாழ்வு தருவது எப்படி, ஏதாவது முதியோர் இல்லம் உருவாக்கலாமா? வெறும் உணவு, உறைவிடம் தந்துஅவர்கள் வாழ்வைச் சிறை வாழ்வு போல் அமைக்காமல், பேரன் பேத்திகளோடு உற்றார் சுற்றத்தோடு மகிழ்வோடு அமைவது போல அந்த முதியோர் வாழ்வு இன்பமாக அமைய என்ன வெல்லாம் செய்ய வேண்டும் என்று எண்ணி வைத்திருக்கிறோம். அதற்கான இடம் கூட இம்மலைச்சாரல் பக்கம் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறோம். அது இந்த மார்வாடி அம்மாவின் தாத்தா, தர்ம காரியத்திற்கு என்று எழுதி வைத்த இடம் தான். எங்களால் முடிந்த அளவு ஓரளவு பணம் திரட்டித்

தருகிறோம். மூன்று முதிய அம்மையார்கள் நாங்கள் அப்படி ஓர் இல்லம் அமைத்தால் தங்களுக்குத் தெரிவிக்குமாறு எங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர். நிறைந்த செல்வம் உடையவர்கள் அவர்கள். நாம் அமைக்கவிருக்குப் முதியோர் இல்லம் அவர்களை வைத்துக் கொண்டு தொடங்கட்டும். தங்கள் பொருளாலும் அனுபவத்தாலும் அவர்கள் உனக்குப் பெரிதும் துணை செய்வார்கள். இது இறைவன் காட்டும் வழி என நம்பு. இல்லை என்றால் எங்களை நீ இப்படிச் சந்தித்திருக்க முடியாது. ஏதாவது ஒரு நிலையில் இல்லற வாழ்வு சரியாக அமையவில்லை என்றால் இப்படித்தான் தொண்டு வாழ்வில் நம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

''எங்களோடு தொடர்புடைய சான்றோர்கள், செல்வர்கள்உலகெங்கிலும் உள்ளனர். முதலில் தொடங்கு அவர்களோடு தொடர்பு கொண்டு வேண்டிய உதவி எல்லாம் செய்கிறோம். நீ நேரில் சென்று அவர்களோடு பழகினால் உன்னைப்பற்றிச் சரியாக அறிந்து கொள்வார்கள். உன் வழி செய்யும் அறப்பணி நேர்மையாக இருக்கும், என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டாகும். நாங்கள் எல்லாம் இந்த உலகை நன்றாக அறிந்தவர்கள். அறம் செய்வதாகக் கூறி உலகை ஏமாற்றும் வஞ்சகர்களைப் பற்றி எல்லாம் எங்களுக்குத் தெரியும். நல்லவர்கள் கிடைக்க மாட்டார்களா? அவர்கள் மூலம் நல்ல காரியம் பல செய்ய மாட்டோமா' என்று ஏங்குகின்றவர்கள் நாங்கள். எங்கள் ஏக்கத்தைப் போக்கக் கூடிய நல்ல பெண்மணி நீ என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். எனவே பொருள் பற்றி நீ கவலைப் படவேண்டாம். உலகெங்குமிருந்து இமயத்தில் அமையப் போகும் முதியோர் இல்லத்திற்குப் பொருள் வந்து சேரும். உனக்குச் செயல் துணையாக நாங்கள் அனுப்பும் முதியோர் மூவரும் உதவுவார்கள் என்று கூறி இந்த இல்லத்தை இங்கு உருவாக்கித் தந்தார்கள் — இவர்களை எனக்குத் துணையாக அனுப்பி உதவினார்கள் என்று

தன்னோடு இருந்த மூவரையும் சுட்டிக் காட்டினார்-என் கண் போன்றே அவர்கள் கண்களிலும் நீர் ததும்பிக் கொண்டிருந்தது—கண்களைத் துடைத்துக் கொண்டோம்—

இரவு நேரமாகிவிட்டது—நீங்கள் சென்று விருந்தினர் அறையில் ஓய்வு கொள்ளுங்கள்—காலையில் சந்திப்போம்', என்று என்னிடம் கூறிவிட்டு, கைதட்டிக் காவலர் ஒருவரை அழைத்து என்னை விருந்தினர் அறைக்கு அழைத்துச் சென்று உதவுமாறு கூறினார்—அவரும் விடுதியில் என்னை விட்டுவிட்டுச் சப்பாத்தி பால் தந்துவிட்டுப் போய்விட்டார்.

இன்று வாழ்வு மிகவும் சிக்கலாகி விட்டது. சமூதாயத்தில் தனிமனிதன் தத்தளிக்கிறான்—பெண்கள் குடும்பத்துக்குள்ளேயே அனாதை ஆகி விட்டனர். அந்தக் காலத்தில் வயல், தோட்டம், ஆடு, மாடு, பேரன், பேத்தி என்று பொழுது ஒரு பொறுப்போடு, ஒரு உரிமையோடு, மகிழ்ச்சியோடு கழிக்க ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு இருந்தது. இந்தக் காலத் தனிக் குடும்பத்தில் ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும் வெளியே கூடிக் குலாவினாலும் மனத்தில் ஒரு தனிமையே உணர்கிறார்கள்—எங்கும் எதிலும் வேரூன்ற முடியாமல் தவிக்கின்றனர். இந்த நிலையில் மனத்திற்கு அமைதி தருவது ஏதாவது ஒரு தொண்டு நிறுவனத்தோடு தொடர்பு வைத்துக் கொள்வது தான்.

ஏதோ ஒரு நிலையான பணி கிடைத்து வாழ்பவரும் ஏதேனும் சமூதாயப்பணி செய்ய வேண்டும். பணி ஒன்றும் நிலையாகக்கிடைக்காமல் தடுமாறுகிற இளைஞர்களும் மனம் சோர்ந்துவிடாமல் தொண்டு நிறுவனங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வாழ வேண்டும்—அவர்கள் எல்லாரையும் விட முக்கியமாக உன் போன்று கணவனைப் பிரிந்தவர்க்கு மனைவியைப் பிரிந்தவர்க்கு, இழந்தவர்க்கு சமுதாயத் தொண்டு இன்று அமைதியான வாழ்வு தரவல்லது. வாழ வேண்டும், வாழ்விக்க வேண்டும்''—என்ற உறுதி, தன்னம்பிக்கை இன்று இவர்களுக்கு வேண்டும்—

இரவில் இங்கொன்றும் அங்கொன்றுமாக எரிந்த விளக்கு வெளிச்சத்தில் இமயக் குன்றம் வானத்துக்கும் பூமிக்கும் இடையே திரண்ட இருட்கூட்டம்போல் இருந்தது — மரம் செடி கொடி மலை, முகடு, சாரல் என்று இனம் காண இயலாதவாறு ஒரே இருட்டாகக் காட்சியளித்தது. இங்கே தன்னந்தனியே எப்படி மலர் வந்து, மாதாவாகி ஆசிரமம் ஒன்றையும் நடத்தி வருகிறார்-என்று எனக்கு வியப்பாக இருந்தது.

உறக்கம் வரவில்லை. இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வயது பதினாறிருக்கும். இளவயது மங்கையாகக் காட்சியளித்த மலர், அன்று இரவு, திருநெல்வேலி விரைவு வண்டியில் ஏற்றிவிடச் சென்ற அந்த இரவில் அவளோடு பழகிய அந்த இனிய நினைவுகள், அண்ணாமலையில் திரு. அருளுடன் ஓடிவந்து மு. வ. வை. வணங்கி நின்ற அந்தத் துடிதுடிப்புள்ள மலர், இளமுருகு அண்ணாவுடன் தில்லிக்குப் போகும் வழியில் சென்னையில் மு. வ. வின் ''தாயக'' இல்லத்தில் திண்ணிய பெண்ணாகப் பொலிந்த மலர், புலியிடம் அகப்பட்ட மான்போல் சென்னை உட்லண்ட்சு ஓட்டலில் மணந்துகொண்ட போலீசு அதிகாரிக்கு அருகில் மருண்டு நின்று கொண்டிருந்த மலர்... இப்படி மலரின் தோற்றம் பல திரைப்படம்போல் கண்முன் வந்து கொண்டிருந்தன. அப்படியே மலர் நினைவில் உறங்கிவிட்டேன்.

கனவொன்று வந்தது -— அலஹாபாத் ஆற்றங்கரையில் திரு. அருள், மலர், நான் மூவரும் நிற்கிறோம். கங்கை யமுனை சரசுவதி... மூன்று நதிகளும் சங்கமிக்கும் துறை. திடீரென்று மூன்றும் வெள்ளம் பெருகிச் சுழன்றுகொண்டு மேல் எழுகின்றன. ஒன்று திரு. அருள்போல் வடிவெடுக்கிறது-இன்னொன்று-மலர்போல்தோன்றுகிறது-மூன்றாவது நான் - மேலெழுந்த மூன்றும் ஒன்றாகின்றன; ஒன்றுள் ஒன்றாகிக் கரைந்து கலந்து மறைந்து போகின்றன. எது கங்கை, எது யமுனை எது சரசுவதி என்று தெரியவில்லை.

ஆறுமட்டும் பெருக்கெடுத்து ஓடி அனைவரையும், அனைத்தையும் குளிரச் செய்கிறது.

''ஐயா! ஐயா! என்ற அழைப்பொலி கேட்டுக் கண் விழித்தேன். பொழுது புலர்ந்திருந்தது. எங்கும் ஒரே பறவைகளின் கூக்குரல். கிசுகிசு என்று ஆணைச்சாத்தன் குருவிகள், நாகண வாய்ப்புட்கள் கூடிக் கூடிக் கூச்சலிட்டன. குயில்கள் விட்டுவிட்டுக் கூவின. மயிலின் எக்காள ஓசை இடை இடையே எழுந்து கொண்டிருந்தது; மிகக் குளிராக இருந்தது.

ஐயா! ஐயா! என்ற அழைப்பொலி மீண்டும் கேட்டது. அறைக்கதவைத் திறந்தேன். காவலர் கையில் ஒரு வெப்பக் குடுவையுடன் நின்று கொண்டிருந்தார்.

இந்தச் சுக்கு வெந்நியைத் தங்கட்குக் கொடுத்து வரும்படி மாதா அனுப்பி வைத்தார். 8 மணிக்கு மீண்டும் நானே வந்து மாதாவிடம் அழைத்துப் போவேன் வெந்நீர் சுவிட்சைப் போட்டு விடுகிறேன்! என்று சுவிட்சைப் போட்டு விட்டு வெளியேறினார். வாய் கொப்பளித்துச் சுக்கு வெந்நியைக் குடித்தேன். அண்ணன் இளமுருக இல்லத்தில், காந்திக் குடிலில் குடித்ததுபோலவே இருந்தது. நான் காப்பி குடிக்கமாட்டேன் என்பதை இன்னும் நினைவில் வைத்துக்கொண்டு சுக்கு வெந்நியை எனக்கு அனுப்பி வைத்த அன்பை எண்ணியவனாய் வெந்நீர் சுடும்வரை வெளியே சுற்றி வரலாம் என்று புறப்பட்டேன்.

மலைப்பிளவுகளுக்கு இடையே காலைக் கதிரவனின் கிரணங்கள் பீச்சிட்டுக்கொண்டு வந்து இருண்டு உயர்ந்திருந்த மரங்களின் மேலும் மலைச்சரிவில் முளைத்திருந்த பசும்புல் மேலும் பொன்வண்ணம் பூசின. மலைபடு மூலிகைகளின் மணத்தைச் சுமந்துகொண்டு காலைக் குளிர்காற்று மெல்ல வீசியது.

அந்தப் போலீசு அதிகாரியின் ஐயத்திற்கு ஆளாகி, கொடுமைகள் தாங்காது அவரிடம் மணமுறிவு பெற்றது,

வெளிநாடு சென்றது பற்றி மு. வ. எழுதிய கடிதம் நேற்றைய செய்திகள் இவற்றை நினைத்தபடியே கீழ்த் திசையில் மலை அடிவாரத்தை நோக்கி நடந்தேன். இடை யிட்ட ஓரிரு அருவிகள், சிற்சில பாதைகளைக் கடந்து சிறு குன்று ஒன்றின்மேல் ஏறி 'வள்ளுவர் குடிலை' பார்த்தேன். எல்லாக் கட்டிடங்களிலும் கதிர் ஒளி பரவியிருந்தது. இடை இடையே இருந்த சிறு சிறு குடிசைகள் கரும்பாறைகள்போல் தோன்றின. எல்லா இருப்பிடங்களும் கிழக்கு நோக்கி அரை வட்ட வடிவில் தியான, சொற்பொழிவு மண்டபமும் அமைந் திருந்தன. அதற்கு எதிர் தியான மண்டபத்திற்கு நேர் கீழ்த்திசை எல்லையை ஒட்டி பசுப்பண்ணையும் தொழுவங் களும் அமைந்திருந்தன. அதனை ஒட்டி இரு பக்கங்களும் பூஞ்சோலைகளும், காய்கறித்தோட்டமும் அமைந்திருந்தன. இவை மேற்குப் பார்த்த இன்னொரு பிறை போல அமைந் திருந்தன. அவற்றை ஒட்டி ஒரு சிறு மலையருவி துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தது— கதிரொளியில் வைரம் சிதறிக் கிடப்பனபோல் அந்த அருவி மின்னியது. இந்த இரு பிறை களுக்கும் இடையில் தியான மண்டப வாயிலில் தென்னகச் சிற்பகக் கலை சிறந்த ஒரு கோபுரம்; அதன் நடுவில் பத்மா சனத்தில் அமர்ந்து, ஓலைச் சுவடியில் எழுதுவதுபோல் செதுக்கப்பெற்ற வள்ளுவர் சிலை: அந்த ஓலையில்

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

என்ற குறள் பொறிக்கப் பெற்றிருந்தது.

கைக்கடியாரத்தைப் பார்த்தேன். மணி 8 ஆகியிருந்தது. விரைந்து என் அறைக்கு மீண்டேன். கிடுகிடு என்று பல் தேய்த்துக் குளித்தேன். ஆடை அணிந்துகொண்டு கதவைத் திறந்தேன். மாதா, அவர்தான் மலர் ஆயத்தமாக வாயிலில் நின்று கொண்டிருந்தார்.

''கார்மேகம்! நன்றாக உறங்கினீர்களா?... சுக்கு வெந்நி குடித்தீர்களா? நன்றாக இருந்ததா? வாருங்கள்

சிற்றுண்டி உண்ணலாம்...'' என்று என்னைத் தன் குடில் நோக்கி அழைத்துக்கொண்டு போனார்.

வழியில் பசும்புல் மெத்தென இருந்தது. புல்வெளி நடுவில் அழகான சிறிய மேடை. உட்கார வேண்டும்போல் தோன்றியது. அதில் அமர்ந்தேன்—

''ஏன் இன்னும் பசி வரவில்லையா!... நீங்கள் சிறிது நேரம் அப்படியே அமருங்கள். நான் இப்படி உலாவிக் கொண்டே இருக்கிறேன்''... என்று என் முன் உலாவத் தொடங்கினார்.

''மலர்!... வெளிநாடு பல சென்றீர்களே! அங்கு வாழும் தமிழர் வாழ்வு, தமிழ்க்கல்வி பற்றி ஏதாவது சொல்லத்தக்க செய்திகள் உண்டா...?'' என்றேன்.

''ஓ! நிறைய இருக்கிறது— நேரம்தான் இல்லை' உலாவிக்கொண்டே பேசினார்.

''மலேசிய கிராமப்புற பள்ளி ஒன்றுக்குச் சென்றிருந் தேன். என் தந்தையின் நண்பர் மாணிக்கவாசகத்தின் மகள் சிவகாமி அங்கு ஆசிரியப் பணி ஆற்றி வருகிறாள். அவள் தான் என்னை அங்கு அழைத்துச் சென்றிருந்தாள். நேற்று சொன்னேனே அவள்தான். பள்ளி மிகச் சின்னதுதான். ஆனால், தூய்மையாக, ஆசிரியர்க்கு மேசை, நாற்காலி, குழந்தைகள் அமரத் தேவையான வசதிகளோடு கூடி அமைந் திருந்தது. பள்ளி அறைச் சுவர்களில் அறிவியல், புவியியல், வானியல் செய்தி வரைபடங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. மலேசிய தரைப்படம் முழு விவரங்களுடன் பள்ளி வாயிலில் அமைந்திருந்தது.

''தாய்மொழி, மலாய் மொழி, ஆங்கில மொழிக்கல்விக்கு அங்கு வாய்ப்பளித்திருந்தனர். தொடக்கப் பள்ளியில் தாய் மொழி கட்டாயம். அதன்பின் மலாய் ஆங்கிலமொழிகளுக்குச் சிறப்பிடம் தரப்பட்டிருந்தது. தொடக்கப்பள்ளியில் குறிப் பிட்ட மதிப்பெண்ணிற்குமேல் பெற்றவர்களுக்கே உயர்

நிலைப் பள்ளியில் படிக்க வாய்ப்புண்டு. அரசு, கல்வித் திட்டத்தை அப்படி வகுத்திருந்தது.

''பழமை மரபைப் பற்றியபடியே பல புதுமைகளை அங்குப் புகுத்தியிருந்தனர். தனி வாழ்வியல் பழக்க வழக்க ஒழுக்கங்களை விடச் சமுதாய வாழ்விற்கு உரிய தூய்மை, தொண்டு, அங்குப் பல வழிகளில் சிறுவர்களுக்கு உணர்த்தப் பட்டன.

''சிறுவர்களின் தமிழ்ப்பாட நூல் ஒன்றைப் போகிற போக்கில் புரட்டிப் பார்த்தேன். இன்றோ நாளையோ சாகக் கிடக்கும் வயதான முதியவன் ஒருவன் தன் தோட்டத்தில் தென்னை மரம் நடுவதையும், மாறு வேடத்தில் நகர்ப்புறச் சோதனைக்கு வந்த மன்னனும் அமைச்சனும் அந்த முதிர்ந்த வயதில் தென்னை நட்டுப் பயன் என்ன எனக் கேட்பதும், அதற்கு அந்த முதியவன் எனக்காக அல்ல என் வருங்காலச் சந்ததியார்க்கு என்று சொல்லிப் பணியில் ஈடு பட்டதாகவும் உள்ள நம் நாட்டுக் கதை அங்கும் அந்தப் பாடப்புத்தகத்தில் இருந்தது. ஆனால் இறுதியில் ஒரு மாற்றம் செய்யப் பெற்றிருந்தது. அந்த முதியவன் மறுநாள் அரசவைக்கு அழைக்கப் பெற்றிருந்தான். ஊர் மக்கள் அறிய மன்னன் அந்த முதியவனது பரந்த மனத்தையும், சிறந்த செயலையும் பாராட்டிப் பரிசுகள் வழங்கினான். என்றோ வரப்போகும் எதிர்காலப் பயனை நோக்கி இன்று தன்னலம் மறந்து பணிபுரிபவர்களைப் பாராட்டிப் பாதுகாக்க வேண்டும் என்ற சமுதாயச் சிந்தனை அந்தக் கதைவழியாக அங்கு சிறப்பாக உணர்த்தப் பெற்றிருந்தது. இங்குக் காந்தீயக் கல்வித்திட்டத்தில், பள்ளியில் மட்டுமே இத்தகு சமுதாய நோக்குச் செயல்படுகிறது. நூற்றுக்குத் தொண்ணூற் றொன்பது விழுக்காடுள்ள மற்ற தொடக்கப் பள்ளிகள் ஆட்டு மந்தைகளை அடைக்கும் கிடைகளாகத்தான் உள்ளன. என்ன செய்வது'' என்று பெருமூச்சு விட்டாள்.

''அங்கு வாழும் தமிழர்களுக்கு மொழி உரிமை, வாழ்வுரிமை உள்ளதா...? உங்கள் அனுபவம் என்ன...?'' என்று கேட்டேன்.

''அவ்வளவு குறை இல்லை. தமிழகத்துத் தமிழர்க்கு இருப்பதைவிட அதிக உரிமை இருப்பதாகத்தான் நினைக்கிறேன். சில நாட்கள்தான் அவர்களோடு இருந்தேன். அதை வைத்துக்கொண்டு முடிந்த முடிபாக எதுவும் கூறுவதற்கு இல்லை. சமுதாய சமத்துவம், அரசியல் செல்வாக்கு, மலேயர், சீனர் ஐரோப்பியர் இவர்களோடு தொழில் வாணிபப் போட்டி—இப்படி எத்தனையோ இடர்ப்பாடுகள் அங்குத் தமிழர்களை எதிர்நோக்கி உள்ளன. மெல்ல மெல்லத் தமிழர்கள் அங்குச் சாதனை புரிந்துகொண்டு வருகிறார்கள். ஆனால் ஒரே ஒரு குறைமட்டும் எனக்குப் புலப்பட்டது. அதுகூட நண்பர் கார்த்திகேயன், வாசுகி தம்பதியர் சிங்கப்பூர் கடற்கரை வீதியில் என்னை உலாவ அழைத்துச் சென்றபோது சொன்ன ஒரு நிகழ்ச்சியின் மூலம் புலப்பட்டது.

''பலர்! இதோ தெரிகிறதே ஒரு கட்டிடம் இது இப்போது துறைமுகத்தில் பணி செய்யும் மாரிமுத்து என்னும் ஒரு தமிழர்க்கு உரியது. ஏறக்குறை முப்பது வருடங்க்ளுக்கு முன் அவர் தமிழ்நாட்டு நாகப்பட்டணத்திலிருந்து வந்தார். அப்போது இந்த இடத்தில் சின்ன குடிசை ஒன்றில் ஒரு சீனக்காரி அப்பம், இட்டலி, வடை, ரொட்டி, தேநீர் விற்பனை செய்துகொண்டிருந்தாள். இந்த இளைஞன் துறைமுகத் தொழிலாளியாக வந்து பணி செய்து கொண்டிருந்தான். தங்குவதற்கு இடம் இல்லாததால் இந்தக் குடிசையிலே ஒரு புறம் இடம் பெற்றுக் கொஞ்சம் வாடகையில் தங்கிக் கொண்டான். நாளடைவில் அந்த அம்மாவின் மகள் சியோக் ஹுயி மாரிமுத்துவிடம் அன்பு கொண்டு, காதல் வயப்பட்டுத் திருமணமும் செய்து கொள்ள விழைந்தாள். அந்தச் சீனக்கார அம்மாவும் மாரிமுத்துவின் உழைப்புக்கும், உண்மைக்கும் மதிப்புக் கொடுத்துத்

திருமணம் செய்து வைத்தாள். ஒரு மகன் பிறந்தான். நன்றாக வளர்த்தனர். பாவம் விபத்து ஒன்றில் மாரிமுத்து இறந்து விட்டான். அரசு கொடுத்த பணத்தில் வறுமையில்லாமல் தாயும் மகனும் வாழ்கின்றனர். அந்தத் தாய்க்கு ஒரே ஒரு கவலை. தன் மகனுக்கு ஒரு தமிழ்ப் பெண்ணை மனைவியாக்க வேண்டும் என்பது. என்னிடம் கூட எடுத்துச் சொல்லி வருந்தினாள். சீனப் பெண், தமிழ்ப் பெண்கள் தான் குடும்பப் பாங்கு நிறைந்தவர்கள். அவர் தன் மகனுக்குத் தமிழ்ப்பெண்தான் மணம் செய்ய வேண்டும் என்பார். அவர் இறந்ததும் அது முடியாது போய்விட்டது. அவர் மனம் கெடாமல் ஒரு தமிழ்ப் பெண்ணை இவனுக்கு மணம் செய்யப் பார்க்கிறேன். இவன் சப்பை மூக்கையும், மஞ்சள் மேனியும் பார்த்து ஒரு தமிழ்ப்பெண்கூட ஒரு தமிழ் பெற்றோர் கூட முன்வரமாட்டேன் என்கிறார்கள்'' என்று நொந்து கொண்டாள். என்ற நிகழ்ச்சியை நினைத்த போது அயல் மண்ணில் வாழும் தமிழர்கள் அங்கு வாழும் அல்லது அவர்களைப்போல் பிழைக்க வந்து சேரும் பிற இனத்தோடு திருமணக் கலப்பு வைத்துக் கொள்ளாமை ஒரு குறையாக எனக்குப் பட்டது. சீனப் பெண்களை மணந்து கொண்ட ஐரோப்பியர்கள் பலரை அங்குச் சந்தித்தேன்; ஐரோப்பிய பெண்களை மணந்துகொண்டு வாழும் சீனர் பலரை அங்குப்பார்க்க முடிந்தது.

ஆனால் நான் சென்று பழகிய தமிழ்க் குடும்பம் ஒன்றில் கூட அப்படிப்பட்ட இனக்கலப்பைக் காண இயலவில்லை. மண்ணோடு மண்ணாகப் போகத் தமிழன் விரும்புவதில்லை. மண்ணில் கிடைத்த அளவு பொன் எடுக்க, எடுத்துக் கொண்டு திரும்பிவிடத்தான் தமிழன் விரும்புகிறான். செல்லம் தந்து தந்து வளர்க்கப் பெற்ற ஒரு பெண் தன் தாயைவிட்டு விலகாமல், விட்டுப் போக மனம் இல்லாமல், விட்டுப் பிரிந்து கணவன் வீடு சென்றாலும் தன் தாயை நினைத்து அடிக்கடி கணவன் வீட்டை விட்டு வந்துவிடுவது போல, சிலசமயம் கணவனையும் அவன் வாழும் செல்வக்

கான வாழ்வை, விட்டுப் பிரியச் செய்து, தாய்வீட்டுக்கே அழைத்து வந்துவிடும் புத்திகெட்டப் பெண்போலத் தமிழர்கள் அயல் மண்ணில் காலூன்றாமல், கருத்தூன்றாமல் அந்த மண்ணின் மைந்தர்கள் ஆகாமல் இருப்பதைப் பார்க்கிறேன். இதை நான் நியூயார்க்கிலும் பார்க்க முடிந்தது; இந்திய வம்சாவழியின் பலர் வாழும் இடங்களுக்கு எல்லாம் சென்ற போது தமிழர் தவிர பிற மாநிலத்தவர் ஒருவரோடு ஒருவர் திருமண உறவு கொண்டிருந்ததைப் பார்த்தேன். பன்னூறு ஆண்டுகளாகத் தோளோடு தோள் கொடுத்து உழைக்கும் இலங்கைத் தேயிலைத் தோட்டத்துத் தொழிலாளர் ஆகட்டும், இரவும் பகலும் இன்பத்திலும் துன்பத்திலும், அரசியல் கொள்கை வழி, செயல்பாடுகள் வழி ஆட்சி செய்யும் அரசியல் தலைவர்களிடம் ஆகட்டும் அறிவியல் அறிஞர்களிடம் ஆகட்டும் சமுதாயப் பணிபுரியும் இளைஞர்களிடம் ஆகட்டும் பன்னூறு ஆண்டுகளாக ஒன்றி வாழ்ந்தாலும் தமிழர் சிங்களவர் கொள்வினை கொடுப்பனை இல்லை என்பது உங்களுக்குத் தெரியுமா கார்மேகம்!''

''இதை எல்லாம் தனித்துவம்; பண்பாடு - என்று நாம் சொல்லி வருகிறோம். உண்மையில் இறைவன், இயற்கை சமத்துவத்தைத்தான், இனக் கலப்பைத்தான் போற்றுகிறான்; போற்றுகிறது. அங்கெல்லாம் சென்றபோது தமிழர்கள் அனைவரும் பண்போடு பாசத்தோடு எனக்கு உதவ முன் வந்தனர். ஆனால் அவர்களைவிட அங்கு வாழும் பிற இந்தியரும், சிறப்பாக ஐரோப்பிய இனத்தவரும் இந்த 'வள்ளுவர் குடிலுக்கு' - ஆற்றிவரும் உதவிகளை நான் மறப்பது எப்படி?

''கங்கையைப் போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம்'' என்றார் பாவேந்தர். ஆனால், அந்தக் கங்கைக்கும் காவிரிக்கும் ஏன், தேம்சுக்கும் வால்காவுக்கும்கூட அடிப்படையான நீரோட்டம், நிலவோட்டம், வானோட்டம் ஒன்றே ஒன்றுதானே? தமிழ்ப் பேராசிரியர் வெள்ளை வாரணம் அய்யா அவர்கள், தலைவியைப் பிரிந்து

அயல்மண் சென்று பணிமுடித்து மீளும் நிலையில் உள்ள நற்றிணைத் தலைவன் ஒருவன், ''ஏ நிலவே! அழகு நிலவே முழு வெண் நிலவே!... என் ஊருக்கு அருகில் அமைந்த குன்றின் மேல் உன் போலவே தோன்றும் என் நிலா ஒன்று உள்ளது - உனக்குத் தெரியுமா?'' என்று தலைவியை நினைந்து உருகும் காதல்பாட்டை அருளுணர்வோடு பாடம் நடத்தினார் நான் அடிக்கடி இப்படித் தெய்வீக நிலையில் அதனை எண்ணிப் பார்ப்பதுண்டு. எல்லோருக்கும் ஒரு நிலா; எல்லாருக்கும் ஒரு கதிர்; எல்லாருக்கும் ஒரு காற்று; ஒரு நீர்; ஒரு நிலம். அன்று எல்லைகள் குறுகிக் கிடந்தன— மானுடம் பிரிந்து வாழ்ந்தது-இன்று எல்லைகள் விரிவடைகின்றன; இனி இணைந்து வாழவேண்டும். அதுதான் இயற்கை; அதுதான் இறைநெறி; குழந்தைப் பருவத்தில் தைத்த சட்டை நல்லதென்றாலும் தாய்மாமனால் அன்போடு அளிக்கப் பெற்றது ஆனாலும் வளர்ந்து ஆன இப்போது அதைப் போட்டுக்கொள்ள முடியுமா? கண்காட்சியாக வைத்துக் காட்டலாம்; நினைவுச் சின்னமாக வைத்துப் போற்றலாம்-அவ்வளவுதான்''

''ஆம். மலர்! உண்மைதான்— நாம் எங்கு வாழ்கிறோமோ, எந்த உழவர் தரும் அரிசியைச் சாப்பிடுகிறோமோ, எந்த நெசவாளி தரும் ஆடையை உடுத்துகிறோமோ, அவர்கள் வாழ்வு வளமுற, அவர்கள் மனம் நலமுற உதவி, உழைத்து வாழவேண்டும்; அதுவே சுதேசியம் என்று காந்தி எங்கேயோ கூறியுள்ளார். இந்தச் சுதேசிய வாழ்வு இந்த நூற்றாண்டில் அயல்மாநிலத்தில் அயல் நாட்டில் வாழும் தமிழன் தவறாமல் கற்றுக்கொள்ள வேண்டும். ஆந்திர மாநிலத் தமிழர் பலர் அரசு வேலை வாய்ப்பில் பின்தங்கிப் போயினர். காரணம் அவர்கள் தெலுங்கு மொழிக் கல்வி பெறாததே என நாங்கள் சிலர் அறிந்தோம். ஆந்திர அரசோடு கலந்து பேசினோம்—

தெலுங்கைத் தாய்மொழியாகக் கல்லாத பிறமொழியினர் தெலுங்கில் மொழி அறிவு பெறுமாறு பள்ளிப் பாடத் திட்டத்தில் வழிவகை செய்தோம். அதனால் தங்கள் தாய் மொழிக் கல்வியாய்த் தமிழை இழக்காமல் தெலுங்கு கற்று ஆந்திர அரசுப் பணி வாய்ப்புக்கு உரியவராகத் தமிழர் அங்கு விளங்குகின்றனர்''...

சிற்றுண்டி அழைப்பு மணி ஓசை காலை மென்காற்றில் அதிர்ந்தது.

''ஆ! கார்மேகம்! பேச்சியில் உங்கள் பசியை மறந்து விட்டேன். வாருங்கள் என்று தன் குடிசைக்கு என்னை அழைத்துச் சென்றார்.

குடிசையின் உட்புறத்தை நோட்டமிட்டேன். கண்ணன் கதையை அருச்சுனனுக்குச் சொல்வது போன்ற ஓவியமும் திருவள்ளுவர் உலகமக்களுக்குக் குறளை உபதேசிப்பது போன்ற ஓவியமும் மாதா அமர்ந்திருக்கும் மேடைக்குப் பின்னே இருந்தன. ஏறக்குறைய 12 அடி அகலமும் 24 அடி நீளமும் உள்ள அந்தக் குடிசையின் முன்புறம் 12 சதுர அடி இருக்கும். அடியார்கள் வந்து அமர்ந்து உபதேசம் பெறுவ தற்கு ஏற்ப, பாய் பரப்பப் பெற்று அமைந்திருந்தது. பின்னிருந்த 12 அடி சதுரத்தின் மையப் பகுதியில் ஆறடி நீளம் நான்கடி அகலமுள்ள ஒரு மேடை; அதில்தான் மாதா அமர்ந்திருந்தார். அதுவே படுப்பதற்கும் ஏற்றவாறு அமைக் கப்பட்டிருந்தது. அந்த மேடைக்குக் கீழே உள்ள பகுதி ஒரு குகைபோல் உள்ளீடின்றிக் கூடாக அமைக்கப் பெற் றிருந்தது.

அருகில் ஒரு மூங்கில்; அதில் ஒரு மஞ்சள் வண்ண அங்கி, ஒரு புடவை மடித்துத் தொங்கிக் கொண்டிருந்தன. வேறு பாய்; பஞ்சுப்படுக்கை, தலையணை எதுவும் இல்லை... மதுரை மீனாட்சியம்மை அறங்காவலர் குழுத் தலைவர்

நீலகண்டனாரின் மகள், திருநெல்வேலி தாமிரபரணிக் கரையில் அமைந்த பல ஏக்கர் நிலத்துக்குரிய ஒரே பெண் ஆங்கில இலக்கியப் பேராசிரியை; பெரிய போலீசு அதிகாரியின் மனைவி இப்படிச் செல்வச் செழிப்பில் தவழ்ந்த இந்த மலர் எல்லாவற்றையும் இழந்து மணிமேகலைபோல் நின்றாள். அத்த அறச்செல்வி இப்படித்தான் தோன்றியிருப்பாள் என்று சாத்தனார் பாடிய மணிமேகலையோடு மாதாவான மலரை மனக்கண்ணால் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டேன்.

திடீரென்று குடிசையின் பக்கக் கதவு திறந்தது. ஒரு கையில் ஆவி பறக்கும் இட்டலித் தட்டு இன்னொரு கையில் பெருங்காய மணங்கமழும் தேங்காய்த் துவையல் நிறைந்த கிண்ணியும் ஏந்திக்கொண்டு மாதா வந்தார்.

''சூடாகச் சுட்டுஎடுத்துவர நேரமாகிவிட்டது. இட்டலி உண்டு எத்வனை நாள் ஆகிவிட்டதோ! உண்ணுங்கள்!'' என்று தட்டு நிறைந்த இட்டலியையும் துவையல் கிண்ணத்தையும் என்முன் வைத்துவிட்டு மேடை அருகில் வைத்திருந்த பானையிலிருந்து ஒரு குவளைத் தண்ணீரை மொண்டு வைத்தார்.

குனிந்து உண்டு கொண்டிருந்த நான் தலையைத் தூக்கிப் பார்த்தேன். நான் ஆசையோடு உண்பதை ஆர்வத்தோடு என் தாயைப்போல் மாதா பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

''நீங்கள் உண்ணவில்லையா?'' கேட்டேன்.

''ஓ! எனக்கு ஏதோ பால்கஞ்சி இருக்கிறதே!'' என்று கலகல எனச் சிரித்துக் கொண்டே பால் கஞ்சி இருந்த கிண்ணி ஒன்றை எடுத்து என் முன் வைத்துக்கொண்டு சின்னக் கரண்டியால் சிறிது சிறிதாக எடுத்து வாயில் இட்டு, மெல்ல மெல்லச் சுவைத்து உணடு கொண்டிருந்தார்.

அதில் ஒரு கரண்டி வாங்கிச் சுவைத்துப் பார்த்தேன். சர்க்கரையே இல்லை. உப்பு கூட போட்டதாகத் தெரிய வில்லை.

என் முகம் போன போக்கைப் பார்த்து மீண்டும் கலகல என்று சிரித்துக்கொண்டே. ''தமிழகத்துக்கு வினோபா வந்தபோது நானும் என் தந்தையாரும் ஒரு நாள் காலை யில் சென்று விட்டோம். இப்படித்தான் ஒரு குவளை உப் பில்லாத கஞ்சியைக் குடித்துவிட்டு ஊர் உலகம் எல்லாம் நடந்து திரிந்தார்.''

மு.வ. விடம் இருந்தீர்களே. அவர் சொல்லியிருப்பாரே! காரம், புளி, மசாலா—எல்லாம் நாவிற்கு மனிதன் தரும் இலஞ்சமாம். உடம்புக்குஒவ்வாஉணவுகளை நாவை ஏமாற்றி உள்ளே அனுப்புவதற்காக மனிதன் தரும் இலஞ்சமாம். ஒத்த உணவுகள் உப்பு காரம் இல்லாதபோது நாவும் பல்லும் உமிழ் நீரோடு கூட்டிப் பிசைந்து குழைத்த அந்த உணவில் உள்ள, தானியங்களிலுள்ள சர்க்கரையைவெளிக்கொணர்ந்து சுவையாக்கி உள் அனுப்புமாம். அதாவது தேடிவந்த, அன்பான, நல்ல விருந்தினரை வாயிலுக்குச் சென்று முகமன் கூறி அளவளாவிக்கொண்டே வீட்டிற்கு அழைத்து வருவது போன்றதாம் அது. அதற்கு மாறாகக் கள்வர்கள், கயவர்கள் வேற்றுடையில், மாற்றுச் சூழலில் திடீர் என்று உள்ளே புகுவது மசாலா உணவுகளாம்—மு.வ. அடிக்கடி கூறுவார்.'' அந்த வினோபா கஞ்சியை மறவாமல் நினைவில் கொண்டு பின்பற்றியது. எண்ணிப்போற்றினேன். மீண்டும் சுக்கு வெந்நி; அண்ணன் இளமுருகு இல்லத்தில் அவ்வப் போது குடிக்கும் அதே சூடு; அந்தச் சுவை.

''சிரித்துக்கொண்டே, 'எங்கே இருக்கிறீகள்?' என்ன செய்கிறீர்கள்? திருமணம் ஆகிவிட்டதா? அம்மா, தங்கை நலமாக இருக்கிறார்களா?, என்று வினாக்களை அடுக்கிக் கொண்டே போனார். முன்பே கேட்டேன்...''

''உம். அம்மா தங்கை...'' என்று இழுத்தேன்.

''உம். உங்களைப்பற்றி அப்போது, எல்லாம் நான் அறிந்துகொண்டேன், சித்தப்பா தங்கள் பண்பாடுபற்றி, அறிவு பற்றி, ஆற்றல் பற்றி, காப்பிகூட குடிக்கமாட்டீர்கள் என்பது பற்றி, அடிக்கடி என்னிடம் சொல்லியிருக்கிறார். காந்திகுடிலுக்கு வந்த அத்துணைபேரில் முழு வளர்ச்சி, அதாவது அறிவு, ஆற்றல், உணர்ச்சி என்னும் மூவகையிலும் ஒருமித்த வளர்ச்சி பெற்றவர் நீங்கள்தான் என்று சித்தப்பா பலமுறை பாராட்டி என்னிடம் கூறியுள்ளார்.''

''ஆமாம். அம்மா இறந்துவிட்டார்கள். தங்கையை ஒரு தமிழாசிரியர்க்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். சித்தூர் அரசினர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளனாகப் பணிபுரிகிறேன். நண்பர் பலர் இப்படி வடநாட்டுப்பயணம் ஒன்று புறப்பட்டனர். நானும் வந்தேன். இந்த வடகோடியில், இமயச் சாரலில் தமிழகத்துப் பெண் 'வள்ளுவர் குடில்' வைத்துக் கைவிடப்பட்ட சிறார்களையும், முதியோர்களையும் காத்து, திருக்குறளைப் பகவத் கீதையோடு பரப்புவது கேட்டு யார் இந்தப் பெண்?' என்று அறிய வந்தேன்...''

''உம் அறிந்து கொண்டீர்களா? யார் இந்தப்பெண்? அன்றொருநாள் இரவு பன்னிரெண்டு மணிக்கு மழைச் சாரலில் மாட்டுவண்டியில் நாய்கள் குரைப்பது கேட்டு அஞ்சி உங்கள் கைப்பற்றினாளே சிறுமி ஒருத்தி, அவளா இவள்?

தண்டபாணி தேசிகர் திருக்குறள் உரைவளம் நூல் வெளியிட்டின்போது மு.வ.வைக் காணத்தான் விரும்பிய இளைஞன் திரு. அருளோடு ஓடிவந்து அருகில் நின்றாளே மங்கை ஒருத்தி அவளா இவள்?

அருள் மறுக்கவே திருமணமே வேண்டாம் என்று தமிழகத்தையே துறந்து, அருள் பழகிய இடங்களை எல்லாம் துறந்து தில்லியில் வாழ வந்தபோது சென்னையில் சித்தப்பா

வோடு மு.வ.வைக் காணவந்தபோது தாங்கள் கண்ட கன்னி ஒருத்தி தானா இவள்?

பல்லாண்டுகளுக்குப் பிறகு உட்லண்ட்சு ஓட்டலில் அப்பா அம்மா வற்புறுத்தலை ஏற்று மனம் ஒன்றா ஒருவர்க்கு மாலையிட்டு மருண்டு நின்ற மணப்பெண்ணா இவள்?

மணமுறிவு பெற்றுச் செய்வதறியாது அயல்நாடு சென்று சுற்றித்திரிந்த அனாதை தானா இவள்?

இவள் யார்-என்று தெரிந்து கொண்டீர்களா? தெரிந்து கொண்டீர்களா கார்மேகம்? என்று சொல்லிக் கலகல, கல கல என்று குடிசையெல்லாம் கூத்தாட வாய்விட்டுச் சிரித்தார்.

அவர் சிரிக்கச் சிரிக்க நான் அழ ஆரம்பித்தேன். கண்கள் கலங்கின—தொண்டை அடைத்துக் கொண்டது. மூச்சுத் திணறியது.

தன் சிரிப்பை நிறுத்திவிட்டு எழுந்தோடி வந்து கொஞ்சம் தண்ணீரை எனக்கு ஊட்டி முதுகைக் தடவிக் கொடுத்தார்.

''உம்-அம்மா இறந்துவிட்டார். தங்கை கணவன் வீட்டிற்குப் போய்விட்டார். நீங்கள் சித்தூரில் யாருடன்? மனைவி யார்? மக்கள் எத்தனைபேர்?''

''மனைவியா? மக்களா? தமிழ்த்துறைதான் என் மனைவி. மாணவர்கள்தாம் என் மக்கள்.''

''என்ன? அப்படியானால் திருமணம் செய்துகொள்ளவில்லையா? அருள் திருமணத்தை மறுத்தபிறகு சித்தப்பா பலமுறை தங்களைப் பற்றிப் பேசியதன் உள்நோக்கத்தை

நான் அறிவேன். மு. வ. வழி தங்களைப் பற்றி அறிந்து அவர் கூறியன எல்லாம் என் நினைவில் உள்ளன. உம்! திருமணமே செய்துகொள்ளவில்லையா?'' என்று ஒரு பெரு மூச்சுவிட்டார்.

''ஓ! உங்கள் மனக்காதலி கிடைக்காததால் குடும்ப வாழ்வே வேண்டா என்று துறந்து விட்டீர்களாக்கும். அம்மா உயிரோடு இருந்திருந்தால் எனக்குக் கட்டிவைத்ததுபோல் உங்களுக்கும் யாராவது ஒருத்தியைக் கட்டி வைத்திருப்பாள்; ஆ! ஆ! ஆ!'' என்று மீண்டும் சிரிக்கத் தொடங்கிவிட்டார். மீண்டும் தொடர்ந்தார்...

''கார்மேகம்! இங்கு நான் மாதா-கைவிடப் பெற்ற குழந்தைகளுக்கு எல்லாம் தாய்; தந்தையும் நானே. முதியோர்களின் மகள்; மகனும் நானே; அன்றாடம் வரும் யாத்ரீகர்களின் தோழி, தோழன், குரு வழிகாட்டியாகவும் இருக்கிறேன் நான். இங்குள்ள காவல்காரர்களின் தலைவி நான். வேலைக்காரர்களின் எஜமானி நான். இப்படித் தாயாய், தந்தையாய், மகளாய், தோழியாய், தோழனாய், குருவாய், வழிகாட்டியாய், தலைவியாய், எஜமானியாய் வாழும் இந்த நான் தங்களால் காதலியாகக் கருதப்படுவதில் தவறு ஒன்றும் இல்லை.

இந்த 'நான்' என்பதற்கு உடல் இல்லை; ஆண் பெண் என்னும் பேதமில்லை; அறிந்தோன்-அறியாதவன் என்ற வேறு பாடில்லை. அவன், நீ என்ற படர்க்கை முன்னிலை இல்லை; அங்கு, இங்கு என்னும் இடங்கள் இல்லை. அன்று, இன்று என்னும் காலம் இல்லை. இப்படிப்பட்ட இந்த 'நான்' காதலியாய், காதலனாகவும் இருக்கக் கூடியதே. விரும்பி னால் இன்றிலிருந்து இங்கேயே என்னோடு தங்கிவிடலாம். இந்த உண்மை விளக்கப் பணிக்குத் தங்களைப் போன்ற ஓர் உண்மையான ஊழியர் எனக்குத் தேவை. இந்த 'வள்ளுவர் குடிலை' சிறப்பாக வளர்த்து அதன்வழி உண்மையை,

வள்ளுவத்தை உலகறியச் செய்யவேண்டும். இப்போதைக்குக் கீதையுடன் சேர்த்தே இதனைப் போதித்து வருகிறேன். இந்தக் குடிகளுக்கு வேண்டிய பொருள் உதவியை அயல் நாட்டில் வாழும் நண்பர்கள் செய்து வருகிறார்கள். வாருங் கள் இந்தக் குடிலைச் சுற்றிக் காட்டுகிறேன். இதன் பணி கள் பற்றி இவ்வளவு தூரம்வந்த நீங்கள் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும். இதன் வளர்ச்சிக்கு உரிய தங்கள் கருத்துக்களை அப்போதுதான் தரமுடியும்' என்று என்னை அழைத்துக்கொண்டு முதலில் முதியோர் இல்லத்துக்குப் போனார்.

அங்குப் பல மொழியினர், பல நாட்டினர் வாழ்ந்து வந்தனர். செல்வர், வறியர், கற்றவர், கல்லாதவர், பெரும் பதவியில் இருந்தவர்கள், எந்தப் பதவியும் வகிக்காதவர் இப்படிப் பலதிறத்தினர் அங்கு இருந்தனர். அவர்கள் யாரிட மும் பொருள் நாடுவதில்லை என்றும் சிலர் தாங்களாகவே நன்கொடை தந்துவிட்டுச் சேருகின்றார்கள் என்றும் சொன் னார்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு தனி அறையில் இருந்தனர். நல்ல படுக்கை, மின்விசிறி, குளியலறை, வெந்நீர் வசதி மேசை நாற்காலி-எல்லா வசதிகளும் இருந்தன. அருகில் மாதாவின் குடிசைபோல் சில குடிசைகளும் காணப்பட்டன. அதுபற்றிக் கேட்டேன்.

''என் குடிசையைப் பார்த்த பிறகு சிலர் அப்படியே தங்களுக்கும் வேண்டும் என்று கேட்டுக் கட்டிக் கொண்டுள்ள னர். மண்ணும் கல்லும் மூங்கிலும் பனைமட்டையும் கொண்ட இந்தக் குடிசைகளின் எளிமை அவர்களைக் கவர்ந் துள்ளது.

எளிமைதான் எவ்வளவு இன்பம். எளிமை மனதுக்கு உரிமை மிகத் தருகிறது. பல அடிமைத் தளைகளிலிருந்து

அவன் விடுபடுகிறான். மின்சாரம் நின்றுபோனால் அவனுக்குக் கவலை இல்லை. அவனுக்காக வண்ணார் துணி துவைக்க வேண்டா. ஏனெனில் இரண்டே ஆடைகள். குளிக்கும்போதே ஒன்றைத் தோய்த்துவிடுகிறோம். எளிமையுடையவர்தான் அறவோராக வாழ முடியும், அருளாளராக வாழமுடியும். கண்ணன் ஓர் மாட்டிடையன்; இயேசு ஒரு மேய்ப்பர். இராமானுஜர் அன்றாடம் பிச்சை ஏற்று வாழ்ந்தவர். காந்தி எளிமையின் உரு. அறவழி வாழ், அளவறிந்து உண், ஒழுகு-என்று வள்ளுவர் வற்புறுத்துவதெல்லாம் இந்த எளிமையையே. வேண்டாமை என்னும் விழுச்செல்வம் இது. பொன்னை உயர்வை புகழை விரும்பிடும் சின்னக் கவலைகளிலிருந்து நமக்கு விடுதலை தருவது இதுவே... என்று ஒரு குடிசைக்கு அழைத்துச் சென்றார்.

இங்கே கல்வி இயக்குநராயிருந்து ஓய்வு பெற்ற சீன அம்மையார் வாழ்கிறார்-என்றும் பார்த்தேன். மாதாவின் குடிசையில் உள்ளதுபோல் 12 அடி சதுர அளவு கொண்டது அது. நடுவில் ஆறடி நீளம் நான்கடி அகலத்தில் ஒரு மேடை. இது மூன்று புறம் சுவர்களாலும் மேலே ஒரு கடப்பைக் கல்லாலும் அமைக்கப்பட்டிருந்தது. கோடைக் காலத்தில் மேடையிலும், குளிர்காலத்தில் மேடையின் கீழ் குகை போலிருந்த அந்தச் சின்னஞ்சிறு அறைப் பகுதியிலும் உறங்குவதற்கு ஏற்ப அது அமைக்கப்பெற்றிருந்தது. வியந்து நின்றேன்.

''என்ன கார்மேகம்! அப்படியே நின்று விட்டீர்கள்? வாருங்கள்! சிறுவர் இல்லத்தைக் காண்போம்'' என்று அங்கு அழைத்துக்கொண்டு போனார். அங்கே வளர்ந்து வந்துள்ள கல்வி அறிவியல் கருவிகள் எல்லாம் அமைத்திருந்த கல்விக் கூடத்திற்கு அழைத்துச் சென்றார். குழந்தைகளின் புலன்களைப் பண்படுத்திக் கூர்மையாக்குதலே கல்வியின் அடிப்படை; முதலில் இங்கு அந்தக் கல்விதான் தரப் பெறுகிறது. புத்தகம் கிடையாது. நோட்டு கிடையாது... காண்பது,

கேட்பது, தொடுவது, சுவைப்பது, ஒலிப்பது—இவற்றில் இங்குள்ள சிறுவர்களுக்கு இந்த அறிவியல்கருவிகள் துணை யுடன் பயிற்சியளிக்கப் பெறுகிறது. இந்த மலையடிவாரம் முழுதும் இவர்கள் பள்ளிக்கூடம் என்று சொல்லிவிட்டு, அங்கிருந்த ஓரிரு முதியவருக்கு வணக்கம் கூறி எனக்கு அறிமுகப்படுத்தினார். தோட்டப் பகுதிகளுக்குப் போனோம். அது துளசிவனம், வேர்ட்ஸ்வெர்த் ஏரி, ஆண்டாள் கேணி இப்படிப் பல சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வியப்போடு மாதாவைப் பார்த்தேன்.

''புன்னகையொன்று அரும்பியது. ''கார்மேகம்! ஏன் இப்படி பாகப் பிரிவினை என்று கேட்கிறீர்களா? இங்குத் தோட்டம் வளர்ப்பது நோக்கம் அல்ல. பூஞ்சோலை உண்டாக்குவது நோக்கம் அல்ல. காய்கறிகள் பயிர் செய்வது நோக்கம் அல்ல. அதோ பசு பராமரிப்புத் தொழு வங்கள் உள்ளனவே அவை பசு பராமரிப்பை நோக்கமாகக் கொண்டு எழுந்தன அல்ல. அவையெல்லாம் இங்கு வாழு கின்ற முதியோர்க்காகவே ஏற்படுத்தப்பட்டன.

''அப்பா அம்மாவை இழந்து, அண்ணன் தம்பியால் அலட்சியம் செய்யப்பெற்று, மகன் மகளால் ஒதுக்கி வைக்கப் பெற்று, கொண்டவன் கொண்டவளால் புறக்கணிக்கப் பெற்ற அந்த முதியவர்களுக்கு வெறும் உணவு உறைவிடம் தந்தால் போதாது. அவர்கள் இந்த வயதில் பெரிதும் விரும்புவது தங்களிடம் அன்பு செய்ய ஓர் ஆத்மா. தாங்கள் அன்பு செய்ய ஓர் ஆத்மா. இதனைத் தரத்தான் இந்தக் குடில் பெருமுயற்சி எடுத்து வருகிறது.

சிலர்க்குக் கற்பதில் ஆர்வம்; அவரவர்க்கு ஏற்ற நூல் கள் கொண்ட நூல் நிலையம் இங்கு உள்ளது. சிலர்க்கு அடித்து, அன்பு செய்ய ஆசை. அவர்களுக்காகவே பசு பராமரிப்புத் தொழுவம் உள்ளது. அப்படியே சிலர்க்கு மரம் வைத்து வளர்க்க ஆசை. எதிர்கால உலகில் நம்பிக்கை

உள்ளவர்கள் அவர்கள். சிலருக்குக் கீரைப் பாத்தி போட ஆசை. இப்போதே இங்கேயே எல்லாவற்றையும் கண்டு அனுபவிப்பவர்கள். சிலருக்குக் குழந்தைகளுக்குக் கதை சொல்ல ஆசை. சிலர்க்குப் பூ வைத்துப் பின்னிவிட ஆசை. இப்படி அன்பு காட்டும் ஆசை பலவற்றுக்குப் போக்கீடாகத் தான் பிற செயல்கள் இங்கு இடம் பெற்றுள்ளன என்று காட்டிக்கொண்டே வந்தார். என் கடிகாரத்தைப் பார்த்தேன். 10 மணி ஆகியிருந்தது. நான் சொன்ன நேரத்தில் அங்கு வரவில்லை என்று பயணப் பேருந்தோடு என்னுடன் வந்த நண்பர் சிலர் என்னைத் தேடி வந்துவிட்டனர்.

என்ன செய்வது-என்ன சொல்வது என்று தெரியாமல் சிறிது தடுமாறினேன். என்னை அழைக்க வந்தவர்களை அறிமுகப்படுத்தினேன்.

''ஓ! போகப்போகிறீர்களா? உடனே போக வேண்டுமா?'' என்று ஏதோ தாயை, தந்தையைப் பிரியும் குழந்தை போல ஏக்கத்தோடு கேட்டார்.

நகரியில் என்னை நம்பி உருவாகிக் கொண்டிருக்கும் ''பாரதியார் பல்கலைச் சிறுவர் இல்லம் பற்றியும் அங்கு உருவாகப்போகும் குழந்தைகள் பற்றியும் கூறினேன்.

''ஓ! உங்களை, அப்போ, இங்கே, நான் நிறுத்தி வைக்க முடியாது. பாரதியார் பல்கலைச் சிறுவர் இல்லம்— நல்ல பணிதான். செல்லுங்கள்; செய்யுங்கள். இந்தச் சின்னஞ் சிறியாள் மேற்கொண்டுள்ள இந்த 'வள்ளுவர் குடில்' வாழ, வளர ஒரு முறை வாயார வாழ்த்தி விட்டுச் செல்லுங்கள். இவளுக்கு இந்தப் பணியில் இங்கு உதவுவீர்கள் என்று இரவெல்லாம் என்னென்னவோ மனக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தேன்'' என்று சொல்லும்போதே மலரின், இல்லை மாதாவின் தொண்டை கரகரத்தது; கண்ணீர் ததும்பி இமைகளில் தேங்கி நின்றது.

''நானே முன்நின்று தூண்டி இப்படி ஒரு சிறுவர் இல்லத் தோற்றத்திற்குக் காரணமாகி விட்டேன். நான் அங்குப் போகாவிடில் அந்தப் பணி இடையிலேயே நின்று போய்விடும்; தோற்றுவித்துவிட்டுச் சில ஆண்டுகளில் இங்கு வந்து விடுகிறேன்—அதுவரை......'' என்று என் வார்த்தையை முடிக்கும் முன்னேயே,

''அதுவரை என்ன!', என்று ஆர்வத்தோடும், ஆதங்கத்தோடும் என்னை நோக்கினார்.

''அதுவரை என்ன? ஆயுள்வரை காத்திருப்பேன். அடுத்து அடுத்துவரும் பிறவிகள் எல்லாம் காத்திருப்பேன்—வாருங்கள் கார்மேகம்! வாருங்கள்!!''... என்று என்னை இப்போதைக்கு வழியனுப்புவது போல் இருந்தது அந்த ஆழ்ந்த நோக்கு.

(முற்றும்)

இந்நூலாசிரியரைப் பற்றி.

பிறப்பு : 6-10-1932

63-அகவையரான இந்நூலாசிரியர் டாக்டர் **பொன் சௌரிராசனார்** திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் பல்லாண்டு பணி செய்தவர்; சிறந்த எழுத்தாளர்; ஆராய்ச்சி, கவிதை, புதினம், சிறுகதை முதலிய நூல்கள் இருபத்தைந்துக்கு மேல் எழுதியவர். இவர் தம் முதல் நூல், **'கட்டுரை மணிகள்'** தமிழ் வழங்கும் இந்தியக் கல்விக் கழகம் பலவற்றில் பாட நூலாகும் சிறப்புப் பெற்றது. குழந்தைக் கவிதைத் தொகுப்பு, **'மழலை மலர்கள்'** தமிழகத் தொடக்கப் பள்ளிகளுக்கெனத் தமிழக அரசால் ஏற்கப் பெற்றது. புதினங்களுள் ஒன்றாகிய, **'தாயகம்'** தமிழக அரசின் முதற் பரிசைப் பெற்றது. இவர்தம் சிறுகதை களில் சில மொழி பெயர்க்கப் பெற்றுத் தெலுங்கு, கன்னட இலக்கிய ஏடுகளில் வெளிவந்துள்ளன. கல்வி, இலக்கியக் கழகம் பலவற்றில் உறுப்பினராக, தலைவராக, செயலாளராகத் தமிழக இந்திய அளவில் அமைந்து கல்விச் சிந்தனையும், செயற்பாடும் வளர உதவியவர்.